# சி. ஆர். ரெட்டி

டி. ஆஞ்சநேயுலு



இந்திய இலக்கியச் சிற்பிகள்

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# சி. ஆர். ரெட்டி


ஆசிரியர் :

டி. ஆஞ்சனேயுலு

தமிழாக்கம் :

ந. சுப்பு ரெட்டியார்



சாகித்திய அக்காதெமி

புது தில்லி

Dr. C. R. REDDY—Tamil translation by N. Subbu Reddiar of D. Anjaneyulu's English monograph. Sahitya Akademi, New Delhi, 1981. Price Rs. 4-00.

© SAHITYA AKADEMI, NEW DELHI
First Edition : 1981

Copies available from:
SAHITYA AKADEMI
Rabindra Bhavan, New Delhi-110 001
Regional Offices:
29, Eldams Road, Madras-600 018
Rabindra Sarobar Stadium, Block V-B, Calcutta-700 029
172, Mumbai Marathi Grantha Sangrahalaya Marg,
Bombay-400 014

Published by Sahitya Akademi, New Delhi and
Printed at Rajsri Printers, 156, Avvai Shanmugam Road,
[Lloyds Road], Madras-600 086.

# நன்றியுரை

**ப**ல்லாண்டுகளாகவே என்னைக் கவர்ந்த ஒரு பொருள்பற்றி எழுதுமாறு ஊக்கம் அளித்த சாகித்திய அக்காதமிக்கும்;

மிகச் சிறந்த நிறுவனமாகத் திகழும் புது தில்லி நேரு நினைவு அரும்பொருள் காட்சியகம்—நூலகம் இவற்றின் ஒரு பகுதியாகிய ஆயப்புரையில் (archives) டாக்டர் சி. ஆர். ரெட்டியவர்களின் ஏடுகளைப் பார்வையிடுவதற்கு இசைவு தந்த அந்த நிறுவனத்தின் இயக்குநர் திரு. பி. ஆர். நந்தா அவர்கட்கும்; ஆயப்புரையின் இயக்குநர் திரு. வி.சி. ஜோஷி அவர்கட்கும்;

டாக்டர் சி. ஆர். ரெட்டியின் கவிதைக்குத் தாம் எழுதியுள்ள ஆழ்ந்த உரைப் பகுதிகளைப் பயன்படுத்திக்கொள்ள இசைவு தந்த ஐதரபாத் உஸ்மானியப் பல்கலைக் கழகத் தெலுங்குத்துறைத் தலைவர் டாக்டர் டி.வி. அவதானி அவர்கட்கும்; சென்னையிலுள்ள திரு. கே. சி. தாசரதி அவர்கட்கும்;

பல்வேறு வழிகளில் தவறாது துணை செய்தும் யோசனை கூறியும் உதவிய ஐதராபாத்தைச் சார்ந்த எழுத்தாளரும் இதழாசிரியருமான திரு என். இன்னய்யா அவர்கட்கும்;

தம்முடைய கருத்துகளை என்னுடன் பகிர்ந்துகொண்ட ஐதரபாத் தெலுங்கு அக்காதெமி ஆய்வு அலுவலர் டாக்டர் ஏ. இரமாபதி ராவ் அவர்கட்கும்;

தம்முடைய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் எனக்குப் பகிர்ந்தளித்த '**சோவியத் நாடு**' என்ற இதழில் பணியாற்றும் திரு. சி. இ. ராவ் அவர்கட்கும்;

டாக்டர் சி. ஆர். ரெட்டியின் நெஞ்சளவு ஒளிப்படத்தை எனக்கு நல்கிய தெலுங்கு பாஷா சமிதியைச் சார்ந்த திரு. பி. சுப்பராயன் அவர்கட்கும்;

இந்த ஒப்படைப்பினை விரைவில் நிறைவு செய்யுமாறு அடிக்கடித் தூண்டிய என் துணைவி ஹேமலதாவுக்கும்;

மேலட்டைப் பக்கங்களை அணி செய்யும் டாக்டர் சி. ஆர். ரெட்டியின் அழகிய உரு விளக்கப் படத்தை நல்கிய திரு. பி.டி. சர்மா அவர்கட்கும்;

இறுதியாக,

என்னுடைய கைப்படியை மிகத் திருத்தமாகத் தட்டச்சு செய்த திரு. கே. எஸ். பாலசுப்பிரமணியம் (சென்னை), திரு. ஆர். ஆர். சாலோத்ரா (தில்லி) ஆகியோருக்கும்;

என் இதயம்கனிந்த நன்றி உரித்தாகும்.

புதுதில்லி
மே, 1973

டி. ஆஞ்சனேயுலு

# உள்ளுறை

பக்கம்


| | | |
|---|---|---|
| | நன்றியுரை | iii |
| 1. | அறிமுகம் | .. 5 |
| 2. | இளமை வாழ்க்கை | .. 7 |
| 3. | சென்னையிலும் கேம்பிரிட்ஜிலும் | .. 10 |
| 4. | பரோடாவிலும் மைசூரிலும் | .. 14 |
| 5. | அரசியலில் பாய்ச்சல் | .. 19 |
| 6. | துணை-வேந்தர் | .. 22 |
| 7. | கவிஞர் | .. 27 |
| 8. | திறனாய்வாளர் | .. 40 |
| 9. | கட்டுரையாளர் | .. 57 |
| 10. | சமூக அறிவியலறிஞர் | .. 64 |
| 11. | வரலாற்று நிகழ்ச்சிகளின் சிற்பி | .. 69 |


**பின்னிணைப்புகள்**


| | | |
|---|---|---|
| 1. | டாக்டர் ரெட்டியவர்களின் வாழ்க்கையில் முக்கிய நிகழ்ச்சிகள் | .. 76 |
| 2. | செயல்வழியில் இலக்கியம் | .. 77 |
| 3. | பயன்பட்ட நூல்கள் | .. 83 |

இயல் ஒன்று

# அறிமுகம்

**தெ**லுங்கு மொழியின் பிற்கால வளர்ச்சியில் அதிகமாக வடமொழிக் கலப்பு ஏற்பட்டிருப்பினும், அம்மொழி அடிப்படையில் திராவிட மொழி இனத்தைச் சார்ந்ததாகும். இந்திய, அயல் நாட்டு ஒப்பியல் மொழி அறிஞர்கள் கண்ட முடிவுக்கு மதிப்பு தருவதாக இருந்தால், இந்த உண்மையை மறுத்தற்கில்லை. தம்முடைய அணுகு முறையில் விருப்பு-வெறுப்பற்றவர்களாகவும், அறிவியல் அடிப்படையில் ஆய்வினை மேற்கொள்பவர்களாகவும் இருப்பவர்கள் இக்கருத்தில் நம்மிடம் எவ்வித ஐயத்தையும் விளைவிப்பதில்லை. வரலாற்றுத் தொலைத் தோற்றத்தை அடிக்கடி மாற்றும் இயல்பான குறுகிய மன உணர்ச்சிக்கு இடங்கொடாதவர்கள் என்று எதிர்பார்க்கப் பெறுபவர்களன்றோ இவர்கள்?

எழுத்து வடிவம் பெற்ற தெலுங்கு இலக்கிய வரலாற்றின் காலம் கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகட்குட்பட்டதாயினும், அதனுடைய நவீன காலம் நூறுண்டுகட்குச் சற்று அதிகமான காலமே யாகும். பத்தொன்பதாவது நூற்றுண்டின் பிற்பகுதியில் இக்காலம் தொடங்கியதாகக் கொள்ளலாம். மூன்று அல்லது நான்கு பெயர்கள், தம் காலத்திலும் அதற்கடுத்த காலத்திலும், வாழ்ந்தவர்களின் மனத்தில் தம்முடைய தாக்கத்தினுல் தனித்து நிலைபெற்றுள்ளனர்.

சி. பி. பிரௌன் என்ற ஆங்கிலப் பெருமகனுரும், அவர் காலத்திய ஐரோப்பிய அறிஞர்களும் தம்முடைய அகராதிகளாலும், இலக்கண நூல்களாலும் தெலுங்குச் சொற்களஞ்சியத்தை நவீனமாக்கும் செயலில் துணை நின்றனர். இது பிற்காலத்தில் வேருெரு மட்டத்தில் கிடுகு இராமமூர்த்தி பந்துலு என்பாரால் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது. இந்த அறிஞர் பேச்சு வழக்கிலுள்ள தெலுங்கு மொழியையும் இலக்கிய மொழியாக ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதற்காகத் தம் வாழ்நாள் முழுவதும் போராடினுர்.

இன்றைய எழுத்தாளர்களில் எவரும் பரவஸ்து சின்னய்ய சூரி (1806–62) என்பாரை நவீன காலத்தின் முன்னேடி என்று

கருதார். இந்த அறிஞர் தெலுங்கு மொழி என்ற கடிகாரத்தைப் பின்னுேக்கித் தள்ளி வைத்தார் என்று சிலர் வாதிடுவர்; ஆயினும், இலக்கண ஆசிரியராகவும் உரைநடை ஆசிரியராகவும் இவர் ஆற்றிய பங்கினை எவரும் எளிதில் புறக்கணிக்க இயலாது. ஆனல், மரபு நிலையினின்றும் இவர் சற்று விலகிச் சென்றவராக மதிப்பிட லாம். கந்துக்கூரி வீரேசலிங்கம் பந்துலு முதலில் இவரை ஒரு முன்மாதிரியாகவும் பின்னர் ஒருவிதமான முன்னெச்சரிக்கையா கவும் கொண்டார். அப்படிக் கொண்டிராவிடில், அவர் நவீன கலைவடிவங்களை மலரச் செய்த முனைவராகவும் எளிய இனிய தெலுங்கு உரைநடை ஆசிரியராகவும் வளர்ந்திருக்க முடியாது. உயர்தர ஆங்கில இலக்கியங்களில் தாக்கமும் அவரை இந்நிலைக்குக் கொணர்ந்தது என்பதும் தெளிவு.

இதே மூலமுதலால் இன்னும் அதிகமான தாக்கம் பெற்றவர் டாக்டர் சி. ஆர். ரெட்டி என்பவர். வீரேசலிங்கம், சின்னய்ய சூரி இவர்களிடமிருந்தும் பொதுவான சில கூறுகளையும் இவர் பெற்ருர் எனலாம். முன்னவரின் சமுதாய நோக்கும் புத்தமைப்புகளைத் தேர்ந்தெடுக்கும் இயல்பும், பின்னவரின் உயர்தர இலக்கியத்தின் மீது கொண்ட ஒருதலைப் பற்றும் மரபுவழக்கின்மீது கொண்ட மதிப்பும் டாக்டர் ரெட்டியிடம் பலன் தரக்கூடிய சந்திப்பு இட மாக அமைந்தன. சின்னய்ய சூரி இவரது தனிப்பற்றுக்குரிய உரை நடை எழுத்தாளர்; வீரேசலிங்கம் இவரது அன்புக்குரிய எழுத்தாளர். இவரது கையில் உருப்பெற்ற இசை விணக்க முடைய உரைநடையினின்றும் இதனைக் கண்டு தெளியலாம்.

மேல்நாட்டுச் சிந்தனைப் போக்குகளைத் தன்னகத்தே கொண்டும், ஆனல் தம்மைத் தம்முடைய எளிமையான உறுதிப் பிணைப்பினின்றும் விடுவித்துக்கொள்ளாமல் இருக்கும் சமகாலத்து இந்தியப் புலவர் ஒருவரை அண்மைக் காலத்திலுள்ளதைப்போல் இப்பொழுதும் காண்பதென்பது குறிப்பிடத்தக்க ஓர் அரிய நிகழ்ச்சியாகும். தம்முடைய தாக்கத்தின்மீது கொண்ட குறுகிய மனப்பான்மையுடன் ஒருங்கே காணப்பெறும் மேல்நாட்டு அறி வில் கணிசமான அளவுக்குப் பெற்ற பயிற்சியுடைய அறிவாற்ற லுள்ள ஒருவரை நாம் இங்குப் பொதுவாகக் காண்கின்ருேம்.

கன்னடமொழியில் பி. எம். சிரீகண்டய்யாவும், தமிழில் பி. ஆர். இராஜம் அய்யரும், இந்தியில் இராமச்சந்திர சுக்லாவும், வங்காளத்தில் மைக்கேல் மதுசூதன் தத்தும் ஆன புதுப்போக்கின் முன்னுேடிகளுடன் பல்வேறு முறைகளில் ஒப்பிட்டுக் காணக்கூடிய டாக்டர் ரெட்டி இயக்க ஆற்றல் மிக்க உருவமாக நம்முடைய கவனத்தை ஈர்க்கின்ருர். இவரைத் தெளிவாகப் புரிந்துகொள்வ தென்பது, பல்வேறுபட்ட மரபுகளின் மோதல்களைப்—ஒருமட்டத் தில் ஐரோப்பிய மரபும் இந்திய மரபும், மற்ருெரு மட்டத்தில்

ஆரிய மரபும் திராவிட மரபும்—புரிந்துகொள்வதாகும். நிகழக் கூடியவைதாம் என்று நாம் கருதினுல், உண்மையிலேயே பயன் அளிக்கவல்ல மோதல்களே இவை என்று கூறலாம்.

**இயல் இரண்டு**

# இளமை வாழ்க்கை

**ஆ**ந்திர மாநிலத்தில், சித்தூர் மாவட்டத்தில், கட்டமஞ்ச்சி அமைதிச் சூழ்நிலையிலமைந்த ஒரு சிற்றூர். சித்தூருக்குக் கீழ்பா லுள்ள இவ்வூர் இன்று நகரமைப்பு எல்லேக்குள் சேர்க்கப் பெற்றுள்ளது. ஆங்கில எழுத்தாளராகிய கோல்டுஸ்மித் வாழ்ந்த ஆபர்ன் என்ற சிற்றூரைப் போலவே, இவ்வூரும் இங்கு வாழும் குடிமக்களுக்கு ''மலேயிடைத் தாழ்வெளியிலுள்ள காட்சிக்கினிய வனப்புமிக்க''தாகத் திகழ்கின்றது. ஓராண்டுக் காலத்தில் மூன்றே நாள் வெள்ளம் பெருகியோடும் நீரோடையொன்றையும், மூன் றுண்டுகட்கொருமுறை நிரம்பும் குளம் ஒன்றையும் மெச்சிப் பேசி மகிழ்வர் இவ்வூர்ப் பெருமக்கள். மாந்தோப்புகளும் தென்னஞ் சோலேகளும் சூழ்ந்து பசுமையாகக் காணப்பெறும் இவ்வூர் மக்க ளுக்குக் குளிர்ச்சியையும் புத்துணர்ச்சியையும் அளிக்கவல்ல இன்ப கரமான இடமாகும்.

தென்னிந்தியாவில் மிகவும் புகழ்பெற்ற இரு பேரறிஞர்கள் இந்த ஊரில்தான் தோன்றினர். இந்திய தேசிய காங்கிரசின் தலே வராகத் திகழ்ந்த முதல் ஆந்திரர் பி. அனந்தாச்சார்லு என்பார் ஒருவர்; கல்வியாளர், அரசியல் சிந்தனேயாளர், கட்டுரையாளர், பொருளியலறிஞர், கவிஞர், இலக்கியத் திறனுய்வாளர் ஆகிய அனேவரும் திரண்டு ஒருவராகத் திகழும் கட்டமஞ்ச்சி இராம லிங்கா ரெட்டி என்பார் மற்ருெருவர்.

இராமலிங்கா ரெட்டி 1880-ம் ஆண்டு திசம்பர் 10-ம் நாள் பிறந்தார்.

ஆந்திர மாநிலத்து ரெட்டிமார் உடல்வலி மிக்க உழவர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்; இவர்தம் கடும் உழைப்பு, விருந் தோம்பல், துணிவு, பண்பு நலம் ஆகியவை யாவரும் அறிந்தவை

யாகும். இடைக்காலத்தில் இவர்தம் மூதாதையர் சிறிய நாடு களை ஆண்டு அரசோச்சியவர்கள். உயர் மதிப்பு, தன்மானம் என்ற பண்புகள் இவர்களிடம் நன்கு வளர்ந்து துலக்கமடைந்து திகழ்கின்றன.

உழவுத் தொழிலே இராமலிங்கா ரெட்டிக் குடும்பத்தின் முதன்மையான தொழிலாக இருந்தபோதிலும், அக்குடும்பம் பண்டைய இலக்கியப் புலமையையும் உரிமைகொள்ளக்கூடியதாக விளங்கியது. சிறப்பாக, சித்தூர் மாவட்ட நடுத்தர செல்வக் குடும்பங்களைப் பொறுத்தமட்டிலும், இஃது உண்மையே யாகும். இவர்தம் பாட்டனார் (பாட்டனாரின் திருப்பெயரே பே(பெய) ரனுக்கும் சூட்டப்பெற்றது) ஒரு கவிஞர்; இவருடைய நூல்களில் நூறு செய்யுட்களைச் கொண்ட **பாஸ்கர சதகம்** அடங்கும். இராம லிங்கா ரெட்டியின் தந்தையார் சுப்பிரமணிய ரெட்டி வழக்கறி ஞர் தொழிலை மேற்கொண்டிருந்தார்; இவரைக் கவிஞர் என்பதை விட புலமையுடையவர் என்று சொல்லலாம். இவர் இரண்டு தொகை நூல்களை வெளியிட்டார். ஒன்று **பாரதசார இரத்தினு வளி;** மற்றொன்று, **பாகவதசார முக்தாவளி;** இரண்டும் நீதி நெறியைச் சார்ந்தவையாக அமைந்திருந்தன. இவர் முதல் நிலை வழக்கறிஞர்; மிகவும் நேர்மையுள்ளவர் என்று புகழ் பெற்றிருந் தார். பெரும்பாலும் மகளிர் அடுப்படியில் அடைந்து கிடந்த அந்தக் காலத்தில் இவருடைய அத்தை மகள் ஒருத்தி **வரதராச சதகம்** என்ற பக்தி நூல் ஒன்றை இயற்றினார்.

தெலுங்கு மொழியிலமைந்த **மகாபாரதம், பாகவதம், இராமாயணம்** இவை இராமலிங்கா ரெட்டியின் குடும்பத்தில் படிக்கப் பெறும் நூல்களாக அமைந்தன. பிள்ளைப் பருவத்திலிருந்தே இவற் றுடன் இடைவிடாமல் பழக்கப்பட்டிருந்தமையால், இளமைப்பரு வத்திலிருந்த இராமலிங்கா ரெட்டி முக்கியமாக இவற்றுள் முதலாவதாகக் குறிப்பிட்ட **மகாபாரதத்தில்** ஈர்க்கப்பெற்றான். பத்து வயதிற்கு மேற்பட்ட (இருபதிற்குக் குறைந்த) பருவத்திலேயே, இவன் தெலுங்கு மகாபாரதத்தைப் பலரும் போற்றத்தக்க முறை யில் எளிமையாகப் படிக்கும் திறனையும் எய்தியிருந்தான். தன் குடும்பத்தில் சிற்றன்னையரிடமிருந்தும் பாட்டிமார்களிடமிருந்தும் எண்ணற்ற கட்டுக் கதைகளையும் கற்பனைக் கதைகளையும் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு இவனுக்குக் கிடைத்திருந்தது. பன்னிரண்டு வயதிலேயே நூற்றுக்கு மேற்பட்ட கதைகளை இவன் அறிந்திருந் தான். எழுத்தறிவில் மட்டிலும் கல்வியும் பண்பாடும் அடங்கி யிருக்க முடியாது என்பது இராமலிங்கா ரெட்டியின் உறுதியான நம்பிக்கை யாகும்.

சிற்றூரில் பெற்ற தொடக்கநிலைக் கல்வி நிறைவு பெற்றதும், இராமலிங்கா ரெட்டி சித்தூர் நகரிலுள்ள உயர்நிலைப் பள்ளியில்

சேர்ந்தான். அப்பள்ளியில் தெலுங்குப் பண்டிதராகப் பணியாற் வந்தவரும், இவன் குடும்பத்தின் நண்பருமான குப்பண்ண அய்யங் கார் என்பார் புரிந்துகொள்ள இயலாத கூறுகளடங்கிய தெலுங்கு இலக்கணம், சொல் வரலாறு, யாப்பிலக்கணம் ஆகியவற்றைச் சிறுவன் இராமலிங்கா ரெட்டிக்கு முறையாகத் தொடங்கிவைத் தார். இந்தத் தெலுங்குப் பண்டிதரிடம் இராமலிங்கா ரெட்டி கற்றவை **நாளோபாக்கியானம்** (நிடத நாட்டு அரசனுன நளன் வரலாற்றைக் கூறுவது), **சர்வ லட்சண சாரம்** (தெலுங்கு மொழி யின் விதிகளைப்பற்றிய அடிப்படை நூல்) என்ற இரண்டு நூல்க ளாகும். ரெட்டி பள்ளியில் அறிவுக்கூர்மையுள்ள மாணுக்கன்; சிறப்பாகத் தெலுங்கு, ஆங்கிலம், வரலாறு, புவியியல் ஆகிய பாடங்களில் இவனது கூரிய திறன் வெளிப்பட்டது. அன்றும் பின் னரும் எண்கணக்குப் பாடம் பூச்சாண்டிகளைப்போல் இவனே வெருட்டும் தன்மையாகவே இருந்தது.

1890-ல் முதற் படிவத்தில் சேர்ந்து, 1896-ல் பள்ளியிறுதித் தேர்வில் வெற்றிபெற்முன் சிறுவன் இராமலிங்கா ரெட்டி. தேர்வு கட்காக நெட்டுருச் செய்யும் பழக்கம் இவனிடம் இயல்பாகவே அமையவில்லை. திருமதி பெஸ்சண்ட் அம்மையாரின் சொற்பொழிவு களால் பொதுமக்களிடையே பரவச் செய்யப்பெற்ற பிரம்ம ஞான இயக்கத்தில் (Theosophical movement) இளமையிலே காட்டிய அக்கறை இவனுடைய பள்ளிப் பாடங்களைப் பயில்வதினின்றும் கவனத்தைத் திருப்பியது. கிட்டத்தட்ட இறுதிக் காலத்தில், குறைந்த தயாரிப்பைக் கொண்டே, தேர்வுகளில் நல்ல முறையில் வெற்றி பெற்றே வந்தான். பள்ளியிறுதிப் படிப்பை முடித்த நிலையி லேயே பிறருடைய கவனத்தைக் கவரும் முறையில் ஆற்ெருழுக் காக ஆங்கில மொழியில் பேசும் திறனும் தெலுங்கு மொழியில் செய்யுளியற்றும் திறனும் இவனிடம் அமைந்துவிட்டன. குறுகிய சித்தூர் எல்லைக்கப்பாலும் நோக்கக்கூடிய அளவுக்கு இவன் தன் திறன்களை நன்கு வளர்த்துக்கொண்டான்.

இயல் மூன்று

# சென்னையிலும் கேம்பிரிட்ஜிலும்

**அ**க்காலத்தில் தென்னாட்டில் பல இளைஞர்களைப் போலவே, கல்லூரிப் படிப்பிற்காக இளைஞன் இராமலிங்கா ரெட்டியும் சென்னையை நோக்கிச் சென்றான். கலந்து பழகும் சமூக வாழ்க்கைக்கு வாய்ப்பு தருவதிலும், கல்வி புகட்டும் தரத்திலும் பெரும் புகழ் பரப்பிய சென்னைக் கிறித்தவக் கல்லூரி இவனுடைய கவனத்தைக் கவர்ந்தது. இக்கல்லூரி ஸ்காட்லாந்து பணிமன்றத்தின ரால் நடத்தப்பெற்று வருகின்றது; நாட்டில் மிகப் பழமையான கல்லூரிகளில் இஃது ஒன்றாகும். அக்காலத்தில் டாக்டர் வில்லியம் மில்லர் என்பார் கல்லூரியின் முதல்வர்; பிறரை எளிதில் ஈர்க்க வல்ல தனியுரிமையுள்ள காந்த ஆற்றலைக் கொண்ட சேவையே உருவான ஆசிரியர் இவர்.

இளம் மாணாக்கர்களின் மனத்தில் ஒழுங்கு முறை, கடும் உழைப்பு இவற்றுடன் தன்னம்பிக்கையையும், சுயமாக வெளியிடும் ஆற்றலையும் ஊட்டி வளர்ப்பதில் டாக்டர் மில்லர் பொறுப்புடையவராக இருந்தார். இவருடைய ஆளுமையால் இராமலிங்கா ரெட்டி பெரிதும் மாற்றம் அடைந்தான். கெல்லெட் என்ற வரலாற்றுப் பேராசிரியர் இவனுக்குத் தம் பாடத்தில் ஆழ்ந்த பற்றை உண்டாக்குவதில் துணைபுரிந்தார். மிக அதிகமான நிலையான முத்திரையை இவனிடம் பதியச்செய்தவர் டாக்டர் ஸ்கன்னர் என்பார்; இவர் மெய்விளக்கப் பாடத்தைப் புகட்டி முதல் (அடிப்படை) விதிகளைப்பற்றிய ஆழ்ந்தாராய்ச்சி உணர்வை இவனிடம் தூண்டிவிட்டார்.

கற்பிக்கும் ஆசிரியர் குழாத்தில் இந்தியர்களிலும் சிலர் புலமைக்கும் மாணாக்கர்களின் நலனில் அன்புடன் காட்டும் பரிவுக்கும் புகழ் வாய்ந்தவர்களாகத் திகழ்ந்தனர். கல்லூரியின் தெலுங்கு மன்றமாகிய ஆந்திர பாஷாபி ரஞ்சனி சங்கத்தின் தலைவரான சாமர்த்தி ரங்கய்ய செட்டி என்பார் ரெட்டி மேற்கொண்ட இலக்கிய நடவடிக்கைகளுக்குப் பேரளவில் உற்சாக மூட்டுவதில் முதல்வராகத் திகழ்ந்தார். அக்காலத்தில் பெரும் தெலுங்குப் புலவரும், நாடக ஆசிரியருமான வேதம் வெங்கட்டராய

சாஸ்திரி கல்லூரியின் வடமொழிப் பண்டிதர்; தெலுங்கு மொழியை இரண்டாவது மொழியாகப் பயின்ற ரெட்டிக்கு இவருடைய வழிகாட்டும் அறிவுரை என்றும் நிரந்தரமாகவே கிடைத்திருந்தது.

ஆந்திர பாஷாபி ரஞ்சன சங்கத்தின் நடவடிக்கைகளில் ரெட்டி சுறுசுறுப்பான அக்கறையுடன் செயற்பட்டான். இதன் சார்பில் ஏற்பாடு செய்யப்பெற்ற சொற்போர்கள், பிற நிகழ்ச்சிகள் இவற்றில் கலந்துகொள்வதில் ரெட்டி உற்சாகம் காட்டினான். இதன் சார்பில் நடைபெற்ற போட்டி ஒன்றில் பங்கு கொண்டு **முசலம்ம மரணமு** என்ற தன் கவிதையை அனுப்பி அதற்குப் பரிசும் பெற்றான்.

கல்லூரியில் ஆங்கில மொழியிலும் தெலுங்கு மொழியிலும் நகைச்சுவைத் திறனுடனும் சொற்சுவைத் திறனுடனும் பேசவல்ல பேச்சாளன் என்ற புகழ்க்குறியுடன் திகழ்ந்தான் இராமலிங்கா ரெட்டி. நாட்டுப்பற்றுளர் லோகமானிய பாலகங்காதர திலகர் அரசினரால் சிறைப்பட்ட பொழுது மாணவர் சமுதாயத்தின் பரிவினை எடுத்துக்கூறும் முறையில் முதற்படியை மேற்கொண்டான் ரெட்டி.

தான் கல்லூரியில் கழித்த ஐந்தாண்டுக் காலத்தில் இராமலிங்கா ரெட்டி திறனாய்வுத் திறனிலும் படைப்பாற்றல்களில் வல்லவன் என்பதற்கும் மிகுதியான சான்றுகளைக் காட்டினான். **மகாபாரதத்தில்** தொடர்ந்து மாறாத பற்றுறுதியுடனிருக்கும் பொழுதே, சிற்றிலக்கியக் கவிஞராகிய பிங்கோலி சூரண்ணாவின் படைப்பின் மீது இவனுடைய கவனம் ஈர்க்கப்பெற்றது. சிறப்பாக இவர்தம் **கலாபூர்ணோதயமு** என்னும் நூல் ரெட்டியின் மனத்தில் ஆழ்ந்த முத்திரையைப் பதித்தது. 1899-ல் ஆந்திர பாஷாபி ரஞ்சனி சங்கத்தில் தான் படித்த ஆய்வுக்கட்டுரையொன்றில் இந்நூலின் நிறைகளையும் குறைகளையும் சற்று விரிவாகவே சோதித்துக் காட்டினான். இதுதான் இவனுடைய இலக்கியத் திறனாய்வுக்குப் பெரிதான படைப்பின் தொடக்கம் ஆகும்; இது பிற்காலத்தில் பெருக்கப்பெற்று **'கவித்துவ தத்துவ விசாரமு'** என்ற தலைப்பில் நூல் வடிவாக வெளியிடப்பெற்றது.

வரலாறு, மெய்விளக்கம் (தத்துவம்) இவற்றில் தனிச்சிறப்புடன் பி.ஏ. பட்டம் (1902-ல்) பெற்ற பிறகு, இங்கிலாந்தில் மேற்படிப்பிற்காக இந்திய அரசின் உதவிச் சம்பளம் ரெட்டிக்குக் கிடைத்தது. இவன் கேம்பிரிட்ஜில் புனித ஜான் கல்லூரியில் சேர்ந்தான்; விரைவில் அங்குக் கண்காட்சி—ரைட் பரிசினை முயன்று பெற்றான். மேலும் இவன் பவுண்டேஷன் ஆய்வு மாணாக்கனானான். வரலாற்று டிரிப்பாஸ் (History Tripos) என்ற கேம்பிரிட்ஜில் நடைபெறும் தேர்வுக்குப் பயிலும்போது வரலாற்றுப் பாடத்தைத்

தவிர பொருளியல், மெய்விளக்கம் (தத்துவம்) என்ற பாடங்களும் இவனது தனி ஆர்வத்திற்கு உட்பட்டன.

சுயசிந்தனைக்கும், அரசியல் பரந்த நோக்கிற்கும் வாய்ப்புகள் கொண்ட கேம்பிரிட்ஜில் நிலவிய சூழ்நிலை ஆய்வு மனங்களைக் கொண்டவர்கட்கும், உரிமையை வற்புறுத்துபவர்கட்கும் மேலும் வளர்ச்சி பெறத் துணை செய்வதாக அமைந்தது. 1905-ல் இராமலிங்கா ரெட்டி கேம்பிரிட்ஜ் முற்போக்குச் சங்கத்திற்குச் செயலனுகத் தேர்ந்தெடுக்கப்பெற்ருன். இதனைவிட மேலும் உயர்ந்த பதவி இவனைத் தொடர்ந்தது; கேம்பிரிட்ஜ் மாணவப் பேரவைக்கு துணைத் தலைவனுகவும் தேர்ந்தெடுக்கப்பெற்ருன். இந்தப் பதவிக்குத் தற்செயலாக முதன்முதலாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற இந்தியன் இவனேயாவான். (பல பத்தாண்டுக் காலத்திற்குப் பிறகு மோகன் குமாரமங்கலம் இந்தப் பேரவைக்குத் தலைவனுகத் தேர்தெடுக்கப்பெற்ற முதல் இந்தியன் என்பது குறிப்பிடத்தக்கது).

ரெட்டி கேம்பிரிட்ஜில் வாழ்ந்த காலத்தில் மாணுக்கர்களிலும் ஆசிரியர்களிலும் புகழ் வாய்ந்தவர்கள் அங்கு இருந்தனர். ஆசிரியர்களில் கோல்ட்ஸ்வொர்த்தி லோவெஸ் டிக்கின்சன், டேவிட் மேக்டக்கார்ட்டு போன்ற சுயசிந்தனையுள்ள பெருமக்கள் புதிய சிந்தனைக்கு வழி வகுத்துக் காட்டினர். பின்னர் 'புளூம்ஸ்பரி குழு' என்று வழங்கப்பெற்ற குழுவின் உட்பகுதியாக அமைந்தவர்களில் லிட்டன் ஸ்ட்ரேச்சி, லியனுர்டு வுல்ப், இ. எம். ஃபாரஸ்டர், கிளைவ் பெல் முதலியோர் ரெட்டியின் அடுத்த சம காலத்தவர்களாவர். ஜான் மேய்னுர்டு கெய்னிஸ், மார்க்கன் ஃபிலிப்ஸ் பிரைஸ், ஜே.சி. ஸ்குயர் ஆகியோர் இவனது நெருங்கிய நண்பர்களாவர். மேலும், இவன் பாவிஸ் பிரதர்ஸ், லேவெலின், ஜான் கௌபர் போன்ற வேறு அறிவாற்றலுள்ளவர்களையும் வளரும் எழுத்தாளர்களையும் சந்தித்து அளவளாவுவதுண்டு.

அறிவாற்றலுள்ளவர்களிடையே நடைபெறும் உரையாடல் எல்லா வகையிலும் அறிவுச் சுடர்களுடன் திகழ்ந்திருக்க வேண்டும்; இது மின்வெட்டு போன்ற செயல்விரைவுடன் நகைச்சுவைத் திறனில் திளைக்கும் ரெட்டியிடமிருந்து மிக உயர்ந்தவற்றை எல்லாம் வெளிக் கொணர்ந்திருக்க வேண்டும். பூவுலகிலுள்ள எந்தப் பொருளும் இங்கு விலக்கு அன்று. மேலுலகிலுள்ளவையும் அப்படித்தான். கடவுளையும் விட்டபாடில்லை. சுடர்விடும் ஒளியுடன் திகழ்ந்தால் கடவுளைப் பழித்துரைப்பதும் சரியென்றே கொள்ளப் பெறும். இவனது பேச்சில் சுருக்கென்று தைக்கும் சொற்றிறத்துக்கு மாதிரி இது:

> கடவுள் எல்லாவல்லமையும் படைத்தவர்! என்றும் இருப்பவர்! உண்மையே! கடவுள் எல்லாவல்லமையும் படைத்தவராளுல், தற்கொலை செய்துகொள்ளக்கூடிய தன்னுரிமையும்

விருப்பாற்றலும் அவருக்கு இல்லையா? அங்ஙனமாயின் அவர் எப்படி என்றும் நிலைத்திருக்க முடியும்?

இத்தகைய போக்கில் ஒளிவீச்சும் பொருத்தமற்ற தன்மையும் காணப்பெற்றால், நாம் சிந்திக்க முனைவதுபோல் இவன் எடுத்ததற்கெல்லாம் குறை கூறுபவன் அல்லன்; இரக்கமற்றவனும் அல்லன். இவன் மகிழ்வூட்டுபவனாகவும் கலந்து பழகும் தன்மையுள்ளவனாகவும் இருந்ததுடன் தோழமையுடன் பெருந்தன்மையுடனும் திகழ்ந்தான் என்பதற்கு உயர்ந்த சான்றும் உள்ளது. மிகச் சிறந்த எல்லோரும் அறிந்த எழுத்தாளரான சர் ஜான் ஸ்குயர் என்பார் தம்முடைய கல்லூரி நாட்களை நினைவூட்டுபவராய்ச் சொன்னது:

> கேம்பிரிட்ஜில் ரெட்டி...பர்க்கின் சொல்வன்மையும் அநுபவ அறிவும் கொண்டு திகழ்ந்தான். ஆனால் ஒருவர் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக பாராட்டப்பெற்றாலும் அல்லது நன்கு மதிக்கப்பெற்றாலும் இவனுடைய சொல்வன்மைக்கோ அல்லது அநுபவ அறிவுக்கோ இவன் விரும்பப்படுபவன் அல்லன். இதயத்தின் பண்புகளே இதயத்தின் துலக்கத்தை வெளிவரச் செய்யும்; கேம்பிரிட்ஜில் எங்களுள் பலரை ரெட்டியிடம் அன்புக்குரியவராக்கியது இவனது அறிவு அன்று; ஆனால் இவனது பெருந்தன்மை, குறிக்கோள் நெறி (முற்றிலும் தருக்குடைமை கலவாதது), இவனுடன் அறிமுகமானவர்களில் மிகக் குறைந்த அறிவுள்ளவரிடம் கூடக் காட்டும் அன்பான தற்பெருமையற்ற மகிழ்ச்சி, இவனது பொறுமை, பொறுத்துக்கொள்ளும் தன்மை ... ஆகிய பண்புகளடங்கிய **இவனேதான்.**

மிக அண்மைக்காலத்து மேனாட்டுச் சிந்தனையிலும், பல்கலைக் கழகத்திலும் வெளியிலும் ஆங்கில அறிவாற்றலுள்ளவர்களின் கூட்டுறவிலும் ஆழ்ந்து அடங்கியிருந்தபோதிலும், ரெட்டி தன்னுடைய மூலாதாரத்தை என்றும் மறந்ததே இல்லை. புதிய நுண்புலன்களைக் காண்பதற்காகத் தெலுங்கு **மகாபாரதத்தை** விடாது பயின்றும் ஆழ்ந்து மறைந்து கிடக்கும் அழகுகளைத் தேடிக் காண்பதற்காக **கலாபூர்ணோதயமு** என்ற நூலில் தோய்ந்தும் தன்னுடைய தெலுங்குப் புலமைக்குப் புத்துயிர் ஊட்டிக்கொண்டேயிருந்தான்.

இங்கிலாந்தில் தான் தங்கியிருந்த ஐந்தாண்டுக் காலத்தில், ரெட்டி தன்னுடைய அரசியல் ஒத்துணர்வுகளையும், நாட்டுப் பற்றின் சார்புகளையும் நற்பயனுக்காகப் பயன்படுத்தினான். பல்கலைக்கழக முற்போக்குச் சங்கச் செயலன் என்ற முறையில் தேர்தல் கூட்டங்களில் இவன் அதிகமாகத் தேவைப்பட்டான். கேம்பிர்ட்ஜ் பேரவைக்கு லஜபத் ராய், கோகலே போன்ற இந்தியத் தலைவர்

களை இவன் விருந்துப் பேச்சாளர்களாக அழைப்பதுண்டு. சிறப்பாக, கோகலேயின் ஆளுமையால் இவன் பெரிதும் கவரப்பெற்றான்; இவருடைய முதிர்ந்த அரசியலறிவு, இனிய விட்டுக் கொடுக்கும் தன்மை, பேச்சில் நிதானப் போக்கு ஆகியவை ரெட்டியிடம் நிலையான முத்திரையை விட்டுச் சென்றன.

கோகலேயின் அறிவுரைப்படிதான் ரெட்டி சட்டப்படிப்பை மேற்கொள்வதாக இருந்த தன் எண்ணத்தைக் கைவிட்டு அதற்குப் பதிலாக ஆசிரியத் தொழிற் படிப்பை ஏற்க முடிவு செய்தான். 1906-ல் இவன் வரலாற்று டிரிப்பாஸ் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றான். இந்தியாவிற்குத் திரும்புவதற்கு முன்னர் கல்வி நிலையங்களைப் பார்வையிடுவதற்காகவே அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு சென்றுவந்தான். மாறுதல் விரும்பாத ஆங்கில மரபின்வழி வளர்க்கப்பெற்ற ஒருவனுக்கு இப்பயணம் பழைய பார்வையில் புதிய உலகினைக் காண்பதில் புத்துணர்வூட்டும் அநுபவமாக இருந்தது.

தன்னுடைய நாட்டை ஒரு புதிய முறையில் அமைக்க வேண்டும் என்று பேரார்வம் கொண்ட ஸ்ரீ சாயாஜி ராவ் என்ற பரோடாவின் கெயிக்வார் அரசர் தம்முடைய பணியில் துணை செய்வதற்கு நன்கு பயிற்சி பெற்ற திறமை மிக்க ஒருவரைத் தேடியவண்ணம் இருந்தார். சில ஆண்டுகட்கு முன்னரே, கிளர்ந்தெழுந்த நாட்டுணர்ச்சி என்ற அலை உரிமை கொள்வதற்கு முன்னர், கல்லூரியின் துணை—முதல்வராக உயர்ந்த அரவிந்த கோஷ் என்பாரின்மீது இவர் விருப்பம் விழுந்தது. இப்பொழுது அவ்விருப்பம் இராமலிங்கா ரெட்டியின்மீது திரும்பியது.

### இயல் நான்கு

# பரோடாவிலும் மைசூரிலும்

**1908**-ல் இந்தியாவிற்குத் திரும்பிய பிறகு கெயிக்வாரின் அழைப்பின்பேரில் ரெட்டி பரோடா கல்லூரியில் சேர்ந்தார். உண்மையில், அவ்விருப்பறிவிப்பு வெளிநாட்டிலிருந்து திரும்பும் இவர் வருகைக்காகக் காத்துக்கொண்டிருந்தது. ரெட்டியின்

அமெரிக்கச் சுற்றுப்பயணத்திற்கு பரோடா அரசர்தான் பண உதவி செய்ததாக அறியக்கிடக்கின்றது. கல்கத்தாவில் புதிதாகத் தொடங்கப்பெற்ற தேசியக் கல்லூரியின் முதல்வர் பதவியை மேற்கொள்வதற்காக அரவிந்தகோஷ் தம்முடைய துணை—முதல்வர் பதவியைத் துறந்ததால் ரெட்டி கோஷுக்குப் பிறகு அக்கல்லூரியின் பேராசிரியராகவும் துணை—முதல்வராகவும் பதவியேற்றூர். தகுதி வாய்ந்த கேம்பிரிட்ஜ் பட்டதாரி ஒருவர் தகுதி வாய்ந்த மற்றொரு கேம்பிரிட்ஜ் பட்டதாரியை அடுத்துப் பதவியை ஏற்பது எல்லாவற்றிலும் மிகப் பொருத்தமாக அமைந்தது. கூர்ந்து உணரக்கூடிய அரசர் இவரைவிடச் சிறந்த ஒருவரை அந்த இடத்தில் அமர்த்த எண்ணியிருந்திருக்க முடியாது.

பரோடாவில் ரெட்டி தங்கியது மிகக் குறைந்த காலமேயாகும். ஆனுல், இவர் அங்கு உடனடியாகச் சிறந்த ஆசிரியர் என்ற பெயர் பெற்றூர். தாம் கற்பித்த எந்தப் பாடத்திலும் ஆங்கில இலக்கியம், ஐரோப்பிய வரலாறு, அல்லது பொருளியல் இவற்றுள் எதுவாயினும், புதியதோர் அணுகு முறையை மேற்கொண்டார் ரெட்டி. இவர்தம் சிந்தனையின் புதுமையாலும், விளக்கவுரையின் தெளிவாலும் மாணுக்கர்கள் உற்சாகத்தால் தூண்டப்பெற்றனர். இவருக்குமுன் பதவி வகித்த பெரியாரை விட ஆழ்ந்த அறிவில் சற்றுக்குறைவாக இருந்தாலும், இவருடைய முறையில் மிகவும் அன்பாதரவுடன் இருக்க முடிந்தது. காலஞ்சென்ற கே. எம். முன்ஷி பரோடாவில் தம்முடைய மாணவ நாட்களை நினைவுகூருங்கால், தாம் ரெட்டியின் வகுப்பிற்கு உரியவரல்லாவிடினும், இன்பத்தின் பொருட்டு ரெட்டியின் சொற்பொழிவுகளைக் கேட்பதுண்டு என்று குறிப்பிட்டுள்ளார். இங்ஙனம் மந்திர ஆற்றல் வாய்ந்த ரெட்டியின் பேச்சு மொழியால் ஈர்க்கப் பெற்ற பல்லோருள் இவரும் ஒருவராவார்.

மீண்டும் கெயிக்வார் அவர்களின் வேண்டுகோளின்படி ரெட்டி மேற்கொண்ட கல்விச் சுற்றுப் பயணத்தில் கனடா, ஜப்பான், ஃபிலிப்பைன்ஸ் முதலான நாடுகட்குச் சென்று திரும்பினுர். ஆனுல் இவர் பெற்ற அநுபவத்தின் பயன் அதிகக் காலம் பரோடாவிற்கு மட்டிலுந்தான் என்ற வரையறை செய்துகொள்ள இயலவில்லை. 1909-ல் மைசூரில் பல்கலைக் கழகச் சீர்திருத்தம் என்ற பொருளில் தொடர் சொற்பொழிவுகளை நிகழ்த்துமாறு அழைக்கப்பெற்றூர் ரெட்டி. சர். வி.வி. மாதவ ராவ் என்ற அந்நாட்டின் திவான் இவருடைய சொற்பொழிவுகளைக் கேட்டு அவற்றூல் மிகவும் கவரப்பெற்றூர்; மைசூர் நாட்டு அரசுப் பணியில் சேருமாறும் ரெட்டியைத் தூண்டுதல் செய்தார்.

மைசூரில் மகாராசர் கல்லூரில் ரெட்டி பேராசிரியராகப் பணியாற்றியபொழுது, இவருடைய காலத்தில் எந்த ஒரு பேராசிரி

யரிடமும் இல்லாத அல்லது இருக்க முடியாத அளவுக்கு மாணவர்களின் கவர்ச்சி மையமாகத் திகழ்ந்தார். இவர் ஆங்கிலம், வரலாறு, அளவை நூல் (Logic) ஆகிய பாடங்களைக் கற்பித்தார். ஆனால் இவருடைய சொற்பொழிவுகள் யாவும் பலரும் செல்லும் வழியை விட்டு விலகியே நடைபெற்றன. இவை மாணுக்கர்களைத் தாமாகவே சிந்திக்கத் துணை செய்தன. சராசரிக்குமேல் அறிதிறன் ஈவினைக் (I. Q) கொண்டவர்களிடம் இவை புலனுணர்வுக் கதவுகளைத் திறந்துவிட்டன.

வழக்கமாகக் கிடைக்கும் சொற்பொழிவுகளாலும் முன்னமே செரிமானம் செய்யப்பெற்ற குறிப்புகளாலும் சோர்வுற்றவர்கட்கு இவரது கற்பிக்கும் முறை காற்றோட்டமில்லாத நாளன்று வரும் இளந்தென்றலின் அலைபோல் வந்தது என்று இவரது பழைய மாணுக்கர்களில் சிலர் சொன்ன குறிப்பு பதிவேடுகளிலும் இடம் பெற்றுள்ளது. ரெட்டி வகுப்புக் 'குறிப்புகளை' எழுதிக்கொள்ளுமாறு சொல்லுவதுமில்லை; சாரமற்ற பழக்கத்தை மேற்கொள்ள அவர்கட்கு எழுச்சியூட்டுவதுமில்லை. எந்தவிதமான பாலூட்டு-முறைக்கும் (Spoon-feeding) இவர் எதிர்ப்பு தெரிவிப்பவராக இருந்தார். வரலாறு செல்திசையைப் புரிந்துகொள்ளவும் அதனை ஆய்ந்து தேடவும் மாணுக்கர்கள் செலுத்தப்பெற்றனர். **'ஸ்பெக்டடர்'** என்ற இதழில் வெளியாகும் கட்டுரைகளை ரெட்டி மாணுக்கர்கட்குப் படித்துக் காட்டும்பொழுது அடிசனின் நாகரிகப் பண்புடைய நகைச்சுவைத் திறத்தை இவர்கள் திரும்ப அறிவது இவர்கட்கு அது ஓர் இன்ப மயமான வியப்பாக இருந்தது. மிகையான புன்முறுவல் தவழும் முகபாவனை தெரியும்படியாக இவர் தமது குரலை ஒழுங்குபடுத்திக்கொள்வார். காய்ந்த எலும்பு போன்ற சுவையற்ற மரபொழுங்கு சார்ந்த அளவையியலும் (Logic) இவரிடம் உயிர்ப்பு பெற்று இளம் மாணுக்கரிடம் தனிக் கவனத்தை எழுப்பி விடும். தனிமையில் இவர்களிடம் இவர் அளவையியல் என்ற அறிவியல் மனிதனுடைய பகுத்தறிவாராய்ச்சியின் எல்லையைக் காட்டக்கூடியது என்று அடிக்கடிச் சொல்லுவதுண்டு. எங்ஙனம் 'பத்துக் கட்டளைகள்' ஒருவரை ஞானியாக்க முடியாயாதோ அங்ஙனமே அளவையியல் ஒரு மனிதரை நிறைவுடையவராக்க முடியாது என்பது இவர்தம் நம்பிக்கையாகும்.

மைசூரில் தங்கியிருந்த தொடக்கக் காலத்தில் இளவரசர் ஐரோப்பா சுற்றுப் பயணத்தை மேற்கொண்டபோது அவருடன் சென்று வருமாறு ரெட்டி பணிக்கப்பெற்ருர். இந்த வாய்ப்பினை ரெட்டி பல்வேறு நாடுகளிலுள்ள கல்வி நிலையங்களைப் பார்த்து வருவதற்குப் பயன்படுத்திக்கொண்டார். இந்த வாய்ப்பைப் போலவே கீழ்நாடுகட்கு மேற்கொள்ளப்பெற்ற சிறு தொலைப் பயணத்தில் கிடைத்த வாய்ப்பையும் பயனுறப் பயன்படுத்திக்

கொண்டார் ரெட்டி. இத்தகைய விரிவான சுற்றுப் பயணங்கள் பற்றி இவர் அரசுக்குமுன் வைத்த அறிக்கையில் கீழ்நாடுகளிலும் மேல் நாடுகளிலும் கண்ட கல்வி ஏற்பாட்டு முறைமைகளில் மிகச் சிறந்தவை அடங்கியிருந்தன. 1915-ல் மைசூருக்கு ஒரு தனிப் பல்கலைக்கழகம் அமைப்பதற்குத் திட்டமொன்று தயாரிக்கு மாறு இவர் கேட்டுக்கொள்ளப்பெற்றபோது இந்த அறிக்கை அதற்கு ஒரு பீடிகையாக அமைந்தது.

அடுத்த ஆண்டே கற்பிப்பதற்கும், ஆராய்ச்சிக்கும், கல்லூரிகளைக் கிளை நிலையங்களாக இணைத்துக்கொள்வதற்கும் உரிய வாய்ப்புத் திறங்களுடன் அமைந்த ஒரு பல்கலைக்கழகம் தோன்றியது. மகாராசர் கல்லூரியின் முதல்வராக ரெட்டி உயர்த்தப் பெற்றார்; இந்தப் பதவியில் இவர் இரண்டாண்டுகள் (1916—17) பணியாற்றினார். சில பழைய துறைகளைத் தற்காலப் புதுமை தோன்ற அமைத்ததுடன் இந்திய மொழிகளில் புதிய துறைகளைத் தொடங்குவதற்கும் இவர் முதற்படியை மேற்கொண்டார். கல்லூரியில் தெலுங்குத் துறையின் தொடக்கம் இவரது அரிய முயற்சியா லேற்பட்டதாகும். தெலுங்குப் பண்டிதர் பதவிக்கு முதற் பொறுப்பாளராக அமைந்தவர் திரு. ஆர். அனந்த கிருட்டிணசர்மா என்பவர்; இவர் பிற்காலத்தில் குற்றஞ் சாற்ற முடியாத நேர்மையுடைய புலவராகவும், திறனாய்வாளராகவும் தம் புகழை வளர்த்துக்கொண்டார். தமக்குச் சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் ரெட்டி இவருடன் சேர்ந்து தெலுங்கு **மகா பாரதத்தைப்** படிப்பதை மேற்கொண்டார்.

1918-ல் நாற்பது வயது எட்டாத இராமலிங்கா ரெட்டி மைசூர் அரசு முழுவதற்கும் கல்வித்துறைக் கண்காணிப்பாளர் களின் தலைவராக நியமிக்கப்பெற்றார். ஓர் இந்தியருக்கு, அதுவும் வெளி மாநிலத்தைச் சார்ந்த ஒருவருக்கு, இஃது ஒரு சாதாரண மேதகைமை அன்று. இவருடைய வயதுக்குரிய ஒருவருக்குக் கூருணர்வுடைய துறையைத் தலைமைப் பொறுப்புடன் நடத்திச் செல்வதென்பது ஒரு சாதாரண பொறுப்பும் அன்று.

தம்முடைய புதிய பொறுப்பில் பாதுகாப்பாகக் காலந் தள்ளலாம் என்று ரெட்டி அதனைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வில்லை. கல்வித்துறை அமைப்பையே அதன் பழைய தடத்தி னின்றும் வெளிக்கொணர ஏதாவது செய்தே ஆகவேண்டும் என்று இவர் உறுதி கொண்டார். பள்ளியே இல்லாத ஒவ்வொரு சிற்றூரிலும் ஒரு பள்ளியைத் தொடங்க உடனடியான நடவடிக் கைகளை எடுத்தார். 'கல்வி' என்ற தலைப்பில் கணிசமான அள விற்கு மானியங்களை அதிகரிக்கவும் அதிகமான முயற்சியை எடுத் தார். எல்லாப் பள்ளிகளையும் அரிசனங்கட்குத் திறந்துவிட ஏற்பாடு செய்ததே இவர் மேற்கொண்ட இனவெழுச்சியுள்ள

நடவடிக்கையாகும். ஒரு சிறிய எல்லையிலாவது தீண்டாமையை ஒழிக்க மேற்கொண்ட தொடக்க கால முயற்சிகளில் இஃது ஒன்ருக அமைந்தது. இதனைச் செய்ததால், சிறப்பாக மிக உயர்ந் இடங்களிலிருந்து ஏராளமான எதிர்ப்புகளை நேர்நின்று சமாளிக்க வேண்டியிருந்தது. ஆனால் இறுதியில் சட்டமன்ற உறுப்பினர்களின் துணையையும், அரசரின் பரிவையும் கொண்டு இவர் வெற்றியே பெற்ருர்.

மைசூரில் இராமலிங்கா ரெட்டியின் ஒவ்வொரு செயலும் நன்ருகச் சென்றுகொண்டிருந்ததாகவே காணப்பெற்றது. மாணுக்கர்களிடையே பெரும் புகழையும் துறையில் செயலாற்றிய தெள்ளிய நிலேச்சான்றுடனும், மிக உயர்ந்த பதவியை வகிக்கும் பேறும் பெற்ருர். இவர் குறை கூறுவதற்கு ஒன்றுமே இல்லே. 1921-ல் ஒரு நாள் காலேயில் இவர் திடீரென்று தம் பதவியைத் துறந்தார். மின்னுது இடித்தது போன்று இச்செய்தி மக்களுக்கு எட்டியது. தம்முடைய தாய்நாடாகிய சென்னே மாநிலத்தில் அரசியலில் தம்முடைய எதிர்பாரா நற்பேற்றினேக் குறித்து முயலலாம் என்பதற்காகவே இங்ஙனம் செய்தார் என்று சிலர் சொல்லினர். வேறு சிலர் பல்வேறு கதைகளேக் கட்டிவிட்டனர். ஆனல் மைசூரினின்றும் திடீரென்று நாடகப் பாங்கில் வெளியேறின செய்தி இன்னும் விளங்காப் புதிராகவே மறைந்து கிடக்கின்றது.

இவரது மைசூர் வாழ்க்கையில் இரண்டு நிகழ்ச்சிகள் குறிப்பிடத் தக்கவையாகவே அமைந்தன. ஒன்று: மகாத்மா தீண்டாமை ஒழிப்புப் பணியைத் தொடங்கக்கூடும் என்று எதிர்பார்த்தே அரிசனங்களுக்கு எல்லாப் பள்ளிகளேயும் திறந்துவிடச் செய்தார். இரண்டு: 1911-12-ல் முதன் முதலாகத் தெலுங்கில் அமைந்த நூலாக **பாரத அர்த்த சாஸ்திரமு** என்ற பொருளியல் நூலே எழுதினர். இந்நூல் 'விஞ்ஞான சந்திரிகா கிரந்த மண்டலி' என்ற சங்கத்தினரால் சென்னேயில் 1914-ல் வெளியிடப்பெற்றது.

## இயல் ஐந்து

# அரசியலில் பாய்ச்சல்

**1921-ல்** இந்திய வானத்தில் காங்கிரசின் ஆதரவில் விடுதலை இயக்கம் என்ற போர்—ஒலி மிக அதிகமாகக் கேட்கத் தொடங்கியது. மாண்டேகு—செம்ஸ்ஃபோர்டு திட்டத்தின்கீழ்ச் சட்டமுறைப்படி ஒரு புதிய அமைப்பு உருவாகும் என எதிர்பார்க்கப்பெற்றது. சென்னையில் மாற்றப்பெற்ற அரைப் பொறுப்பில் நீதிக்கட்சி ஆட்சி செய்து வந்தது. மைசூர்ப் புழுதியைத் தம் கால்களால் உதறித்தள்ளிவிட்டு வந்த ரெட்டி சென்னை அரசியல் பேரிரைச்சலில் மிக ஆழமாக இறங்கிவிட்டார். இதில் தம் சொந்த மனச்சாய்வு சித்தூர் நண்பர்களின் தூண்டுதலால் மாத்திரமே வலிமை பெற்றது. நடைமுறையில் இரட்டையாட்சியின் வரையறையைத் தாம் அறியாவிடினும், இவர் புதிய அரசியலமைப்பில் உயர்ந்த நம்பிக்கை வைத்திருந்தார்.

ஒரு பெரிய பந்தயத்திற்காக ரெட்டி விளையாடிக் கொண்டுள்ளார் என்பது முற்றிலும் நிகழக்கூடியதே. மிகக் குறைந்த அளவில், இவர் அரசியல் ஏற்பாட்டின்கீழ் தாம் இருக்கும் இடத்தைக் கண்டறிய மிக உறுதியாக முயன்றுகொண்டிருந்தார். பிரிட்டிஷ் ஆளுனர்களின் ஆசியால் பிறந்த நீதிக்கட்சியில் இவர் சேர்ந்தார். இவர் எளிதாக ஆலோசனைக் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றபோதிலும் வகுப்புவாத வெறியும் பதவி வேட்டையும் கொண்ட ஒரு சூழ்நிலை தம்மைப்போல் சிந்தனைப் போக்குள்ள ஒருவருக்குச் சிறிதளவேனும் உகந்தது என்று காண முடியவில்லை. டாக்டர் கே. ஆர். சீனிவாச அய்யங்காரின் சொற்களில் கூறினுல் அஃது ஒரு புதிய தொடக்கம் என்பதைவிடத் தவருன தொடக்கம் என்று சொல்லலாம். மேனாட்டு முறையில் பயிற்சி பெற்ற முற்போக்குக் கொள்கையையும் முற்போக்குக் கருத்துகளையும் உடைய அறிவாற்றலுள்ள ஒருவருக்கும், முக்கியமான வாய்ப்பில் நோக்குடைய வீட்டிலேயே வளர்க்கப்பெற்ற உள்ளூர் மேலாளித்தனம் பண்ணுபவர்களால் ஆதிக்கம் செலுத்தப்பெற்ற ஆளுங் கட்சிக்கும் இடையே மக்களாட்சி செயற்படவேண்டிய முறையில் சிறிதளவுகூட பொதுவான கருத்து இல்லை. இவர்க

ளிடையே பிரிவு ஏற்படுவதற்கு அதிகக் காலம் ஆகவில்லை. பனகல் அமைச்சரவையின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர வேண்டிய அளவுக்கு உணர்ச்சியும் சிந்தனையும் அற்ற அதன் திட்டங்களால் வெறுப்புக்கு ஆளானர் ரெட்டி. அந்தத் தறுவாயில் இவர் நிகழ்த்திய சொற்பொழிவு நினைவிலிறுத்த வேண்டிய ஒன்ருக அமைந்தது. மலையாளத்திலும் (மலபார்) ஆந்திராவிலும் நடைபெற்ற அதன் போலிஸ் அடக்குமுறையை யும் பொதுவாக அது கையாண்ட மக்களாட்சிக்குச் சிறிதும் பொருந்தாத முறைகளையும் கடுமையாகச் சாடினர்.

ஒத்த மனப்பான்மையுடைய சில நண்பர்களின் துணையைக் கொண்டு 'ஒன்றுபட்ட தேசியக் கட்சி' என்ற ஒரு கட்சியை விரை வில் அமைத்தார். அரசினைக் கவிழ்க்கும் அளவுக்கு உறுப்பினர் களைக் கொண்ட வலுவுடைய கட்சியாக இல்லாவிடினும் (தேர்வு இல்லாது அமர்த்தப்பெற்ற குழுவின் ஆதரவு காரணமாக, அத்தகைய தற்செயல் நிகழ்ச்சி ஒருவகையிலும் ஏற்பட முடி யாது), அமைச்சரவை கவலைகொள்கின்ற அளவுக்குப் பல நெருக்கடி நிலைமைகளைத் தவருமல் அதனுல் உருவாக்கமுடியும். அங்ஙனம் அஃது உருவாக்கத்தான் செய்தது.

இராமலிங்கா ரெட்டியின் திறமைக் கூறினுலும், பெற்ற பயிற்சியினுலும் இவருக்கு மிகவும் பொருத்தமான கல்வி அமைச்சர் பதவி கொடுக்கப்பெறவில்லையே என்று இவருடைய நண்பர்களும், இவர்மீது ஈடுபாடு கொண்டு பாராட்டுபவர்களும் அடிக்கடி வருந்தியதுண்டு. ஆனல் அரசின் குறைகளை எடுத்துக் காட்டுபவ ராகிய இவர் அமைச்சர்களைச் சதா அந்தரத்தில் நிறுத்திக் குற்றங் களைச் சுட்டிக் காட்டித் துன்புறுத்துவதில் முதற்படியிலிருந்தார். இவர்தம் விரைந்துணரும் சொல்திறனும் சுருக்கென்று தைக்கும் ஏளனப்பேச்சும் மன்ற நடவடிக்கைகளுக்கு உயிர்ப்பூட்டுவனவாக இருந்தன. இவையில்லாவிடில் சட்டமன்ற நடவடிக்கைகள் நீண்ட பொருளற்ற பேச்சுகளாகவும், சோர்வுறுத்துவனவாகவும் செய்து விடும். முதல் அமைச்சராக இருந்த பனகல் அரசர் வெட்டியும் ஒட்டியும் பேச இடந் தரும் வாதப் போரில் பயிற்சி பெருதவராத லால் அடிக்கடி ரெட்டியின் வசைமாரிக்கு இலக்கானர்.

ஆளுங்கட்சி ஐயுறவான முறைகளில் சட்டமன்றத்தில் பெரும்பான்மையை அடைய சமாளிப்பதைப்பற்றிக் குறிப்பிட்ட ரெட்டி சொன்னர்: அமர்த்தல்கள் இணைப்புகளுக்கு வழி காட்டு கின்றன. ஏமாற்றங்கள் பிரித்தல்கட்கு வழிகாட்டுகின்றன. (ஆங்கில மொழிச் சொற்ருெடரில் அமைந்துள்ள ஒலிக்குறிப்பும் சொல் நயமும் கேட்போருக்குத் தனி இன்பம் நல்கும்).[1]

1. Appointments lead to attachments; and disappointments lead to detachments.

ஒரு சமயம் ரெட்டி அரசுப் பக்கத்தின் பல செயல்களில் உள்ள விட்டகுறை—தொட்டகுறைகளை அம்பலப்படுத்திப் பேசுங்கால், முதல் அமைச்சர் தன்னிடம் ரெட்டி ஏதோ ஒரு தனிச் சலுகை கேட்டுத் தனக்கு எழுதியதாக நம்பப்பெறும் கடிதமொன்றைத் தனது சட்டைப் பையினின்றும் எடுத்துக் காட்டி அவரை அச்சுறுத்தினர். தகுவழி காணும் திறம் உடைய இந்த உறுப்பினரை அவ்வளவு எளிதாக அச்சுறுத்தி வாயடைத்து அமைதியை நிலைநாட்ட முடியாது. ரெட்டி குத்தலான சிலேடைப் பேச்சால் மறுமொழி தந்தார்: ''ஆனல் இங்கிலாந்தில் காதலர்கள் தம்மிடையே சச்சரவு செய்துகொள்ளுங்கால் தாம்தாம் பெற்ற கடிகளைத் திருப்பித் தந்துவிடுகின்றனர்'' என்ருர்.

முதல் அமைச்சருக்கு ரெட்டி எப்பொழுதும் குத்தும் முள்ளாக இருந்து வந்தார் என்பது தெளிவாகத் தெரிந்தது. நிதி ஒதுக்கீடுகளைப்பற்றி இவர் எடுத்துக்காட்டிப் பேசிய குறை—நிறை பேச்சுகள் சிறப்பாகப் பயன் விளைவிக்கத் தக்கனவாக அமைந்தன. நாட்டின் கல்வி வளர்ச்சியின்பொருட்டு பிச்சைக்காரத்தனமான நிதி ஒதுக்கீடு ரெட்டியின் சினத்தைத் தூண்டிவிட்டது. சட்ட மறுப்பு இயக்கத்திஞல் போதுமான அளவு அரசு வருமானம் வசூலாகாததே இதற்குக் காரணம் என்று அரசு எடுத்துக்காட்டியதற்கு விளக்கக் குறிப்பு தரும் வகையில் அரசுக்கு எதிராக அது சொன்னதையே திருப்பிவிட்டார். மக்களிடம் நடந்து கொள்ளத் தகுதியற்ற திறமையை அது காட்டிக் கொடுக்கின்றதென்றும், அது வரிகொடா இயக்கத்தின் வெற்றியை மறைமுகமாக ஒப்புக்கொண்டதாகும் என்றும் இவர் கூறினர்.

எல்லா வகையிலும் கல்வியைப்பற்றிய இவர்தம் சட்டமன்றப் பேச்சுகள் யாவும் தகவல்களைத் தருவனவாகவும் உணர்ந்து அறியக்கூடியனவாகவும் அமைந்திருந்தன என்று எல்லோராலும் கருதப்பெற்றன. இவருடைய பின்னணியை மதித்துக் கருதுங்கால் இதை மட்டிலுந்தான் எதிர்பார்க்கமுடியும். சென்னைப் பல்கலைக் கழகச் சீர்திருத்தம்பற்றி நடைபெற்ற வாதப் போரில் இவர் தீவிர பங்கேற்ருர்; இது சம்பந்தமாக ஆராய அமைக்கப்பெற்ற குழுவிலும் இவருக்கு முக்கியமான பொறுப்பு தரப்பெற்றிருந்தது.

ஆந்திரர்களின் அவாவைப் பற்றியெல்லாம் விரைந்து குரல் கொடுப்பவரான ரெட்டி ஆந்திராவுக்குத் தனிப் பல்கலைக் கழகம் நிறுவப்பெறுவதற்கான திட்டத்தை அரசு மேற்கொள்ளப் போகிறது என்பதை அறிந்து இயல்பாகவே மகிழ்ச்சியடைந்தார். மேல் தோற்றத்தில் இஃது அவர்களுடைய துணை நிலையான தேசிய ஊழினை நிறைவேற்றுவதில் முதற்படியாக அமைந்தது. ஆனல் அந்தத் திட்டத்தில் மேற்கொள்ளப்பெற்ற திருத்தங்

களால் சலுகையின் போதுமான அளவு கழிந்துகொண்டேபோகும் முறையினுல் இவரது மகிழ்ச்சி தொலேதூரம் சென்றுவிட்டது.

1925-ல் ஆந்திரப் பல்கலேக் கழகச் சட்டம் நிலவரச் சட்ட நூலாக வைக்கப்பெற்ற பிறகு, இராமலிங்கா ரெட்டி அந்தப் பல்கலேக் கழகத்தின் முதல் துணே-வேந்தராக நியமிக்கப்பெற்ருர். சரியான பதவிக்குச் சரியான மனிதர் தெரிந்தெடுக்கப்பெற்ருர் என்று எல்லோரும் வாழ்த்து கூறினர். தொந்தரவு தரும் உறுப்பினர் ஒருவர் சட்டமன்ற மண்டபத்தில் எதிர்ப்பு தரும் குழுவினின்றும் நீங்கிவிட்டார் என்று முதல் அமைச்சர் மகிழ்ச்சி அடைந்தார் என்ற வதந்தியும் கூடவே பரவத் தொடங்கியது. பத்திரிகை உலகிலும் பொதுமக்களிடையிலும், ''அரசியலுக்கு ஓர் இழப்பு, கல்விக்கு ஓர் ஆதாயம்'' என்ற விளக்க உரைப் பல்லவி கேட்கலாயிற்று. ''அரசியலுக்கு ஓர் ஆதாயம், கல்விக்கு ஓர் இழப்பு'' என்ற பல்லவியையும் அன்பற்ற ஒரு குறும்புக்காரக் கோமாளி குத்தலான சிலேடையுடன் எழுப்பிவிட்டார்.

### இயல் ஆறு

# துணே-வேந்தர்

இராமலிங்கா ரெட்டி துணே-வேந்தரின் பணிகளே மேற்கொண்டபோது ஆந்திரப் பல்கலேக் கழகம் பெயரளவில்தான் இருந்தது. இஃது உள்ளூரைச் சார்ந்த இருப்பிடமாகவும் இல்லே. இவர் பெசவாடாவி (விசயவாடையி)லிருந்து (ரெட்டி பெசவாடாவை 'பிளேஸ்வாடா'[1] என்று வழங்கவே விரும்பினுர்) செயற்படத் தொடங்கினுர். ஆனுல் இவர் ஒன்றுமில்லாத வெற்றிடத்திலிருந்தே ஒவ்வொன்றையும் செய்ய வேண்டியதாயிற்று. எல்லா விதச் சிக்கல்களடங்கிய பல்கலேக் கழகச் சட்டத் தொகுதிகளே உருவாக்கல், பல்கலேச் சின்னம் தேர்ந்தெடுத்தல், படிப்புத் துறைகளே அமைப்பதில் குறிக்கோளுரையைத் தேர்ந்தெடுத்தல், ஆசிரியர்

---

1. BLAZE-WADA—கதிரவன் வெப்பம் கொழுந்துவிட்டெரியும் இடம்.

களை நியமித்தல் போன்ற எல்லாச் செயல்களையும் இவர் மேற்கொண்டார்.

பல்கலைக் கழகத்தை அமைக்கவேண்டிய இடத்தைத் தேர்ந்தெடுப்பதுதான் இவருக்கு ஓயாத தலைவலியைத் தந்தது. அனந்தப்பூர், விசயவாடை, இராசமகேந்திரபுரம், விசாகப்பட்டினம், ஆந்திராவில் நீங்கள் கருதும் எல்லாப் பெரிய நகரங்களும் போட்டி போட்டுக்கொண்டு தத்தம் உரிமைகளை முன் வைத்தன. ''இடங்களைத் தேர்ந்தெடுப்பதுபற்றிய போர் சிலகாலம் சீற்றத்துடன் நடந்துவந்தது''; மற்றவற்றினும் ரெட்டியின் தனிப்பட்ட விருப்பம் வால்ட்டயரின் மேட்டு நிலப் பகுதிமீது இருந்தது; அரசும் இதனை உறுதிசெய்தது. முடிவாகும் தறுவாயில் இது மிகச் சிறந்ததாகவே அமைந்துவிட்டது. உடல் நலத்துக்குகந்த தட்ப-வெப்ப நிலையும், கடலுக்கு அண்மையுமாகவும் அமைந்த இந்த இடத்தைத் தவிர வேறு இடம் சிறந்ததாக அமைந்திருக்க முடியாது.

சில பழைய பல்கலைக் கழகங்களைப் போலன்றி, ஆந்திராவில் கற்பித்தலுக்கும் ஆராய்ச்சிக்கும் அழுத்தம் இருந்தது. கிளை நிலையங்களாக இணைக்கப்பெற்ற கல்லூரிகளைத் தவிர, பல்கலைக் கழகத்துடன் உறுப்புகள் போலமைந்த கல்லூரிகளும் இருந்தன. ரெட்டி சமூக அறிவியல்களைப்பற்றிய மாணுக்கஞக இருந்தாலும், துறைகளை அமைக்கும் முறையில் அறிவியல் மனக்கவர்ச்சிப் போக்கினைக் காட்டினுர். மரபு முறையான உருவிலுள்ள அறிவியல் துறைகளுடன், கணித இயற்பியல் அணுக்கரு இயற்பியல், பின்னர் அமையப்போகும் மற்றவை போன்ற புதிய பாடங்களுக்கும் துறைகள் உருவாக்கப்பெற்றன. இங்கிலாந்திலும் உலகிலும் மிகப் பழமையான இரண்டு பல்கலைக் கழகங்களின் ஒன்றன் மாணுக்கஞக இருந்தபோதிலும், ஆந்திரப் பல்கலைக் கழகத்தைக் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் மறுபகர்ப்பாகச் (Replica) செய்ய முனையவில்லை. வளரும் சமூகத்திற்குத் தேவையானவற்றிற்குப் பொருத்தமான ஒரு கோலத்தில் பழைய உலகிலும் புதிய உலகிலும், கீழ்நாடுகளிலும் மேல்நாடுகளிலும் உள்ள பல்கலைக் கழகங்களிலுமுள்ள எல்லா நற்கூறுகளும் அடங்கும் முறையில் நடுநிலையுணர்வுக் கலப்பு நயத்துடன் திகழக்கூடிய ஒன்றைக் கற்பனையில் கண்டார்.

தெலுங்கு மொழியிலும் இலக்கியத்திலும் தமக்கு இணையானவர் எவரும் இலர் என்ற நிலையிலிருந்தபோதிலும் ரெட்டி பல்கலைக் கழகத்தில் தெலுங்கு மொழியைப் பாட மொழியாகத்—கற்பிக்கும் வாயிலாகத்—தேர்ந்தெடுக்க முனையவில்லை. தரத்தில் உயர்ந்தவையாக இருக்கவேண்டும் என்ற கொள்கையில் இவர் ஒரு பிடிவாதக்காரர். பல்கலைக் கழகத்தை உலகப்பற்றியல்புடன் திகழும் நிலையமாக அமைய வேண்டும் என்று விரும்பினுர்.

ஆயினும், தெலுங்கு, பிற இந்திய மொழிகள் ஆகியவற்றிற்குத் தனித்தனித் துறைகளை அமைக்க ஆதரவு காட்டினர். இதுவரையிலும்தான்; இதற்கு மேல் இல்லை. 'மெதுவாக விரைவுபடுத்து' என்பது இவர்தம் குறிக்கோளுரை.

பல்கலைக் கழகத்தின் சின்னத்தைத் தேர்ந்தெடுப்பதில் ரெட்டி தனிக் கவனம் செலுத்தினர். கதிரவன்கீழ் மலரும் நிலையிலுள்ள பல்லிதழ்களைக் கொண்ட தாமரை மலர் இருபக்கங்களும் இரண்டு பாம்புகளால் பாதுகாப்பாக அமைந்த வட்டமொன்றின் மையமாக அமைந்தது. ''ஆந்திர விஸ்வ கலா பரிஷத்'' என்ற பெயர் தெலுங்கு எழுத்தில் காணப்பெறுகின்றது; இத்துடன் வேத வாழ்த்துரையினின்றும் எடுக்கப்பெற்ற ''தேஜஸ்வைன அவதூத மஸ்து'' (பொருள்: மாணக்கர்களாகிய நாம் ஒளியுடன் பொலிவோம்) என்ற வடமொழியாலமைந்த குறிக்கோளுரையும் சேர்ந்து திகழ்கின்றது. பாம்புகள் அறிவைச் சுட்டிக் காட்டுவதுடன், ஆந்திரர்கள் நாக முன்னோர்களுடன் கொண்டுள்ள புராணத் தொடர்பை விளக்கும் ரெட்டிகளின் தனிப்பற்றுக் கொள்கையையும் குறிப்பாகத் தெரிவிப்பதற்காகவும் அமைக்கப்பெற்றிருக்கலாம். இந்தியக் கலை உருவப்படங்களிலும் இந்து மறைபொருளாராய்ச்சி நூலில் குறிப்பிடப்பெறும் உருக்காட்சியிலும் திரும்பத்திரும்பக் காணப்பெறும் தாமரை மலர் மக்களின் பொதுவிருப்பான தலைமைக் கருத்தினைச் சுட்டுவதாக அமைந்துள்ளது. சித்தூரிலுள்ள தம் சொந்த உறைவிடத்திற்கு "பத்ம பிரபஸா" (தாமரை ஒளி) என்று பெயரிட்டதிலிருந்தே இது தமது சொந்த விருப்பம் என்பது தெளிவாகின்றது.

கற்பிக்கும் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதில் ரெட்டி தகுதியின் அடிப்படையில் செயற்படுவதில் மிகக் கண்டிப்பாக இருந்தார். தாய் மொழி எதுவாக இருப்பினும், பிறந்த இடம் எதுவாக இருப்பினும், உயர்ந்த படிப்புத் தகுதி இருப்பின் ரெட்டி அவர்களை எடுத்துக்கொள்வதற்குத் தயாராக இருந்தார். இவரிடம் மக்கள் எதிர்பார்த்ததற்கு ஏற்ப, இவர் ஆந்திரர்கட்கு ஆதரவு காட்டுவதில்லை என்று சில பகுதியினர் இவரைக் குறை கூறினர். இவர் அதைப் பொருட்படுத்துவதில்லை; மாறாக அஃது உயர்நிலையில் தன்னுடைய புறவய உணர்வை மறைமுகமாகக் காட்டும் புகழ் உரையாக எடுத்துக்கொண்டார்.

ஒரு பல்கலைக் கழகம் என்ற கருத்திற்கு ஒரு பருப்பொருள் வடிவம் தருவதில் வேறு எவரும் இவரைப்போல் கடுமையாக முயன்றிருக்க முடியாது. தம்முடைய விடாமுயற்சியில் வெற்றிகள்—தோல்விகள், ஏமாற்றங்கள்—நிறைவேறுதல்கள் போன்ற எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு பல முட்டுக்கட்டைகளையும் தடங்கல்களையும் இவர் சமாளிக்க வேண்டியிருந்தது. முதல் ஐந்தாண்டு

களின் முடிவில் ஒரு கணிசமான அளவிற்கு முன்னேற்றம் தென்பட்டது.

முழுநேரத் துணை-வேந்தர் பதவியில் இருக்கும்போது தாம் கட்சி அரசியலுக்கு விடைகொடுக்க வேண்டியவராக இருந்த போதிலும், காந்தியடிகளின் விடுதலைப் போராட்டம் பற்றிய கருத்துகட்குப் பரிவுகாட்டி, ரெட்டி ஒரு முன்னேற்றமுள்ள தேசியவாதியாகவே நிலைத்திருந்தார். என்றபோதிலும் அரசியலமைப்பிற்குக் கட்டுப்பட்டவராக இருந்தபடியால், 1930-ல் நடைபெற்ற சட்டமறுப்பு இயக்கத் தீவிரவாதிகளுடன் துணிவாகச் சேர்ந்து செல்ல இயலவில்லை. ஆனால், ஒத்துழையாமை இயக்கத்தை அடக்குவதற்காக அரசு அச்சம் தரும் அடக்குமுறைச் செயல்களை கட்டவிழ்த்துவிட்டதை இவர் ஒப்புக்கொள்ளவில்லை. ஆகையால், இவர் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தம்முடைய துணை-வேந்தர் பதவியைத் துறந்தார். பல்கலைக் கழக வேந்தரான சென்னை ஆளுநருக்கு இவர் எழுதிய மனவெழுச்சிகளைத் தூண்டும் முறையிலமைந்த கடிதம், என்றும் நினைவில் வைக்கத் தகுந்த ஆவணமாகத் திகழ்கின்றது. புகழ்பெற்ற இதழாசிரியராகிய காசா சுப்பராவ் இதனை, ''நாட்டின் நாட்டுப்பற்று மிகுந்த உயர்தர இலக்கியம்'' என்று புகழ்ந்து வாழ்த்துரை வழங்கினார். எழுதியவரின் நிலையைச் சுருக்கமாகக் கூறும் முகத்தான் அது தெரிவித்தது:

> ...தம்முடைய அரசியல் தொடர்பு எப்படியிருந்த போதிலும், இந்தியர்கள் யாவரும் ஒன்றுகூடித் திரண்டு இந்தத் தாக்குதலைத் தோற்கடிக்கவேண்டியது தமது தெளிவான கடமையாகும் என்று நான் கருதுகின்றேன். காங்கிரசினின்று மாறுபட்டவர்கள்கூட, அஃது இந்தியாவில் தேசிய அடையாளத்துடன் நிறுவப்பெற்ற மிகப் பெரிய ஆய்வுக் கூடம் என்பதையும், அஃது இந்தியர்கட்கு அமைப்பு முறையின் கலையையும் ஒழுங்குமுறையையும் கற்றுக்கொடுத்துள்ளது என்பதையும், எழுச்சியூட்டும் அன்பையும் வல்லந்தச் செயலின்மையையும் மனத்திற் பதிய வைத்து அரசியல் கிளர்ச்சியை ஆன்மிக ஆற்றலுள்ளதாகச் செய்துள்ளது என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.
>
> என் நாட்டு ஆண் மக்களும் பெண் மக்களும் புரிந்த தியாகச் செயல்களும் பட்ட துன்பங்களும் என்னுடைய இன்றைய பதவியில் இருக்க முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளன. இந்த வெந்துயர் தரும் நிகழ்ச்சிகளிடையே துணை-வேந்தர் பதவியை வகிப்பது மகிழ்ச்சியும் அன்று, மேதகைமையும் அன்று என்பதை நான் காண்கின்றேன்.

1930-ம் ஆண்டிற்கும் 1936-ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் ரெட்டி பல்கலைக் கழகத்திற்கு வெளியில்தான் இருந்தார். ஆயினும் இவர் ஆந்திராவைச் சார்ந்த மற்ருெரு பெரிய கல்வியாளரும், தமது நண்பருமான டாக்டர் ச. இராதாகிருட்டிணன் தனக்குப் பின்னவராக நியமிக்கப்பெற்றமையறிந்து மன நிறைவுகொண்டார். ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிர பங்கு கொள்ளாவிடினும், இவரால் வேலை செய்ய மனமின்றி வாளா இருக்க முடியவில்லை. இக்காலம்தான் இவர் ஆற்றிய அரசியல் இடைநாடகத்தின் காலமாகும். வட்டமேசை மாநாடுபற்றியும் காந்தியடிகளின் இயக்கம்பற்றியும் கட்டுரைகள் பல எழுதினுர்; சொற்பொழிவுகள் நிகழ்த்தினுர். இவைதாம் பின்னர் ஒன்று திரட்டப்பெற்று **"வட்ட மேசை மாநாடுபற்றிய கட்டுரைகளும் பிற சொற்பொழிவுகளும்"** என்ற தலைப்பில் நூல்வடிவமாக வெளிவந்தன. உள்ளத்தை உருக்குகின்ற புகழ் உரை ஒன்றில் மகாத்மாவைப்பற்றி இவர் கூறியது:

> மகாத்மா காந்தி இலண்டன் அல்லது தில்லியிலிருந்து கொண்டு அரசியலமைப்பை உருவாக்குவதைவிட உள்ளிருந்து கொண்டே நாட்டை உருவாக்குவதில் அதிகக் கவலை கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. பிறர் விருந்துண்ணுங் கால் தாம் விரதத்தை மேற்கொள்ளுகின்ருர். ...நம்முடை நாடு துயரங்கள் மிக்க நாடாக இருப்பதால், அவர் துயரங்கள் நிறைந்த மனிதராக இருக்கின்ருர்.

யாவரும் வியப்படையும் வகையில், கண்ணிமை தட்டாமல் தம்முடைய துணை-வேந்தர் பதவியைத் துறந்த இம்மனிதர் மிக விரைவில் உள்ளூர் அரசியலில் பங்குபெற அக்கறை கொண்டார். 1935-ல் சித்தூர் மாவட்ட வாரியத்திற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்ருர்; அதுவும் திருவுளச் சீட்டுப் போட்டு எடுக்கும் முறையை மேற்கொள்ள வேண்டும் என்ற முடிவால் குருட்டு யோகம் இவர்பால் சாய்ந்தது. பின்னர் இவர் சட்டமன்ற மேலவைக்கும் தேர்ந்தனுப்பப்பெற்ருர். ஆனல் பெரும் பகுதி காங்கிரஸ் உறுப்பினர்களால் ஆன அந்த இடத்தில் அவர்களை விட்டு இவரால் அதிகம் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இந்த நிலையில் டாக்டர் ச. இராதாகிருட்டிணன் ஆக்ஸ்போர்டில் 'கீழைநாட்டுச் சமயங்கள்-அறநூல்கள்' என்ற துறையில் பேராசிரியர் பொறுப்பை ஏற்பதற்காக, ஆந்திரப் பல்கலைக் கழகத் துணை-வேந்தர் பதவியைத் துறந்தமையால் 1936-ல் அந்தப் பதவி காலியாயிற்று. அந்த இடத்தை நிரப்புவதற்கு மீண்டும் ரெட்டியே தேர்ந்தெடுக்கப்பெற்ருர். இவர் 1949-வரை

யில் இடையீடு படாத பதவிக் காலத்தை அநுபவித்தார்; இறுதியாக வால்ட்டயருக்கு விடைகொள்ளும் மொழியீந்து மைசூர்ப் பல்கலைக்கழகத்தின் இணை-வேந்தராகச் சென்றார். இதற்குச் சில காலத்திற்கு முன்னர், ஆந்திரப் பல்கலைக் கழகம் இலக்கியத்தில் மதிப்பியலான டாக்டர் பட்டம் (டி. லிட்) வழங்கி இவரைப் பெருமைப்படுத்தியது.

ஆந்திரப் பல்கலைக் கழகத்துடன் தம்முடைய நீண்ட நெருங்கிய தொடர்பால், சிற்சில சமயங்களில் ஏமாற்றங்கள் இருந்த போதிலும், அதனைப் பெரும்பாலும் தம்முடைய உள்விருப்பத்திற்கேற்ப உருவாக்கியதில் மன நிறைவு கொண்டார். தம்முடைய முழுத் திறமையையும் பயன்படுத்திக் கல்வித் தரங்களை நிலை நிறுத்துவதிலும், பல்கலைக் கழகத்தின் தன்னாட்சி உரிமையைக் காப்பதிலும், பண்பாட்டு மதிப்புகளை மேம்படச் செய்வதிலும் பெருமுயற்சியை மேற்கொண்டார் டாக்டர் ரெட்டி.

மைசூரில் இவர் தங்கினது குறுகிய காலமேயாகும். இவருடைய உடல் நலமும் நன்னிலையில் இல்லை. ஆனால், அலுவலக வழக்கமுறை வேலையின் பளுவினின்றும் விடுவிக்கப்பெற்றதால் சிறிது மகிழ்வுடனிருந்தார். மைசூரில் தங்கிய ஓராண்டுக்கு மேற்பட்ட காலத்தில் கல்வியாளராகத் தாம் திரட்டிய பழுத்த அறிவின் பயனையும் பல்வேறுபட்ட அநுபவத்தின் பயனையும் அவ்வூருக்கு நல்கினார்.

1951-ம் ஆண்டின் தொடக்கத்தில் டாக்டர் இராமலிங்கா ரெட்டி நோய்வாய்ப் பட்டார். சென்னைக்கு வந்து நோயாளிகளைப் பேணிக் காக்கும் மருத்துவமனையொன்றில் இடம் பெற்றார். இவருக்கு அறுவை மருத்துவம் மேற்கொள்ளப்பெற்றது. 1951 பிப்ரவரி 24-ல் மண்ணுலக வாழ்வை நீத்தார் ரெட்டி.

## இயல் ஏழு

# கவிஞர்

இராமலிங்கா ரெட்டி பெருக்க வளமுள்ள எழுத்தாளர் அல்லர்; ஆனால் இவர் ஒரு முன்மாதிரியான எழுத்தாளர். உரை நடையில் இவர் எழுதின அளவு குறைவானதாக இருப்பதாகக்

கருதினால் செய்யுள் வடிவில் இவர் எழுதியது இதனைவிட மிகக் குறைவேயாகும். கல்வியாளர், ஆட்சியாளர், அரசியல் வல்லுநர் என்ற சுறுசுறுப்பான பொறுப்பில் இவர்தம் நேரத்தின் பெரும் பகுதி இவர்தம் முழுக் கவனத்தையும் கவர்ந்தமை ஓரளவு காரண மாக இருக்கலாம். கவிஞர் என்ற முறையில் இவரது புகழ் முக்கிய மாக **முசலம்ம மரணமு** என்ற கவிதையாலும், குறைந்த அளவில் வேறு சில சிறிய கவிதைகளாலும் ஓங்கியுள்ளது. ஆனால், இவை யாவும் ஒன்று சேர்ந்து ஐம்பதிற்கு மேற்படாத பக்கங்களில் அடங்கிவிடும். இவரது நூலின் அளவினைவிட நூலின் தன்மையே படிப்பவர்களின் கவனத்தை ஈர்க்கவேண்டும்.

இவரைப் பண்டைய உயர்தர இலக்கியத்தின் பின்னணி யோடும் சமகாலத்திய மேம்பட்ட உணர்ச்சியோடும் உள்ள ஒரு கவிஞர் என்று காண்பதற்கு நமக்கு அதிக நேரம் ஆகாது. இவர் ஓரளவு இக்காலத்திற்குரிய புதுமையான எழுத்தாளரே; ஆனால் ஒரு வேறுபாட்டுடன் காணக்கூடிய புதுமையான எழுத்தாளர். இவரது கவிதை, வடிவத்தில் மரபு நிலையில் மாறாதது; ஆனால் பெரும்பாலும் கருத்துகளில் இக்காலத்திய புதுமைக் கூறுகளைக் கொண்டது. இவரிடம் இளம் வயதிலேயே படைப்புக்குரிய மூலக் கூறு எழுந்தது; ஆனால் அஃது இவரிடம் மிகுதியான அளவு இலக்கி யத்தைப் படைக்க நீண்டகாலம் நீடித்திருந்ததாகக் காணப்பெற வில்லை. இவர் வாழ்க்கையின் அறிவு பெறும் தொடக்கக் காலத்தில் இவர் பயின்ற உயர்தரப் பண்டைய தெலுங்கு இலக்கியங்கள், சிறப்பாக **மகா பாரதம்** பிங்கலிசூரனரின் பிரபந்த இலக்கியங்க ளாகிய கவிதைகள் இவர்தம் இலக்கியச் சுவையில் முடிவான தாக்கத்தை உண்டாக்கியிருக்கலாம் என்பது தெளிவு. மிகத் தொடக்கக் காலத்தில் இவர் எழுதிய இலக்கியத்தினின்றும் தெளி வாகிறதுபோல், இவர் அத்தாக்கத்தினின்றும் எளிதாக விடுபட முடிவதில்லை; இவர் தம் தொடக்கக் காலத்தில் எழுதிய இலக்கியத் திலும் இத்தாக்கம் கணிசமான அளவில் அதிகமாகவே உள்ளது.

**முசலம்ம மரணமு (1899):** சென்னைக் கிறித்தவக் கல்லூரி யில் பத்தொன்பது வயது மாணுக்கனாக இருந்த காலத்தில் ரெட்டி இக்கவிதையை இயற்றினார். ஆந்திர பாஷாபிமான ரஞ்ச்சனி சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற கவிதைப் போட்டி யில் கலந்துகொள்ள இவர் இக்கவிதையை இயற்ற ஊக்குவிக்கப் பெற்றார். இச்சங்கத்தின் புரவலராகிய சமர்த்தி ரங்கய்யச் செட்டி என்பார் இதனை மேற்கொள்ளுமாறு ரெட்டியவர்களை இணங்கச் செய்வதற்குப் பொறுப்பாளராக இருந்தார். ரெட்டியவர்கள் இக்கவிதையை இயற்றியதுடன் இதற்குரிய பரிசையும் பெற்றார். இவரது வகுப்புத் தோழர்களில் சிலர் இதன்மீது காட்டிய அக் கறையினால் ஓராண்டுக்குப் பின்னர் இஃது அச்சிடப்பெற்றது.

இது நூற்றுக்கு மேற்பட்ட செய்யுட்களைக் கொண்டு திகழும் கதை வடிவிலுள்ள ஒரு நீண்ட கவிதையாகும். பிரிட்டிஷ் சிவில் அலுவலரும் தெலுங்குப் புலவருமான சி. பி. பிரௌன் என்பாரால் எழுதப்பெற்ற **அனந்தப்பூர் மாவட்ட வரலாறு** என்ற நூலினின்றும் இக்கதை எடுக்கப்பெற்றதாகும். அனந்தப்பூர் நகருக்கு அண்மையிலுள்ள புக்கராய சமுத்திரம் என வழங்கப் பெறும் ஒரு சிற்றூரே கதையின் நிகழிடம் ஆகும். ஏரியின் கரை உடைப்பினால் உண்டாகும் வெள்ளத்தாலேற்படும் பெரிய அளவு அழிவினால் திகிலடைந்த சிற்றூர் மக்கள் தங்களைக் காக்குமாறு போலேரம்மா என்ற தலைமைத் தெய்வத்தை குறை இரக்கின்றனர். பின்னர் இவ்வூரைச் சார்ந்த முசலம்மா என்ற இளம் பெண்மணியை நரபலியாகத் தந்தால் மட்டிலுமே இந்தத் தேவதையின் சினத்தை மாற்ற முடியும் என்று அறியப்பெறுகின்றது. முசலம்மா பணிவிணக்கமுடைய, அன்பு நிறைந்த, அப்பழுக்கற்ற பெண்மணியாவாள். சிற்றூர் மக்களின் பொருட்டு இவள் தன்னையே கொடுக்க ஒப்புக்கொள்ளுகின்றாள்; ஏரியின் மூர்க்கத்தனமும் தணிகின்றது. இன்றும் அந்த ஏரியின் கரை இந்தக் கதைத் தலைவியின் பெயரால் 'முசலம்ம கட்ட' (முசலம்மாக் கரை) என்று வழங்கி வருகின்றது.

இந்த நிகழ்ச்சியைத் தம் கவிதையின் பாடுபொருளாக எடுத்துக்கொண்டு, டாக்டர் ரெட்டி இதனைச் சூழ்ந்திருக்கும் அவல உணர்வால் மனம் உருகப்பெறுகின்றார். ஆனால் பாத்திரப் படைப்பின் பொருட்டும் வேறு கலைத்திறக் கூறுகளை அமைத்தற் பொருட்டும் ரெட்டி மூலக்கதையில் ஒரு சில சிறிய மாற்றங்களைச் செய்துள்ளார்.

கதையைக் கவிஞர் கையாளும் முறை முற்றிலும் மரபுப் பண்பை ஒட்டியதாகும். இது முழுதும் பண்டைய பிரபந்த நடையில் அமைந்துள்ளது. கையாண்ட மொழி ஏட்டு வழக்கினது. சில இடங்களில் அது நீண்டு வளைத்த வடமொழி கூட்டுச் சொற்களாலும், பிற இடங்களில் **அட்சத் தெலுங்கின்** வழக்கிறந்த தொடர்களாலும் நிறைந்துள்ளது. இதில் கையாளப்பெற்றுள்ள யாப்பு வடமொழியைச் சார்ந்த உதபலமாலை, சம்பகமாலை போன்ற விருத்தங்களாலும், நாட்டு வழக்கில் மாற்றுருவம் பெற்ற சீச—பத்யம், கந்த—பத்யம், ஆட்டவெலதி, தேட்டகீதி முதலியவைகளாலும் அமைந்துள்ளது. கடவுள் வாழ்த்து (இஷ்ட தேவதைப் பிரார்த்தனை), எடுத்துக்காட்டாக இருக்கும் கவிஞருக்கு வணக்கம் (சுகவி சுருதி), அன்புப் படையல் செய்யுள்(கிருதி சமர்ப்பணம்), இறுதியுலுள்ள வாழ்த்துரை (பரத வாக்கியம்) போன்ற நன்கு அறியப்பெற்ற பிரபந்த அமைப்புக்குரிய உறுப்புகளும் இதில் காணப்பெறுகின்றன. 107 செய்யுட்களடங்கிய இந்நூலில்

முன்னுரையாக அமைந்த பகுதியில் மட்டிலும் பதினறு செய்யுட்களும், மரபு முறைப்படி முடியும் வாழ்த்துப் பகுதியில் மூன்று செய்யுட்களும் அடங்கியுள்ளன.

வருணனைப் பகுதியிலும் இது பிரபந்த நடையினின்றும் அதிகமாக மாற்றம் பெறவில்லை. சிற்றூரின் குளம் மாபெரும் ஏரிபோலவும், மூர்க்கமான அலைகள் நிரம்பிய கடலாகவும் பேசப் பெறுகின்றது. செய்யுளின் அடிகள் உயர்ந்த ஓசை நயம் பெற்றுள்ளன:

சல துத்துங்க மகோகிர பங்க படலி
சங்கட்டனுராவ
முஜ்வல கூலாக்ர நடத்தரங்க ரவ
மஞ்ச்சன் மத்ய பாகபூமி
ப்ருத்குல சம்பாதி மகோர்மிகா நிகர
நிர்க்கோஷம்புனும், கூடகா
நலருன் கோர சரஸ்ஸு திக்விதலன
வ்யாபார பாரீனமை.

தமிழ் எழுத்திலமைந்த இந்தச் செய்யுளை கிட்டத்தட்ட அடியிற்கண்டவாறு தமிழ்ச் செய்யுள் வடிவத்தில் அமைக்கலாம்:

வீறூர்ந்த பேரேரி மிக்குயர்ந்து பொங்கி
வெருவுறத்தம் முடன்மோதிப் பொருதரங்கத் திரளால்
மாறுது கரைகளிலே ஓயாமல் என்றும்
மகிழ்வுடனே நடம்செய்து திகழ்தரங்கத் திரளால்
பேராது புனல்நடுவண் மேவுமுயர் பாறைப்
பெருமிதத்தைச் சாருதற்கு முயல்தரங்கத் திரளால்
பாரார்ந்த எண்திசையை அணுவணுவாய்த் தகர்க்கப்
படர்வதற்குத் தயாராக இருப்பதுபோல் தோன்றும்.

குளத்தின் பரப்பளவு எப்படியிருப்பினும், இத்தகைய பேருருவம் ஆசிரியரின் உள் அவாக்களுள் நடப்பியல் (Realism) ஒன்றுக இருப்பின் படிப்போரிடம் நம்பிக்கையைத் தூண்டுவது பொருத்தமற்றதாகி விடும். தலைமைப் பாத்திரமாகிய முசலம்மாவின் குணநலன்களைக் கோடிட்டுக் காட்டும் முறையில் சில இடங்களில் ஆசிரியர் கையாளும் உவமைகள், உருவகங்கள் ஓரளவு இவள் பிரபந்தத் தலைவியருள் ஒருத்தியை நினைக்கச் செய்கின்றுள்.

ஆயினும், புலவர்கள், சிறப்பாக இதற்கு ஒரு நீண்ட முகவுரை எழுதியுள்ள காலஞ்சென்ற பேராசிரியர் பிங்கலி இலட்சுமி காந்தம், இந்த இலக்கியம் முக்கியமாக அணுகுமுறையில் இக் காலத்துக்குகந்தவாறு புதுமையாகவே உள்ளது என்று வாதிக்கின்றனர். ஆனல் **ஒன்று:** கூட்டான நல்வாழ்வுக்காக மேற்

கொண்ட தனியொருவரின் தியாக உணர்வு என்ற ஒரு சமூகத் தலைப்பு சமகாலத்திற்குப் பொருத்தமாக இருப்பதைக் காணலாம், வானநிலையின் மாறுமாரிப் போக்கை யொட்டி வரட்சிக்கும் வெள்ளத்திற்கும் உட்பட்ட ஆந்திரத்தின் ஒரு பகுதியாகிய 'இராயர் சீமை, ஒரு வரண்ட நிலப் பகுதி என்பதை யாவரும் நன்கு அறிவர். மரபு வழிவந்த பண்டைய உயர்தர தெலுங்கு இலக்கியங்கள் யாவும் புராணத்தில் காணப்பெறும் பழங்கதைகள், கட்டுக் கதைகள் போன்ற பொருள்களையே பாடுபொருள்களாகக் கொண்டுள்ளன; ஒன்றுகூட சமூகம்பற்றிய பாடுபொருளைக் கொண்டு அமையவில்லை.

அடுத்து, **இரண்டு:** கதையோ கதைத் தலைவியின் இறப்பாகிய துயர நிகழ்ச்சியில் முடிவு பெறுகின்றது; இஃது "அமங்கலமானது" என்று கவிதை மரபு இத்தகை முடிவிற்கு ஆதரவு தருவதில்லை. காவியங்களும் பிரபந்தங்களும் திருமணம், வெற்றி முதலியவற்றைக் குறிப்பிடும் முறையில் மகிழ்ச்சி தரும் முடிவாக அமையவேண்டும் என்று எதிர்பார்க்கப்பெறுகின்றன (மங்களாதீனி, மங்கள மத்யானி, மங்களாந்தானி)[1]. ஆகவே, ரெட்டியவர்களின் சோதனை இங்கு ஒரு துணிகரமான புத்தமைப்பாகக் காணப் பெறுகின்றது; இஃது இக்காலத் தெலுங்குக் கவிதையின் எல்லையைக் காட்டும் அடையாளமாக ஒப்புக்கொள்ளப்பெறுவதற்குத் தகுதியடைகின்றது.

மேலும், **மூன்று:** புனையுரைகளும் போலிப் புனைவின் கற்பனை உயர்வுகளும் மலிந்துள்ள பிரபந்தத் தலைவியர் போலன்றி, முசலம்மாவின் பாத்திரப் படைப்பு அடக்கத்துடனும் மெய்வாய்மை கெடாதும் உள்ளதாகக் கூறப்பெறுகின்றது. இவள்தம் இதயப் பண்புகள், இல்லக் கிழத்தி என்ற முறையில் இவள்தம் கடமையுணர்வு, பற்றுறுதி, எல்லோர்மீதும் இவள் காட்டும் தாய்மைப் பண்புகளான அன்பு இரக்கம் ஆகியவற்றிற்கு அழுத்தம் தரப் பெற்றுள்ளது. முடிமுதல் அடிவரை (கேசாதிபாதம்) காம உணர்களை எழுப்பவல்ல வருணனைகளில் விஞ்சும் முறையில் பிரபந்தக் கவிஞர்கள் உடல் வனப்பை எடுத்துக்காட்டும் முறை இங்குக் கண்டிப்பாகத் தவிர்க்கப்பெற்றுள்ளது. இந்த இலக்கியத்தின் முழுதும் தழுவிய சாந்தச் சுவையை யொட்டியே இங்ஙனம் அமைக்கப்பெற்றுள்ளது. பிரபந்தக் கவிஞர்களின் தனிப்பற்றுக்குரிய சிருங்காரச் சுவை (காதல் சுவை) இங்கு எந்தப் பகுதியிலும் இடம் பெறவில்லை.

என்றபோதிலும், சமகாலத்தியத் திறனாய்வாளர்கள், கதைப் பொருளைத் தேர்ந்தெடுப்பதாலோ அன்றி கதையை முடிக்கும்

---

1. நற்றொடக்கம், நல்மையம், நன்முடிவு.

இயல்பாலோ மட்டிலும் ஒரு கவிதை இலக்கியத்தில் இக்காலத்திய புதுமைக் கூறு அமையுமாறு செய்ய முடியாது என்ற சரியான கொள்கையைக் கொண்டுள்ளனர். கவிஞர் ஒருவருக்குப் புராணம், வரலாறு, அரசியல், சமூகம் ஆகிய எந்த மூலங்களிலிருந்தும் பாடு பொருளைக் கடன் வாங்கும் உரிமை இருந்தாலும், அதனைக் கையாளத் தேர்ந்தெடுக்கும் முறையில்தான் அதன் சிறப்பு அமைகின்றது. ரெட்டி இதனை முற்றிலும் இக்கால முறையில் கையாளவில்லை. சிறப்பாக, இது மரபு முறையினின்றும் வேறுபட்டதாகும்; அதுவும் தெளிவாகத் தெரியும் வேறுபாடும் அன்று. துன்பகரமாக முடிவுபெறுகின்றது என்றால், அது முற்றிலும் புதிதாக அமைந்த தன்று; ஆசிரியர் அதிகமாக நம்பிக்கைக் கொடை மூலத்தினின்றும் எடுத்துக்கொண்டமையால் அது முற்றிலும் ஒரு புத்தமைப்பு என்று சொல்வதற்கில்லை; அது கதையின் ஒரு பகுதியாகவே உள்ளது. ஆகவே, கவிதையின் இந்தக் கூறில் அதிகமான உட்கருத்தினைப் பொருத்திப் பார்க்க முடியாது.

இருபதிற்குக்கீழ் வயதினையுடைய கவிஞராகிய ரெட்டி உயர்தர யாப்புத் திறனையும் இனிமை தரும் மொழித் திறனையும் புலப்படுத்துகின்றார். இவர் மெச்சிப் பாராட்டிய கலைமுறையைக் கொண்ட தலைவர்களுள் திக்கனரும் பிங்கலி சூரனரும் குறிப்பிடத் தக்கவர்கள். நற்பயன் விளையும் என இவர் கருதும் இடங்களிலெல்லாம் அவர்களைப் பின்பற்றினார். இவர் கவிதைகளில் இங்குமங்கும் நன்னயர் போத்தனர் இவர்களின் சாயல்களையும் காணலாம். இதனைத் தவிர, இவர் செய்யுள் நடையில் நல்ல கதை சொல்பவர் என்பதைப் படிப்போரிடம் நன்கு உணரவைக்கின்றார். பிறரை இணங்கச் செய்யும் முறையில் வாதிடும் நுண்திறமும் இவரிடம் மிகுந்து காணப்பெறுகின்றது.

முசலம்மாவுக்கும் அவருடைய கணவருக்கும் இடையே நடைபெறும் உரையாடல் மிகத் திறமையுடன் கையாளப்பெற்றுள்ளது. கடமையுணர்வுடன் மன உறுதியும் கொண்ட மனைவியும் அன்புடன் நேசிக்கும் கணவனும், துயரம் நிரம்பிய அவளுடைய முடிவான தீர்மானத்தைக் குறித்து, வாதத்திற்கு வாதம் ஈடுகாட்டியும், உணர்ச்சி நிரம்பிய கருத்துக்கு உணர்ச்சி நிரம்பின கருத்தினையே இணையாகக் காட்டியும் தோழமைப் பாங்குடன் சொற்றிறம் வாய்ந்த வாதப் போரில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளுகின்றனர். இங்கு மனைவிதான் தீர்மானமான முடிவுக் குரியவளாகின்றாள்; இது பெண்ணின் உரிமை மட்டிலுந்தான் என்று கருதுவதற்கில்லை. ஏதாவது ஓர் உதவியைத் தன்னிடம் கேட்டுப் பெறுமாறு கடந்த காலத்தில் கணவர் திரும்பத்திரும்ப வற்புறுத்தியதை அவருக்கு நினைவூட்டி அதனை இறுகப் பற்றிப் பயனை அறுதி செய்துகொள்கின்றாள். அந்தக் காலம் இவளுக்கு

இப்பொழுது நெருங்கியுள்ளது. தான் புறப்பட்டுச் செல்வதற்கு அவரிடம் பிரிவு விடை வேண்டுகின்றாள். எதிர்மறையான இசைவினை விடையாகப் பெறுதல் என்பது இவளால் இயலாது. கணவருடைய மௌனம் பாதி—ஏன் முழுமையான—உடன்பாடாகக் கொள்ளப்பெறுகின்றது. இவளும் அந்தத் தெய்விகப்—தியாகப்—பயணத்தை மேற்கொள்ளுகின்றாள்.

எல்லோரும் நன்கறிந்த பண்டைய உருக்காட்சியைக் கையாண்டிருந்தபோதிலும் முசலம்மா வெளியேறுவதற்காகப் படைக்கப்பெற்ற காட்சி இங்குப் பொருத்தமாகவும் உள்ளத்தை உருக்கும் முறையிலும் அமைந்துள்ளது:

...ஊரு ஹாரித்ரபு ஜீர சாந்த்ய ருசிகா
நொப்பார...

...
சரசீம ஹாபிகை சனியே விஸ்பாரீ பவன்
மூர்த்தியை.

அவள்,

மகிழ்வுறப் புனைந்த மஞ்சள் சேலை
கதிர்மறை அந்திக் கங்குலின் இடையே
மங்கிப் பொலிந்தது; மகிழ்வு நிரம்பிப்
பொங்கும் அவள்முகம் செஞ்சுட ரவன்போல்
ஒளியுடன் திகழ்ந்தது; நலிவுறு கூட்டம்
பறவைக் குலமெனத் துயருடன் அழுதது;
அனைவரின் மதிப்பில் உயர்வுறும் அவளோ
ஏரியை நோக்கிச் சீருறச் சென்றனள்.

அவள் குளத்தை நோக்கிச் சென்ற காட்சியைப் பற்றிக் கவிஞர் கூறுகின்றார்:

சேய்மையில் பாயும் செழுநதி கண்டு
நடன மிட்டு நடக்கும் குதிரைச்
சேவகன் ஈர்ப்பச் செல்பெண் குதிரைபோல்
நளினமும் அழகும் நணிநிறை நடையுடன்
சாந்தமும் அழகும் ததும்ப
நங்கை மெல்ல நடந்துசென் றனளே.

தெலுங்குக் கவிதையில் இது சாதாரணமாகக் காணப் பெறும் உவமை அன்று; படிப்பவர்களுள் சிலருக்கு மகிழ்ச்சி தரக் கூடிய உவமையும் அன்று. ஆயினும், ஆசிரியர் ஹோமரின் **இலியாத்**

திற்குத் தாம் கடமைப்பட்டிருப்பதை ஒப்புக்கொண்டு நன்றி தெரிவித்துள்ளார்.

நீரினுள் கதைத் தலைவியின் உண்மையான மறைவினை விரித்துரைக்கும் ஆசிரியர் தம்முடைய பண்டைய இலக்கியப் புலமை, கவிதைக் கற்பனை இவற்றின் மூலவளத்தினின்றும் அதிகமாகவே எடுத்துக்கொள்ளுகின்றார்.

கந்நெர்ர வாரிந கரக்க ரோதயகால
மல்லன மருங்கு ஜாபில்லி யனக;
ஜ்வலதக்னி சிகலபை நெலநவ்வுதோ போவு
தாத்ரீ மகாதேவி தநய யனக;
செண்டாமரலபாரு சுந்தரமகுலீல
நல்ல நல்லன ஜொச்சு நஞ்ச்ச யனக:
கால மகாஸ்வர்ணகார குண்டக்நிலோ
கரகிஞ்ச்சு பங்காரு கணிக யனக:
..............

இதன் கருத்து தமிழ்க் கவிதையில் வருமாறு:

காலையிளங் கதிரொளியால் விழுங்கப் பெற்றுக்
கலைகுறைந்து பொலிவிழந்த திங்களைப்போல்
சீலமுறு முறுவலுடன் கனலின் நாக்குத்
திரளின்கண் புகுகின்ற சீதை யைப்போல்
கோலமுற மலர்ந்திட்ட பங்க யத்துக்
கூட்டத்தே நுழைகின்ற அன்னத் தைப்போல்
காலமெனும் பொற்கொல்லன் தீயில் இட்ட
கனகம்போல் தண்புனலில் இறங்கி னாள்.
.................

சில பழைமை விரும்பிகள் கடந்த காலத்தில் குறிப்பிட்டது போல் இந்தக் கவிதை ஒரு சோதனையேயாகும் என்று புகழப் பெற்றாலும், இது பண்டைய இலக்கிய மரபின் வளையாத வரையறைச் சட்டத்திற்குள் கட்டுப்பட்ட தெளிவான வரம்புடன் கூடிய சோதனையே யாகும். தேவர்கள்—தேவதைகள், அரசர்கள்—அரசியர்கள் இவர்கள் நிறைவேற்றின அருஞ் செயல்களேயன்றி சாதாரண மக்களைச் சார்ந்த ஆண்—பெண்களினுடையனவற்றையும் கவிதையால் போற்றிப் புகழ முடியும் என்பதை எடுத்துக் காட்டிய முதல் ஆசிரியர் இவர்தாம் என்பதில்லை. ஆயினும், ஒரு குறிப்பு மட்டிலும் மீண்டும் மீண்டும் வற்புறுத்திச் சொல்லப்பெற வேண்டியதாகின்றது. இருபதிற்கும் குறைவான வயதினையுடையவர் இதனை இயற்றினார், அதுவும் தன்னம்பிக்கையுடனும்

பழுத்த கவிஞரின் மேலாண்மை உரிமையுடனும் இயற்றினர் என்பது உண்மையிலேயே மதித்துப் போற்றத் தக்கது. இங்கு மிகுதியான அளவில் நம்பிக்கை தரும் முன்னேற்றமும் இருந்தது. இந்தக் கவிதை, பண்டைய இலக்கியத்திற்கும் இக்கால இலக்கியத்திற்கும் இடையேயுள்ள நில மாறுபாட்டுக் காலத்தைக் நன்முறையில் குறிக்கக்கூடிய தொன்ருக உள்ளது என்று சொல்லலாம். இஃது இக்காலத்தைச் சிறிதளவு சுட்டிக் காட்டும் குறிப்புடன் பண்டைய இலக்கியத்தின் தாக்கத்தால் ஏற்பட்ட மாற்ற விளைவு என்பது தெளிவு. இக்காலத் தெலுங்குக் கவிதையின் முதல் தோற்றத்தை முன்னறிவித்த புரட்சியைப்பற்றி ஆராய்பவர் வேருேர் இடத்தை நாடிச் செல்லவேண்டும்.

**சிறு கவிதைகள்:** பல்வேறு சமயங்களில் இராமலிங்கா ரெட்டி இயற்றிய சிறு கவிதைகளில் அச்சில் நான்கு கவிதைகள் அழியாது வாழ்கின்றன. அவை: (1) தம்முடைய **அர்த்த சாஸ்திரமு** (1911) என்ற நூலுக்கு எழுதிய படையல் கவிதைகள்; (2) தம்முடைய **கவித்துவ தத்துவ விசாரமு** (1913) என்ற நூலுக்கு எழுதிய முகவுரைக் கவிதைகள்; (3) தாம் பிள்ளையாகக் கூட்டி வளர்த்த பெண்ணை அவள் திருமணத்தன்று வாழ்த்து கூறும் வகையில் எழுதப்பெற்ற **அம்பகாலு** (1919) என்ற தலைப்பிலுள்ள கவிதைகள்; (4) தெலுங்கு **மகா பாரதத்தைப்** புகழும் முறையில் அதற்குத் திறனாய்வு முறையில் உரை எழுத வாக்குறுதி எடுக்கும்போது எழுதப்பெற்ற **பாரத பிரகாசமு** என்ற தலைப்பிலுள்ள கவிதைகள் என்பவை யாகும். இவை யாவும் ஒன்று சேர்ந்து அச்சில் பத்துப் பக்கங்களுக்கும் குறைவாகவே வரும்.

ரெட்டியவர்கள் மைசூரிலிருந்தபோது தெலுங்கில் எழுதப்பெற்ற இந்தியப் பொருளாதார நூலுக்கு மைசூரில் இயற்றப்பெற்ற பத்துக் கவிதைகள் இந்த முதற்ருெகுதியில் அடங்கும். இந்தப் பத்துக் கவிதைகளும் கந்தம், சீதம், சீஸம், சார்தூலம், சம்பகமாலே என்ற மரபு வழி வந்த யாப்புகளில் அமைந்துள்ளன. இலக்கிய நடையில் அமைந்திருந்தபோதிலும், மொழி பொதுவாக எளிதாக இருப்பதால் கவிதையும் நீரோட்டம் போன்ற எளிய நடையில் போகின்றது. கவிதைகள் ஆசிரியரின் சொந்த உட்கருத்தையும் கொண்டுள்ளன; இவை பெயரே இல்லாத காதலி ஒருத்திக்கு அன்புப் படையலாக்கப் பெற்றுள்ளன. கவிதைகள் பண்டைய இலக்கிய வடிவில் அமைந்து, பொருளில் புதுமை உணர்வூட்டக் கூடியனவாகவும் இருப்பதால், இவை இவருடைய ஆற்றல்மிக்க உணர்ச்சிகளின் வழிந்தோடும் வெள்ளத்தை எட்டிப்பிடிக்க முயல்கின்றன. இறுதிச் செய்யுளில் தம் காதலி ஐக்கியமாகிய ஐந்து முதற்பொருள்களினின்றும் கூப்பிடுவதை ஆசிரியர் கேட்கின்ருர். உணர்ச்சியால் பாதிக்கும் கருத்துடைய

இந்த அன்புப் படையல் இவர் நிரந்தரமாகத் திரையிட்டுக் கொண்ட சொந்த வாழ்க்கையின் ஒருபகுதியைக் கணநேரக் காட்சியாகத் தருகின்றது. காரணம், இவர் திருமணம் செய்துகொள்ளவே இல்லை.

வேறொரு முறையில் இரண்டாம் தொகுதியிலடங்கிய கவிதைகளும் உணர்ச்சியால் பாதிக்கப்பெறும் கருத்துடையனவாக உள்ளன. 1913-ல் மைசூரில் எழுதப்பெற்ற **கவித்துவ தத்துவ விசாரமு** என்ற நூலின் நூன்முகம் ஆறு செய்யுட்களாலானது. இவை மரபு வழக்குப்படி பிள்ளை பெற்றோர்க்கு நல்கும் புகழுரை வடிவில் அமைந்துள்ளன. இதில் தம்முடைய தந்தை சுப்பிரமணிய ரெட்டியின் நேர்மைக்கும் புலமைக்கும் தெவிட்டும் (உவட்டும்?) அளவிற்குப் புகழுரை வழங்கப்பெற்றுள்ளது; இந்த நூலில் அவரைப்பற்றிய நினைவினை நீடித்திருக்கச் செய்ய முயல்கின்றார்.

**அம்பகாலு** (மணமகள் வழியனுப்பு விழா) என்ற தலைப்பில் மூன்றும் பகுதியில் எட்டுக் கவிதைகள் அடங்கியுள்ளன; இவை 1919-ல் பெங்களூரில் இயற்றப்பெற்றன. இங்கும்கூட, இரக்க உணர்ச்சியைத் தூண்டும் கருத்து மேலோங்கி நிற்கின்றது. எலியா (சார்ல்ஸ் லேம்ப்) தம் மாணி நிலையை விடுவிப்பதற்குக் கனவுக் குழந்தைகளைக் கொண்டிருந்ததைப்போலவே, ரெட்டியவர்கள் பெற்றோர் பாசத்தையுடைய தம் இதயத்தின் மாடக் குழியை நிரப்புவதற்குக் காலஞ்சென்ற தம் சகோதரரின் குழந்தைகளைப் பெற்றிருந்தார். உண்மையான தந்தைகூட அன்பு காட்டிய சஞ்சந்தி குமாரி என்ற தன்னுடைய உடன்பிறந்தான் மகளுக்குத் தம் இதயத்தின் இரக்க உணர்வு மிக்க ஒரு மூலை ஒதுக்கி வைக்கப்பெற்றுள்ளது. அண்மையில் நிகழவிருக்கும் அவளது பிரிவினைப்பற்றி இவர் படும் படுநோவினைக் கேட்கலாம்; இந்தச் செய்யுட்கள் ஒவ்வொன்றிலும் கண்ணீர் ஆறாகப் பெருகியோடுவதையும் காணலாம். இவளுடன் தாம் அடைந்த மகிழ்ச்சியையும் அடையாளம் காட்டுகின்றார். உணர்ச்சிகள் உண்மையாகவே உரத்து ஒலிக்கின்றன. கிட்டத்தட்ட அன்றாட வாழ்க்கை மொழிக்கு ஒத்துள்ளவாறு சொற்கள் மிகச் சிறந்த அளவுக்கு எளிமையாகவே அமைந்துள்ளன.

நான்காம் தொகுதியிலுள்ள **மகா பாரதத்தைப்**பற்றிய புகழுரையாக அமைந்த ஆறு செய்யுட்கள் மூன்றும் தொகுதியிலுள்ளவற்றை அடுத்து இயற்றப்பெற்றன. தாம் அன்பு காட்டிய மகள் ஒருத்தியின் பிரிவு நேரிட்ட பிறகு, கவிஞர் அதனாலேற்பட்ட இடைவெளியைத் தாம் அன்பு காட்டும் நூல் ஒன்றால் நிரப்ப முயல்கின்றார். பண்டைய இலக்கியங்களுள் தெலுங்கு **மகா பாரதம்** இவருடைய சிறப்பான தனிப்பற்றுக் குரியது. பொருளமைப்பிலும் நடைத்திறனிலும், கருத்தாழத்திலும் பாத்திரப்

படைப்பின் நுட்பத்திறனிலும் இவ்வுலகில் இந்த மகாகாவியத் யத்திற்கு இணையான நூல் ஒன்றும் இல்லை என்ற கருத்துடையவர் இவர். தெலுங்கில் இதற்குப் புதியதோர் உரை காண வேண்டும் என்ற தம் நம்பிக்கையை ஒரு சமயம் வெளியிட்டார். ஆனல், இந்த நம்பிக்கை, நம்பிக்கை அளவிலேயே நின்றுவிட்டது.

**நவயாமினி (1936): முசலம்ம மரணமு** என்ற தம் கவி தையை யடுத்து இஃது இவர்தம் மிக நீண்ட, மிகவும் பேரார்வங் கொண்டு இயற்றப்பெற்ற, கவிதை யாகும். உரைநடையில் அமைந்த மூன்று பக்க முன்னுரையைத் தவிர, இது முப்பதிற்கு மேற்பட்ட செய்யுட்களைக் கொண்டது. இஃது இவர்தம் வாழ்க்கை யின் பழுத்த நிலையில் இயற்றப்பெற்றது. அப்பொழுது இவர் நிறைந்த அறிவு அநுபவப் பின்னணியுடன் அறுபதிற்குக் கீழுள்ள வயதுடையவராயிருந்தார். சிறந்த கவிஞர், உயர்ந்த திறனுய் வாளர் என்ற உயர் புகழும் இவர்தம் பின்னணியாக அமைந் திருந்தது.

இந்தக் கவிதைக்குப் ''புதிய பார்வையில் பில்கணன்'' என்ற மாற்றுத் தலைப்பு பொருத்தமற்றது என்று சொல்ல முடியாது. முன்னுரையில் ரெட்டியவர்கள் சற்று விரிவாக விளக்கியது போல **பில்கணீயம்** என்ற வடமொழிக் காவியத்திலுள்ள மூலக் கதை ஒன்றுக்கு மேற்பட்ட முறையில் மறுப்புக்குரியதாகின்றது என்பதைக் காண்கின்றூர். இந்தக் கதை இளமை வளமும் அழகுப் பொலிவும் மிக்க ஆசிரியர் பில்கணனுக்கும், அழகு கொழிக்கும் காஷ்மீர இளவரசியாகிய யாமினி பூர்ணதிலகம் என்ற அவர்தம் மாணவிக்கும் இடையே ஏற்பட்ட காதல் நிகழ்ச்சிபற்றியது என் பதை பெரும்பான்மையான இந்தியப் படிப்பாளர்கள் நன்கு அறிவர். இவர் கருத்துப்படி கதையின் தாக்கம் ஒழுக்க நெறிக்கு ஒவ்வாதிருப்பதைத் தவிர, படிப்போரிடம் இதை நம்புவதில் மட்டு மீறிய மனச்சோர்வைச் சுமத்துகின்றது.

அரசியலில் குற்றச்சாட்டுத் தரப்பு வழக்குரைஞர்போல் வாதம்புரியும் ரெட்டியவர்கள் மிக்க இளமைப்பொலிவுள்ள ஆசிரி யர் ஒருவரிடம் பருவம் நிரம்பிய தன் மகளைத் தனிமையாக விட்டுவைக்க நினைத்த பொறுப்புள்ள அரசனின் முதிர் அறிவை ஐயத்திற்குரியது என்கின்றூர். அரண்மனை மாதர்ப் பகுதியைச் சார்ந்த இளமங்கையர் விழிப்பும் அநுபவமுமுள்ள மூதாட்டியரின் காவலின்றி விடப்பெறுவது அரிதாகும். இங்கு மட்டிலும் அதற்கு விதிவிலக்கு ஏன்? இது தவிர, சிறு வயதுள்ள இளைஞன் ஒருவன் குருவாக இருப்பதற்கேற்ற ஆழ்ந்த புலமையுள்ளவனுக இருக்க முடியுமா? அல்லது, அவனது தனித்திறமை காரணமாக அவன் இயற்கைப் புலவன் என்று நாம் ஊகித்துக்கொள்ள வேண்டுமா? உண்மையில் இவன் ஓர் உண்மையான புலவனுக இருந்தால்,

புலனுணர்வால் தூண்டப்பெறும் ஆசைக்கு இவ்வளவு எளிதாக இரையாக முடியுமா? அதுவும் ஓர் இளவரசி! உயர்பிறப்பின ளாகிய பெண் ஒருத்திக்கு உரிய குடும்ப மரபின் இயல்பான கட்டுப்பாட்டாலும் நாணத்தாலும் அவள் பின்வாங்கி இருக்க முடியாதா?

தீய கலை உணர்வும் தீயொழுக்கமும் உள்ள ஒரு நூல் தகுதி யற்றது என்று அதனை அகற்றிவிட்டு, தெலுங்குக் கவிஞர் தம் முடைய வழியில் கதையை வேறொரு முறையில் சொல்லத் தொடங்குகின்றார். ஆயினும், ஆசிரியர்—மாணுக்கியர் காதல் உறவு உண்மையாயிருக்க முடியுமா என்று இவர் ஐயப்பட்டாலும், இத்தகைய உறவு நிகழக்கூடியதுதான் என்பதற்கு இவர் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

முழுத் தெளிவான விளக்கத்தில் ஷாவை நினைவுபடுத்தும் முறையில் ரெட்டியவர்கள் தம்முடைய புனைவாற்றலிலிருந்தே பில்கணன் யாமினி இவர்களின் முக்கிய பண்பு நலன்களை விரித் துரைக்கின்றார். பில்கணன் நிறை இளமையைக் கடந்த நிலையி னன், ஆனால் இன்னும் முதுமைப் பருவத்தை எட்டாதவன்; நல்லது, கெட்டது என்பவைபற்றி உயர் கருத்தைக் கொண்டவன்; நேர்மையான நெறியினின்றும் வழிதவறுங்கால் தன்னைத் தானே திருத்திக்கொள்ளக்கூடியவன்; யாமினி இளம் வயதினள்; பெருந் தன்மையுள்ளவள்; மகிழ்ச்சி தோரணையை யுடையவள்; குடிப் பண்பு, அழகு இவற்றுடன் உறுதியும் திட்பமும் நிறைந்த மனத்தினள். இளகின இதயத்தையும், இனிய பேச்சையும் இரும்பு போன்ற மன உறுதியையும் உடையவள்.

இந்தக் கவிதையில் பில்கணன் யாமினியிடம் தன் காதலை உரைப்பதற்கு முன்னர் மிக அதிகமாகத் தயங்குகின்றான். தான் செய்துகொண்டிருப்பதை நன்கு அறிகின்றான்; ஆனால், தன்னுடைய முயற்சியினின்று தவிர்ப்பதற்காகவே அவளிடம் அதிகமாக அன்பு கொள்ளுகின்றான். யாமினி அவனுக்கு மறுமொழி தருவதற்கு முன்னர் அவளிடம் ஒரு மனப்போராட்டமே நிகழ் கின்றது. கவிஞர் அவளுடைய நீர் நிரம்பிய ஒளிமிக்க கண்களைக் கதிரவனும் மழையும் கலந்த கலப்பாக வருணிக்கின்றார். அவள் அவனைக் கண்டிக்கவில்லை; அவனுடைய நற்குணத்தை நினைவூட்டு கின்றாள். அவள் அவனை விலக்கவில்லை; சீர்திருத்துகின்றாள்; தன் னிலையை அடைவதற்கு அவனுக்குத் துணைபுரிகின்றாள். அவள்தம் சொற்களின் பொழிப்பு வருமாறு:

"பெரியவரே, உம்முடைய அன்பு நிலையற்ற ஒரு போலிப் புனைவு என்பதைத் தவிர வேறில்லை. அஃது உண்மையல்ல என்பதை நான் அறிவேன். தூய்மையானவரே, நான் உம்முடைய பிரதிபிம்பம் மாத்திரமே; சினங்கொள்ளாதீர்கள்; உம்முடைய

நிழலில் கவனித்துப் பேணப்பெறும் கொடி நேரிய வழியில் வள ரட்டும்.''

இது பில்கணனிடம் அவள் விரும்பிய பயனை விளைவித்தது; அது கண நேரப் பயனே. அவன் தான் வழுக்கி விழுந்த தவற்றினை உணர்கின்றான். தன்னைத் திருத்திக்கொள்ளுகின்றான்; அவள் தனக்கு ஒரு நண்பன் போலவும், மெய்யறிவாளர் போலவும் வழிகாட்டி போலவும் உதவினமைக்கு அவளுக்கு நன்றியுள்ளவனாகின்றான்.

இத்தகைய முடிவு அறநெறிப்படி மனநிறைவு தருகின்றது என்பதற்கு ஐயமில்லை. மேலும், கவிஞர் மனித இயல்பின் கரடுமுரடான ஓரங்களை வழு வழுப்பாக்குகின்றார். இருபாலாரிடையேயும் உள் மனத்திலும் ஆழ்மனத்திலும் எழுகின்ற உறவுகளின் கோணல்களை ஒழுங்காகத் துடைத்துவிடுகின்றார். இரு சாராரிடத்தும் வெந்துயர், ஏமாற்றம் இவற்றாலேற்படும் மன அதிர்ச்சியின்றிக் கதை மாந்தர்களைச் சீர்திருத்த இயலுமா என்ற வினா எஞ்சியுள்ளது. நேர்மைப் பண்பில் கதை வெற்றியடைந்தாலும், மனப்போராட்ட உறைப்பின் நாடகப் பாங்கினை அஃது இழந்துவிட்டதாகக் காணப்பெறுகின்றது. பில்கணனிடம் இயல்பாக இருக்க வேண்டிய காம உணர்வாகிய குருதி வற்றிவிட்ட பிறகு மூலக்கதை செம்மை செய்யப் பெற்றுள்ளது என்பது ஐயத்திற்குரிய மேம்பாடேயாகும். இங்குக் கையாளப்பெற்றுள்ள மொழிநடை எளிதாகவே உள்ளது; செய்யுளும் மென்மையாகவும் எளிதாகவும் அமைந்துள்ளது. ஆனால், அவரது முன்னைய இலக்கியத்தில் மாதிரியாக அமைந்துள்ள தசையும் குருதியும் பெரும்பான்மையாக இழந்த நிலையில், கவிதை சோர்வுடன் காணப்பெறுகின்றது.

கவிஞர் என்ற முறையில் இராமலிங்கா ரெட்டி 1899லிருந்து 1936-வரை அதிகமான இலக்கியப் பயணத்தை மேற்கொள்ளவில்லை என்பதை நன்கு அறிய முடிகின்றது. அவரது நடை ஓரளவு பக்குவ மடைந்துள்ளது. ஆனால், பண்டைய இலக்கிய வடிவமும் அறநிலைப் பொருளும் நிலைத்துள்ளன. தம் இளமைப் பருவத்தில் கற்பனையின் கொடுமுடிகளை அளந்திராமல் விட்டுவிட்டதைப் போலவே தம்முடைய முதிர்ந்த பருவத்திலும் நுண்புலத்தின் ஆழங்களைக் கண்டறியவில்லை என்றுதான் சொல்லவேண்டும். அவரைச் சுற்றிலும் இக்காலத்தோற்றம் என்னும் தொங்கிய நிலையில் தொழிலாளியாகவே நின்றுவிட்டார்.

## இயல் எட்டு

# திறனாய்வாளர்

**எ**டுத்ததற்கெல்லாம் குறைகூறும் ஒருவரின் விளக்க வுரைப்படி, திறனாய்வாளர் என்பவர் படைப்பு எழுத்தாளர் ஆவதற்குத் தவறிவிட்டவர் ஆவர். ஆனால், இந்த விளக்கவுரை இராமலிங்கா ரெட்டியவர்கட்குப் பொருந்தாது. படைக்கும் எழுத்தாளரின் மனத்திறனும் திறனாய்வாளரின் மனத்திறனும் வழக்கமாக விலகிக் காணப்பெறுபவை; இவை இரண்டும் இவ ரிடம் ஒருங்கே காணப்பெறுகின்றன. பெரும்பாலான பொருள் களைப்பற்றிக் கலந்தாயுங்கால் ரெட்டியவர்களிடம் சிறப்பாகக் காணப்பெறும் பகுத்தறிவுக்கொத்த அணுகு முறையும் பகுத்தா யும் முறையும் திறனாய்வாளராக அவர் பங்குபெறுங்கால் நன்கு பொருத்தமாக அமைந்தன.

**முசலம்ம மரணமு** என்ற இவரது கவிதை பண்டைய தெலுங்கு இலக்கியத்திலிருந்து இக்காலத் தெலுங்கு இலக்கியம் வரை ஒரு நிலைமாறுபாட்டினைக் குறிப்பிட்டுக் காட்டக் கூடியது என்பதாகக் கூறப்பெற்றால், இவரது **கவித்துவத் தத்துவ விசாரமு** (சொற்பொருளில் ''கவிதையின் இயல்புபற்றிய ஆராய்ச்சி'' என்பது) என்ற நூலை இக்காலத் தெலுங்குத் திறனாய்வில் பெரிய தோர் எல்லையைக் காட்டும் ஓர் அடையாளமாகக் கொள்ளலாம். இஃது ஆங்கிலத் திறனாய்வில் தரமான நூல்களாகிய சிட்னியின் **கவிதைபற்றிய காப்புரை** ஷெல்லியின் **கவிதைபற்றிய தற்காப்பு,** வொர்ட்ஸ் வொர்த்தின் **உணர்ச்சி தெரிவிக்கும் நாட்டுப் பாடல் களின் முகவுரை,** கோலரிட்ஜின் **இலக்கிய வரலாறு** ஆகியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடியதாகும். உண்மையில், அலெக்சாண்ட ரின் **திறனாய்வுபற்றிய கட்டுரை, மாத்யூ ஆர்னல்டின் திறனாய்வுக் கட்டுரைகள்** என்ற நூல்களின் தாக்க அடிச்சுவடுகளைச் சில புல வர்கள் இந்நூலில் காண்கின்றனர்.

நூல் வடிவில் முதன் முதலாக 1914-இல் வெளியிடப்பெற் றிருப்பினும், இதன் பிறப்பிடங்கள் பத்துப் பதினைந்து ஆண்டுா கட்கு முன்னதாகச் செல்லுகின்றன. 1899-இல் இராமலிங்க ரெட்டி சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் ஆந்திர பாஷாபி

ரஞ்சனி சங்கத்தின் ஆதரவில் படித்த நீண்ட ஆய்வுக் கட்டுரையொன்றில் பிங்கலி சூரனரின் பிரபந்தமாகிய **கலா பூர்ணோதயத்தைத்** திறனாய்வு செய்தார். தம் நண்பர்களாலும் ஒருசாலை மாணாக்கர்களாலும் ஊக்கம் தரப்பெற்று இதே கட்டுரையை ஒருமுறை இராசமகேந்திரபுரத்தில் படித்ததுடன் சேர்த்து இரண்டு அல்லது மூன்று முறை இதே செயலைத் திரும்பத் திரும்ப செய்தார். சென்னையில் நடைபெற்ற விழாக்கள் ஒன்றனில் தலைமை வகித்த புகழ்பெற்ற புலவரும் உரையாசிரியருமாகிய வேதம் வேங்கட்டராய சாஸ்திரி என்பார் இந்த இளம் திறனாய்வாளரின் நுண்ணறிவினையும் துணிவினையும் பாராட்டிப் புகழுரை வழங்கினார். ஆயினும், இந்தப் பேரறிஞர், சில இடங்களில் ரெட்டியவர்கள் பொருள் விளக்கம் செய்யுமிடங்களிலுள்ள தவறுகளில் கவனத்தை ஈர்த்ததோடன்றி, அவர்தம் ஆராயா முன்னுறுதி பற்றியும், மிகைபடக்கூறல் பற்றியும் எடுத்துக்காட்டுவதில் தவறவில்லை. ரெட்டியவர்களின் ஆய்வுக் கட்டுரையில் அரிய, பிறிதின் சார் பற்ற தன்மையையும் ஐயப்பாட்டுக்கு இடமில்லாத நம்பிக்கை தரும் செய்தியையும் எல்லோரும் காணத் தொடங்கினர்.

இத்தகைய புலமைமிக்க திறனாய்வின் ஒளியில் ரெட்டியவர்கள் தாம் மேற்கொண்டு வரைந்த திறனாய்வுக் கட்டுரையில் தம்முடைய சில புறக்கோடி நிலைமைகளை மாற்றிக்கொள்ள இசைந்தார்; ஆனால் இவர்தம் அடிப்படை உறுதி நிலைமாறாமல் நின்றது என்றபோதிலும் இந்தக் கட்டுரையின் கையெழுத்துப் படிக்கு ஒரு சுவையான வரலாறு உண்டு. நட்பு நிலையிலிருந்த வெளியீட்டாளர் ஒருவர் சில ஆண்டுகட்குப் பின்னர் (வாவில்லா அண்டு சன்ஸ், சென்னை) இதனை ஒரு சிறு நூல் வடிவில் வெளிக்கொணர விரும்பியபோது, ரெட்டியவர்கள் இக்கருத்தினை அறிந்து மகிழ்ந்தார். நூலின் கைப்படியைத் திரும்ப ஒருமுறை சரி பார்த்து அச்சிற்குத் தயாராக்க எண்ணிக்கொண்டிருந்தார். கேம்பிரிட்ஜில் தங்கியிருந்தபொழுதும், இந்தியாவிற்குத் திரும்பிய சில ஆண்டுகட்குப் பிறகும், இஃது என்றும் அவர் மனத்தில் இருந்து வந்தது. அவர் மைசூரிலிருந்தபோது அந்தக் கைப்படியில் கைவைக்க முயன்றார். ஆனால், அஃது இருந்த இடத்தைக் கண்டறிய முடியவில்லை. அஃது எப்படியோ தொலைந்துவிட்டது என்றே எண்ணிவிட்டார். ஆகவே, திரும்பவும் புதிதாகச் செய்யுட்களைப் படித்து முற்றிலும் புதியதொரு கட்டுரையை எழுத வேண்டியதாயிற்று. இஃது 1914-இல் **கவித்துவத் தத்துவ விசாரமு** என்ற தலைப்பில் வெளியிடப்பெற்றது. தாம் ஒரு கல்லூரி மாணாக்கனாக இருந்தபொழுது **கலாபூர்ணோயதமு** என்ற நூலைப் பற்றி எழுதிப் படித்த ஆய்வுக் கட்டுரையை உள்ளகமாகக் கொண்டு இக்கட்டுரை அமைக்கப்பெற்றது. தொடக்கத்தில் செய்ய

எண்ணிய ஒன்றைவிட இதன் நோக்கம் விரிவாகவும் நூலின் அளவு பெரிதாகவும் அமைந்தது. 1941-இல் ஆந்திரப் பல்கலைக் கழக வரிசையில் திரும்பவும் அச்சிடப்பெற்ற இந்நூல் முதற் பதிப்பின் தன் வடிவைப் பெரும்பாலும் மாற்ருமல் வைத்துக் கொண்டுள்ளது.

பிங்கலி சூரனரின் நூலைக் கலந்தாயுங்கால் ரெட்டியவர்கள் தாம் பின்னர் வெளியிட்ட **பிரபாவதீ பிரத்யும்னமு** என்ற நூலைத் தாம் முன்னர் வெளியிட்ட **கலாபூர்ணோதயமு** (இது ரெட்டியவர் களின் தனிப்பற்றுக்குரிய நூல்) என்ற நூலுடன் எடுத்துக்கொள்ளு கின்ருர். செய்யுட்களை ஆய்வதற்கு முன்னர் இரண்டு இயல்களை முகவுரைகளாக அமைக்கின்ருர். இவற்றுள் ஓர் இயல் கவிதையில் கற்பனையின் இடம்பற்றி ஒதுக்கப்பெற்றுள்ளது; மற்ருேர் இயல் பாத்திரப்படைப்பின் கலை நுணுக்கத்தைப்பற்றி நுவல்வது; இதில் பண்டைய இலக்கிய முப்பெருங் கவிஞர்களும் பிரபந்தக் கவிஞர் களும் கையாண்ட முறைகளை ஒப்பிட்டு ஆராய்ந்த முடிவுடன் இலக்கியக் கலைபற்றிய நூலில் இரண்டும் ஒன்ருந் தன்மையின் இன்றியமையாமையை எடுத்துக் காட்டுகின்ருர். **பிரபாவதீ பரத்யும்னமு** என்ற நூலில் நலிவுறும்அடையாளங்கள் தெரிவதுபற்றி இறுதி இயல் கூறுகின்றது; காதல்பற்றிய (சிருங்காரம்) கவிதையில் கலைத்திறன் அமைப்பிற்குப் பொருத்தமானது எது, பொருத்த மற்றது எது என்பதுபற்றிய தமது கருத்தையும் இங்கு முடிவுரை யாகத் தருகின்ருர்.

ரெட்டியவர்கள் கவிதையில் கற்பனைத்திறனுக்கு மிக உயர்ந்த இடத்தைத் தருகின்ருர். பல்வேறு முறைகளில் பண் டைய இலக்கியப் பற்றாளராக இருந்தபோதிலும் ரெட்டியவர்கள் உணர்ச்சியின் ஆழத்திற்கும் கற்பனையின் நேர்மைக்கும் அழுத்தம் தருவதில் வொர்ட்ஸ்வொர்த், கோலரிட்ஜ் போன்ற ஆங்கிலப் புதுமைக் கவிஞர்களில் ஒருவரை நினைவூட்டுகின்ருர். மொழி சார்ந்த புலமைக்கு இவர் மதிப்பு தருவதாக இருந்தால் அது கவிதையில் படைப்புக்கூறின் சூழ்நிலையில் அன்று தமக்கே உரிய கடுமையாகத் தாக்கும் முறையில் இவர் கூறுவது:

> இலக்கணங்கள், அகராதிகள், பண்டைய இலக்கியங் கள் இவற்றை ஓயாது பயில்வதால் கவிதைத் தேவிக்குப் புதிய ஆற்றல் சேர்வதில்லை. நீங்களே அநுபவித்து அறியாத உணர்ச்சிகளைப் பிறரிடம் எங்ஙனம் எழுப்புதல் இயலும்? உலகியல் இன்பங்கட்குக் கூருணர்வுடன் இருக்கும் சாதா ரண மனிதன் அவற்றை உணராத மரக்கட்டை போன்ற புலவரைவிடப் பன்மடங்கு சிறந்தவனுவான்.

புலமையைப் பகட்டாக வெளிக்காட்டிக்கொள்வதில் தற்பெருமை கொண்டும் வழக்கற்ற கவிதைச் சொல் வளத்தால் போர்த்தப்பெற்ற மரபு வழி உருக்காட்சிக்கு அதிகமாக இடங்கொடுத்தும் திகழும் இடைக்காலத்து பிரபந்தக் கவிஞர்களிடம் இவர் பொறுமையைக் காட்டுவதில்லை. தாம் மேற்கொள்ளும் உருக்காட்சியை (முழுமதியத்தை யொத்த முகங்கள், தாமரை இதழையொத்த கண்கள், கொடி போன்ற கைகள், கண்ணுக்குப் புலனாகாத இடைகள், அன்ன நடைகள் இவை போன்றவை) உண்மை வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கி அதிலிருந்து எடுத்துக் கொள்வதைவிட அகராதிகள் அணி இலக்கண நூல்கள் இவற்றிலிருந்து எடுப்பதை அடிக்கடி ஏளனம் செய்தார். இத்தகைய நூல்களினின்றும் திணைவளத்தைச் சிறிதும் மாற்றாமல் அப்படியே எடுத்து அட்டவணைப்படுத்திக்கொண்டு புவியியல் மாற்றங்கள், பருவ வேறுபாடுகள் இவற்றைச் சிறிதும் பொருட்படுத்தாது அவற்றை வெறுக்கும் அளவிற்குக் கையாண்டிருப்பதை நன்கு சுட்டிக்காட்டுகின்றார். அறிவுக் கூர்மையுள்ள படிப்போருக்கு இவை மிகுந்த சோர்வினைத் தருபவையாக உள்ளன.

கவிதையில் கையாளப்பெறும் மொழியில் அணிவகைகளிருப்பது ஓரளவு பொறுத்துக்கொள்ளக்கூடியதாக இருந்தாலும், அவற்றை மட்டுமீறி தேவையில்லாத இடத்திலும் பயன்படுத்துவதை ரெட்டியவர்கள் தீவிரமாக கண்டிக்கின்றார். ஒரு பொருள் ஏராளமான பொருளுடன் ஒப்பிடப்பெற்றால் உண்மையான பொருளின் வருணனை அதன் அடையாளத்தை இழக்கச் செய்து விடுகின்றது என்பது ரெட்டியவர்களின் வாதம். மரபுவழிப் புலவர்களால் வருணனை வேண்டுமென்பதற்காக வருணனை தரப்பெறுவதற்கு இவர் அதிகமான முக்கியத்துவம் தருவதில்லை. வருணனை தரப்பெறும் செயலில் மிதமிஞ்சிய செயற்கைச் சொற்புரட்டுகளைச் சேர்ப்பதையே ஓர் ஏற்பாடாக மேற்கொள்வதை இவர் சிறிதும் பொறுத்துக்கொள்வதில்லை. இந்நிலை மறைமுகமாக மொழியில் போதுமான அளவு எழுவாய்ச் சொற்கள் இல்லாமையைக் குறிப்பிடுகின்றது என்று சில மொழி நூல் வல்லுநர்கள் குறிப்பிடுவதை இவ்வாசிரியர் ஒப்புக்கொண்டார் எனத் தோன்றுகின்றது.

காவிய மாந்தர் படைப்பிலும், மரபு முறைப்படி அவர்களைப் பிரித்துக்காட்டுவதிலும் ரெட்டியவர்கள் எழுப்பும் மறுப்புகள் மேலும் உறுதியாக உள்ளன. கலைத்திறமைக்குகந்ததன்று என்று கூறுவிடினும், மனிதர் ஒருவரை முற்றிலும் உயர்ந்தவர் என்றோ அல்லது முற்றிலும் தாழ்ந்தவர் என்றோ, முற்றிலும் நற்குணம் வாய்ந்தவர் என்றோ, அல்லது முற்றிலும் கொடியவர் என்றோ இனங்காட்டுவது இயற்கைக்குப் புறம்பானது என்பதை விடாப்பிடியாகக் கொண்டிருந்தார். ஏனென்றால், அம்மனிதர் நற்

குணமும் இழிகுணமும், பெருந்தன்மையும் குறுகிய நோக்கமும், வேறு பல பண்புகளும் கலந்த கலவைக் குணமுடையவராக தான் இருக்கலாம், அல்லது இருக்க முடியும். மானிடப் பாத்திரம் முற்றிலும் மாசற்றவராகவும், அல்லது முற்றிலும் மாசுடையவ ராகவும் இருப்பதில்லை. அப்பாத்திரம் சாதாரணமாக ஒளியும் நிழலும் கொண்டதாகவும், மங்கலான பண்புடையதாகவும், அறிவு மழுங்கலாகவும், அறிவுக்கூர்மையாகவும் இருந்து கொண்டுள்ளது. வாழ்க்கையைப் போலவே, இலக்கியமும் இயற்கையாக வாழும் பாத்திரங்கள் உலவுவதாக அமைதல் வேண்டும்; இயந்திரப் படைப்பான மாதிரிப் பாத்திரங்கட்கு இங்கு இடமில்லை. பாத்தி ரங்கள் முழுத்தன்மையுடன் இலங்கவேண்டும்; ஒரு தன்மையான பாத்திரத்திற்கு இங்கு இடமில்லை. மாற்றத்திற்கு உட்பட்டவை யாக இவை அமைதல் வேண்டும்; காரணம், மாற்றம்தானே வாழ் வின் சட்டம்.

இவர் வகுத்தமைத்த ஒப்பளவு விதிகளை வைத்து நோக்கினல், இராமாயணப் பாத்திரங்களைவிட மகாபாரதத்தின் பாத்திரங்கள் விளக்கமாகவும் உயிர்த்துடிப்புடன் தோன்றுவனவாகவும் ரெட்டி யவர்கட்குத் தென்படுகின்றன. சாதாரண மக்கள் நெடுங்கால மாக மனவெழுச்சிகள், தப்பெண்ணங்கள், உறுதியற்ற நிலைகள் இவற்றிற்கு உட்பட்டிருப்பதுபோல், வீமன், அர்ச்சுனன், திரௌ பதி, துரியோதனன், பிற பாத்திரங்கள் இராமாயணத்தில் இவர் கட்கு நேரான பாத்திரங்களைவிட உட்பட்டிருப்பது இவர்களை உண்மையான பாத்திரங்கள் என நம்மை நம்ப வைக்கின்றன. இராமாயணப் பாத்திரங்களில் இராமன், இலக்குவன், சீதை, அநுமன் முதலியவர்களைப் போல பல பாத்திரங்கள் குறிக்கோள் கட்குப் பண்பிகளாக உருவகம் செய்யப் பெற்றவையாகவோ அல்லது இராக்கதர்கள், வானரங்கள் முதலியவர்களைப் போல் பழக்கப்பட்ட மாதிரிப்படிவங்களாகவோ அமைந்துள்ளன. பிரபந் தங்களில் காணப்பெறும் பாத்திரங்கள் இவற்றிற்கு முன்னர் எழுந்த இலக்கியங்களில் காணப்பெறுபவற்றின் மங்கலான மறு பகர்ப்புகளாக அமைந்து மரக்கட்டைப்போல் உயிரற்ற தோற் றத்தை அளிப்பதால் இவை பற்றி இவருக்குச் சிறிதளவேனும் மனநிறைவு தரவில்லை. நம்மைச் சுற்றிலும் காணப்பெறும் ஆண்கள் பெண்கள் இவர்களிடம் காணப்பெறும் பொதுப் பண்புகள் இப்பாத்திரங்களிடம் சிறிதேனும் இல்லாதிருப்பதால் இவர்களிடம் வளர்ச்சியும் இல்லை; மாற்றமும் இல்லை.

வேறு வகையிலும் ரெட்டியவர்கள் பிரபந்தக் கவிஞர்கட்குத் தரும் மதிப்பைவிட தெலுங்கு மகாபாரதத்தை இயற்றின பண் டைய மும்மூர்த்திகட்கு (நன்னயர், திக்கனர், எர்ரப்பிரகடர்) அதிக மதிப்பைத் தருகின்றார். தனித்துறை மரபு முறையில்

நோக்கினுல், பண்டைய மூன்று கவிஞர்களும் வட மொழியிலுள்ள ஓர் இலக்கியத்தைத் தெலுங்கில் மொழிபெயர்ப்பதில் ஈடுபட்டிருந்தனர்; பிரபந்தக் கவிஞர்களோ தம்முடைய கற்பனையிலிருந்து முற்றிலும் புதிதாக ஒன்றைப் படைப்பதில் முனைந்திருந்தனர். முற்றிலும் முரண்பாடான முறையில் பண்டைய மூன்று கவிஞர்களிடமும் பிரபந்தக் கவிஞர்களிடமிருப்பதைவிட பிறிதின் சார்பற்ற தன்மையும் கவிதைத்திறனும் அதிகமாகவே அமைந்துள்ளன. பண்டைய மூவரும் சிறந்த புலமையுள்ளவர்களாக இருந்ததுடன் உயர்தரமுள்ள கவிஞர்களாகவும் திகழ்ந்தமையே இந்நிலைக்கு உண்மையான ஒரு காரணமாகும். அவர்தம் கற்பனை கலப்பில்லாததாகவும் நன்முறையில் கட்டுப்படுத்தப் பெற்றதாகவும் இருந்தது என்பதையும், அவர்தம் பாத்திரங்கள் மிகவும் உயிர்ப்புள்ளவர்களாகவும் நம்பத் தகுந்தவர்களாகவும் இருந்தனர் என்பதையும், அவர்தம் வருணனைகள் இயற்கையாகவும் உண்மைக்குப் புறம்பற்றதாகவும் இருந்தன என்பதையும் ரெட்டியவர்கள் கோடிட்டுக் காட்டியுள்ளார். அவர்கள் மொழிபெயர்க்கவில்லை; உருவத்தையே மாற்றியமைத்தனர். படைப்புச் சார்ந்த தாயக மூலத்தின் கட்டுப்பாட்டிலிருந்தமையால் அவ்வாறு செய்வதைவிட அவர்கட்கு வேறுவழி இல்லை.

மாருக, பிரபந்தக் கவிஞர்கள் தம் சொந்தக் கதைகளையே கையாண்டமையால் அவர்கள் அதிக அளவு சுதந்திரத்துடன் இயங்கியிருக்கமுடியும் என்பதை எதிர்பார்க்கலாம். ஆனல், நடப்பு உண்மையில், அவர்தம் படைப்புகள் அச்சுவார்ப்படப் பொருள்கள்போல் இருந்தன; பிறிதின் சார்பற்ற தன்மையோ அல்லது கவிதைக்குத் தேவையான கற்பனையோ செயற்பட்டன என்பதற்குச் சிறிதளவேனும் சான்று இல்லாத முறையில்அவர்கள் படைத்த பாத்திரங்கள் பழமைப்பட்டு வளர்ச்சியற்றுப்போன நிலையில் காட்சியளித்தனர். ஒரு பிரபந்தத்திலுள்ள மாந்தரின் பெயர்கள், இடங்களின் பெயர்கள் இவற்றைத் தவிர, அது முற்றிலும் மற்ருெரு பிரபந்தம்போல் அமைந்திருந்தன. புலமையைப் பகட்டாக வெளிப்படுத்தும் தேவையற்ற நிலை அங்கு இருந்தது. ஒரு சிறந்த கவிதை உருவாவதற்குத் தேவையான இன்றியமையாத தாயக மூலங்களை இங்குக் காண முயல்வது வீணுன செயலாகும். நல்ல ஒரு கவிதையைக் காண்பதென்பதும் இத்தகைய செயலேயாகும். பழக்கப்பட்ட ஒரு படிவ முறையைப் பின்பற்ற வேண்டுமாயின் பதினெட்டு வகையான வருணனைகளும் (அஷ்டதசா வருணனைகள்) ஒன்பான் சுவைகளும் (நவரசங்கள்) ஒவ்வொரு பிரபந்தத்திலும் அமைதல் வேண்டும். உண்மையாக இவை நிகழ்ச்சிக்கு உரிமையளிக்கின்றனவா, அன்ரு என்பது யோசிக்கப்பெறவேண்டிய தொன்றன்று. நிலைமை அங்கு இல்லா

விடினும், தான் நுழைக்கும் ஒரு வருணனையின் பொருட்டாக வாவது ஒரு நிலைமையைப் புதியதாகப் புனைதல் வேண்டும். வழக்க மாகக் கதையின் உள்ளடக்கம் மிகச் சிறியதாகவே இருக்கும்; அந்தச் சிறிய உள்ளடக்கமும் நம்பத்தகுந்ததாக இராது. பொது வாக ஓர் இளவரசனுக்கும் ஓர் இளவரசிக்குமிடையே நேரிடும் அரும்பெறல் உணர்ச்சி வாய்ந்த காதலைச் சுற்றிப் பின்னப்பெறும் நிகழ்ச்சியே கதையின் முக்கிய இணைப்புத் தொடர்பாகும். காதல் தெரிவிக்கும் தூதன வடிவிலும், தலைவனின் தோழன், தலைவியின் தோழி இவர்கள் வடிவிலும் கதையின் துணை இணைப்புத் தொடர் புகள் அமைக்கப்பெறும்; பரத்தையரும் பார்ப்பனப் புரோகிதர் களும் கூட அங்கு இடம்பெறுவர். கதை கூறுவதிலும் உரையாடல் களிலும் மரபு வழி முறைப்படி அமைக்கப்பெறும் சிலேடை (இரு பொருள் தருவது), நிலவினைப் பழித்தல் (சந்திரோபாலம்பனம்), காமனைப் பழித்தல் (மன்மதோபாலம்பனம்) போன்ற உறுப்புகள் தெலுங்குப் பிரபந்தங்களின் தவறாத கூறுகளுள் சிலவாகும்.

பிரபந்த இலக்கியங்களில் சிறப்புடன் அமைந்தவை இல்லை என்பதில்லை. தம் சிறந்த பண்புகளால் மட்டிலும் குறைந்தது ஆறு பிரபந்தங்கள் தனிப்படப் பிரிந்து நிற்கின்றன. அல்லசானி பெத்தனுவால் இயற்றப்பெற்ற **மனு சரித்திரமு,** இராமராஜ பூஷணரால் இயற்றப்பெற்ற **வசு சரித்திரமு,** சேமகூர வேங்கட கவி யால் செய்யப்பெற்ற **விஜய விலாசமு** என்ற மூன்று பெரிய இலக்கி யங்களுக்குத் தெலுங்குக் கவிதையில் உயர்ந்த இடங்களைத் தரு கின்றார் டாக்டர் ரெட்டி. இந்தப் பட்டியலுடன் டாக்டர் ரெட்டி தனிப்பற்று கொண்ட பிங்கலி சூரனரால் செய்யப்பெற்ற **கலா பூர்ணோதயமு** என்ற நூலும், சிறிய அளவில் அதே கவிஞ ரால் இயற்றப்பெற்ற **பிரபாவதீ பிரத்யும்னமு** என்ற நூலும் சேர்க்கப்பெறலாம்.

இவற்றுள் சிறந்தவை கூட மகிழ்ச்சிகள்-துயரங்கள், போராட்டங்கள்-துன்பங்கள், நம்பிக்கைகள்-நோக்கங்கள் இவை யடங்கிய சாதாரண மக்களின் வாழ்க்கையின் உரு நிழலைக் காட்டவில்லை என்ற ரெட்டியவர்களின் பொதுக் குறைபாட்டி னின்றும் விலக்குப்பெறவில்லை. இவை சமூகத்தில் பொறுக்கி எடுத்த சிறந்த பகுதியினரின் இலக்கியத்திற்கு அறிகுறியாகத் திகழ்ந்தன. இந்த வகையில் ஐரோப்பாவின் சமகாலத்து இலக்கியத்தினின்றும் இவை அதிக வேறுபாட்டுடன் திகழ்ந்தவையாகும். ஐரோப்பிய இலக்கியங்கள் அரச குடியினரின் செயல்களைப் புகழ்ந்து கூறினும், அவை ஏழை உழவர்கள், சாதாரணப் போர் வீரர்கள், சிறிய கடை வைத்திருப்போர், எஞ்சிய தாழ்நிலையிலுள்ள குழுக்கள் இவர்தம் வாழ்க்கையைப் புறக்கணிக்கவில்லை. இன்றைய ஆந்திரத்தில் இலக் கியத்திற்கும் வாழ்க்கைக்கும் இடையேயுள்ள இடைவெளி மிக

விரிந்து காணப்பெறுகின்றது. ரெட்டியவர்களின் கருத்துப்படி, இது சமூக உணர்ச்சியே இல்லாத நிலையேயன்றி, உண்மை வாழ்வின் குருதியே இல்லாமையால் இலக்கியத்தில் ஒருவித சோகையையும் விளைவித்துவிட்டது. முரண்பாட்டு நாடகமும் உணர்ச்சியை எழுப்பக்கூடிய துயர் நாடகமும் அங்கு இருக்க முடியவில்லை.

**கலா பூரணோதயமு** மட்டிலும் பல்வேறு காரணங்களால் ரெட்டியவர்களின் கவனத்தில் தானுகப் புகழ் பெறுகின்றது. இவற்றுள் கற்பனையாற்றல், பொருத்தமான வருணனை, உயிரோவியம் போன்ற பாத்திரப் படைப்பு ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவற்றுடன் இடத்திற்கேற்றவாறு கவிஞர் கையாளும் யாப்புத் திறனும் அடங்கும். இதன் கதை புராணமும் புதினமும் கலந்த ஒரு கலவை; நூலாசிரியரின் தேவைக்கேற்றவாறு புராணக்கூறை விட புதினக் கூறுதான் இதில் அதிகம் உள்ளது. தொடர்ந்து வரும் நொடிக் கதைகளிலும், பாத்திரங்களின் நேருக்கு நேர் மோதல்களிலும் பயின்று மேற்கொள்ளப்பெற்ற உணர்ச்சிச் சிக்கல் அமைந்துள்ளது. அரம்பை-நாளகூபரன், கலாபாஷிணி-மணிகந்தாரன், அபிநவகௌமுதி-மதுரகலாசை போன்ற காதலர்கள் பொருத்தமாக இணைவதில் பல நேர்-ஓட்டங்களும் எதிர் -ஓட்டங்களும் உள்ளன. இவற்றுடன் சரசுவதி-சதுர்முகன், சுகத்ரி-சாலினன் என்ற திருமணமான இணைகளின் வியப்பூட்டும் அருந்திறல் புத்துணர்ச்சியும் கலந்து செல்லுகின்றது. முழுக் கதைப் பொருளிலும் பலவகைப் பெருக்கம் ஏற்படுவதற்கேற்பப் புதுமை உணர்வூட்டுகின்ற கிளைக் கதைகள் ஆங்காங்கு இணைக்கப் பெற்றுள்ளன. நாட்டுப்புறச் சோலை சூழ்ந்த பின்னணியிலும் புத்துயிரூட்டும் பேச்சு-செயல்களின் கபடில்லாத தன்மையிலும் சுகத்ரி-சாலினன் என்ற இணை செகப்பிரியரின் **விரும்பிய வண்ணம்** (As you like it) என்ற நாடகத்தில் காணப்பெறும் ரோசலிண்ட்-ஆர்லேண்டோ என்ற வன இணைப் பாத்திரங்களை நினைவூட்டுகின்றது. உணர்ச்சி தூண்டும் நிலைமைகட்குக் கொண்டு செலுத்தும் அரம்பை-நளகூபரனின் தவறுன ஆளடையாளங்கள் **தவறுகளின் கேலிக்கூத்து** (The Comndy of Errors) என்ற நாடகத்தை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது.

ஒருவர் இருப்பை மற்றொருவர் அறியாத நிலையில் செகப்பிரியரும் நெருங்கிய சமகாலத்தவர் என்பதை நாம் நினைவுகூரும் போது டாக்டர் ரெட்டி தனிச்சிறப்புக்குரிய இணையான இருவரை ஒப்பிட்டு நோக்கினுர் என்பதை அறியுங்கால் உண்மையிலேயே நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

பிற்காலத்திய இலக்கியமாகிய **பிரபாவதீ பிரத்யும்னமு** என்ற நூலில் மிகுபயன் விளைவிக்கும் பழமொழிகளையும் கூற்றுகளையும் அடிக்கடிப் பயன்படுத்துவதிலிருந்து டாக்டர் ரெட்டி அப்

பிரபந்தத்தின் நடையில் ஒருவித பக்குவத்தையும் மனித இயல்பின் அநுபவ வளத்தையும் காண்கின்றார். ஆனால், அதற்கு ஒத்தாற்போல் அவர் கவிதைக்குரிய உயிர்நிலை உறுப்பாகிய கற்பனையின் கணிசமான வீழ்ச்சியையும் காண்கின்றார். கவிஞர் சிலேடையையும் (இருபொருள் தருவது) துவியார்த்தியையும் (இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களைத் தருவது) பயன்படுத்தும் பழக்கத்திற்கு அதிக இடங்கொடுக்கும்பொழுது, இருக்க முடியாத கவிதைக்குரிய சொற்புரட்டில் ஈடுபடும் மற்றொரு பழக்கத்தினின்றும் தம்மை விடுவித்துக்கொள்ள முடியாத நிலையிலுள்ளார்.

கவிதை இலக்கியத்தில் கதையைக் கூறும்பொழுது, வரலாற்று முறைக்கு மாருக காரணகாரியத் தொடர்புடைய முறையையே ஆசிரியரின் மிகுதியாக விரும்பத்தக்க முறையாகக் கொள்வதையே டாக்டர் ரெட்டி ஆதரிக்கின்றார். ஏனென்றால், இது கலைத்திறமை வாய்ந்த நோக்கத்திற்குப் பயன் விளைவிப்பதாக அமைதல் கூடும். பாத்திரப் படைப்பு வளர்ச்சியைப்பற்றி இவர் நன்கு வரையறுக்கப்பெற்ற எண்ணங்களைக் கொண்டுள்ளார். கவிஞரின் கவனத்தை ஈர்ப்பதற்காக இவற்றை ஒவ்வொரு கட்டத்திலும் வெளிப்படுத்திக் காட்டுகின்றார். இவர் கூறுவது:

> தொகுதியாக (அல்லது இனமாக) விரித்துரைப்பது அகராதி ஆசிரியரின் பணியாகும். தனித் தன்மையளிக்கப்பெற்ற உருக்காட்சியைத் தூண்டுவது ஒரு கவிஞனின் செயலாகும். இதைச் செய்ய முடியாதவர் ஒரு புலவராக இருக்கலாம்; ஆனால் ஒரு கவிஞனுக இருக்க முடியாது. கவிஞன் தன் மனத்தில் படைத்த ஓவியம் ஒன்றைச் சொற்களின் வாயிலாகப் படிப்போர் தம் அநுபவத்தால் எய்தப்பெறுவதற்குத் துணைசெய்யும் ஆற்றலை உள்ளடக்கமாகக் கொண்டிருப்பதுதான் கவிதையாகும். வேறோர் ஆற்றினின்றும் வேறுபடாமல் ஓர் ஆற்றை வருணித்தால் அது கலையாகாது. இந்த ஆறு தனக்கே உரிய தனிச் சிறப்பினைப் பெற்றிருத்தல் வேண்டும். இம்மாதிரிதான் ஏரிகள் போன்ற பிற இயற்கைப் பொருள்களும் தனிச்சிறப்பை அடைதல் வேண்டும் ..... மானிடப் பாத்திரங்களை வருணிக்கும் பொழுதும் இத்தகைய பார்வையை இழத்தல் கூடாது.

இந்த நீண்ட காலத்திற்குப் பிறகு (முதன் முதலாக எழுதப்பெற்று எழுபதிற்கு மேற்பட்ட ஆண்டுகள் கழிந்த பிறகு) இந்தப் பொதுக் குறிப்புகள் இக்கால இலக்கியத்தைப் பற்றிய அடிப்படைக் கொள்கைகளிலும், மேனாட்டுத் திறனாய்வு முறைகளிலும் பழக்கப்பட்டவர்கட்கு சாதாரணமானவை போல் தோன்றலாம்.

ஆனால் ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு இவை மேல் காற்றின் அமைதிப்படாத உரத்துடன் அமைதியான தெலுங்கு இலக்கியப் புலத்தில் பேரடியை விளைவித்தன. மரபு வழிபட்ட சில இடங்களில் இவை புரட்சிகரமானவை எனக் கருதப்பெற்றன. பண்டைய அணி இலக்கண நூல்களினின்றும் இயல்களையும் செய்யுட்களையும் மேற்கோள்களாக எடுத்துக்காட்டி டாக்டர் ரெட்டியின் வாதங்களை எதிர்த்துத் தாக்க முயன்ற சில தெலுங்குப் புலவர்கள் இருக்கத்தான் செய்தனர். **கவித்வத் தத்துவ விசாரமு** என்ற ஆய்வு நூலை மிக விரிவாக மறுத்துரைத்த முழுமையான நூல்களும் எழுந்தன. ஆனால், புதுப்போக்கினை விரும்பும் இக்கால எழுத்தாளர்கள் கிட்டத்தட்ட இலக்கியத் திறனாய்வின் ஒரு புதிய நற்செய்தியாகக் கொண்டனர். காரணம், ரெட்டியவர்கள் கவிதையின் புறக்கூறுகளினின்றும் உள்ளமைப்பின் உயிருள்ள பகுதியிலும், மொழியியலினின்றும் தத்துவத்திலும், உடலினின்றும் ஆன்மாவிலும் திறனாய்வின் அழுத்தத்தை இடம்பெயரச் செய்ய முயன்றார்.

இலக்கியத் திறனாய்வாளர் என்ற முறையில் டாக்டர் ரெட்டி சில பண்டைய இலக்கியப் பாத்திரங்கட்குப் புதிய விளக்கம் தருவதிலும், சில நூல்களையும் ஆசிரியர்களையும் புதிய முறையில் மதிப்பீடு செய்வதிலும் கணிசமான அளவிற்குப் பங்கேற்றுள்ளார். தெலுங்கு **மகாபாரதம்** இவருடைய தனிப்பற்றுக்குரிய நூலாக இருந்ததுபோல் அதிலுள்ள திரௌபதி என்ற பாத்திரமும் இவருடைய தனிப்பற்றுக்குரியவளாக இருந்தாள். **பஞ்சமி** என்ற தம்முடைய ஐந்து கட்டுரைகள் கொண்ட நூலில் சேர்க்கப்பெற்றுள்ள கட்டுரையொன்றில் சீதையையும் திரௌபதியையும் அறிவுக் கூர்மையுடன் ஒப்பிட்டு ஆய்ந்துள்ளார். இந்த நாட்டில் சீதை ஊழிக் காலம் தொட்டு மிகச் சிறந்த பெண்ணினத்தின் மூலமாதிரியாக இருந்து வந்துள்ளாள். ஆனாலும், ரெட்டியவர்கள் பற்றுறுதி, பொறுமை, குடிப்பண்பு, துன்பத்தை அநுபவிக்கும் திறன் போன்ற சீதையின் நற்குணங்களில் தனி ஈடுபாட்டைக் காட்டுகின்றார். ஆனால் திரௌபதிதான் தன்னுடைய துணிவாலும் செயலாற்றும் திறனாலும், விரைந்து மாறும் இயல்பாலும் டாக்டர் ரெட்டியின் ஆண் இதயத்தை அதிகமாகக் கவர்கின்றாள்.

டாக்டர் ரெட்டியின் சொற்களிலேயே எடுத்துக்காட்டினால்:

திரெபதியைப்போலவே சீதையும் உலகத்தாரின் இதயத்தைக் கவர்ந்துள்ளாள்; ஆனால் அவள் இல்லத்திலுள்ள ஒரு விளக்கேயாவள்; கொழுந்துவிட்டெரியும் அனற்பிழம்பு அல்லள். பொதுமக்களுக்குரிய மன்றத்திற்கும் பொருத்தமானவள் அல்லள். இவற்றின் சுவையும் மனப்பாங்கும் இல்லாத ஓர் இல்லக்கிழத்தி இவள். இவள் சொல் நய

முடைய வாதப்போருக்கும் பொதுமன்றப் போருக்கும், நேருக்கு நேர் நேரிடும் மோதல்கட்கும் சிறிதும் பொருத்த மானவள் அல்லள். இவள் அமைப்பு முழுவதும் வெல்லம் போல் இனிமையானது; மிளகு போன்ற காரசாரத்திற்கு சிறிதும் இவளிடம் இடம் இல்லை...

..... திரௌபதியைப் பொறுத்தமட்டிலும், இக்கால அமெரிக்கப் பெண் தலைவர்களும் இவளுடன் ஒப்பிடப்பெறும் பொழுது அவர்கள் தம்மை அடிமைகளாக உணர்வர். இவளுடைய அறிவுத்திறனும் பாகுபடுத்திப் பார்க்கும் திறனும், பொது அறிவும் கூரிய அரசியலறிவும், துணிவும், உயர் பண்பும், தனிப்பட்ட சொந்தக் கவர்ச்சியும் இவளுடைய சுதந்திர உணர்ச்சிக்கு அடிப்படையாக இருந்தன. தன்னுடைய கணவன்மார்களைக் கடிந்தால் அவர்கள் இவளைக் குறை கூறுர்கள்; பிறரும் அந்நிலையில்தான் இருந்தனர். இவள் தனி முதன்மையுள்ளவள்; குறைபாடே இல்லாதவள். இவளைப் போன்றவர்கள் இவளுடன் தொடர்புள்ளவர்களால் மட்டுமன்றி எல்லாராலும் அன்பு காட்டப்பெறுகின்றனர்; இல்லை, மதிப்புடன் போற்றப்பெறுகின்றனர்; பூசனை செய்யப்பெறுகின்றனர் ..... இவர்களிடம் இவ்வுலகம் தன்னுடைய நிறைவினையே காண்கின்றது.''

நீண்டகாலமாகப் பெண்களை அழகுப்பாலார், வலுவற்ற பாண்டம் என்று கருதிப் பழக்கப்பெற்றவர்கட்கு இவளுடைய துணிவு சிலரிடம் அதிர்ச்சியை விளைவித்தல் கூடும். ஆனால் டாக்டர் ரெட்டிக்கு இவள் அன்பு, இரக்கம் இவை முதல் சீற்றம், திகில் வரையிலும்; பெண்களுக்கே உரிய அழகு முதல், ஆண்களுக்கே உரிய வலிமை வரையிலுமுள்ள எல்லாப் பண்புகளும் நிறைந்தவளாக, எல்லாச் சுவைகளின் திருவுருவாகக் காட்சி அளிக்கின்றாள். சுருங்கக்கூறின், உண்மையில் முழுமை அடைந்த பெண் என்ற டாக்டர் ரெட்டியின் உயிர் ஓவியம் போன்ற நினைவுப் படிவத்திற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகத் திகழ்பவள்.

திரௌபதியை அடுத்து வீமன் இவர் இதயத்தில் மென்மையான ஒரு **மூலையில்** இடம் பெறுகின்றான். ஒளிவு மறைவு இல்லாது திரௌபதிக்கு உதவுவதைத் தவிர, எளியவர் வலுவற்றவர் இவர்கள் பொருட்டும் உதவும் வீமனின் அருங்குணம் இவர் மனத்தைக் கவர்கின்றது. சாதாரணமாகப் பேச்சு முறையில் துரியோதனன் மகாபாரதத்தில் காணப்பெறும் நான்கு கொடியவர்களில் (துஷ்டசதுஷ்டயர்) ஒருவனாக இருக்கலாம். எனினும், டாக்டர் ரெட்டியைப் பொறுத்தமட்டிலும், இவன் நாடகமேடையில் விடுவிக்கப்பெறாத போக்கிரி அல்லன்; ஆனால் இவன் மதிப்பும்

ஆண்மையும் உடைய துன்பியல் நாடகத் தலைவன். செகப்பிரியரின் துன்பியல் நாடகத் தலைவர்களைப் போலவே, ஊழ்வலிப் பட்ட வலுவின்மையைக்கொண்டு திகழ்கின்றான்; நற்குணம் வாய்ந்த மனிதர்களிடமிருந்து வரும் அறைகூவலை எதிர்த்து நிற்க முடியாமல் இவனது செருக்கும் பொறாமையும் ஊறுபடத்தக்க நிலையை உண்டாக்குகின்றன.

பண்டைய தெலுங்கு இலக்கியங்களுள் **மகாபாரதத்தை** அடுத்து டாக்டர் ரெட்டியின் கவனத்தைக் கவர்ந்த இலக்கியம் அரங்கநாதரால் செய்யப்பெற்றதாகக் கருதப்பெறும் **அரங்கநாத இராமாயணம்** ஆகும். இஃது எதுகை நயம் வாய்ந்த ஈரடிச் செய்யுளால்—குறட்பாக்களால்—ஆனது. டாக்டர் ரெட்டி பெருவழக்காகவுள்ள நம்பிக்கைக்கு அதிக மதிப்பு தருவதில்லை; மரபு வழியாக வரும் கொள்கையையும் இவர் ஏற்றுக்கொள்வதில்லை. இந்தப் பொருள்பற்றித் தாம் கொண்ட நிலையை விளக்கும் முறையில் இவர் கூறுவது:

> 1919-இல் நெல்லூரில் நிகழ்த்திய சொற்பொழிவு ஒன்றில், அரங்கநாதரைக் கட்டுக்கதை என்றும், பொய்ப் புனைவு என்றும் விலக்கித் தள்ளினேன்; அரங்கநாதர் என்பது ஒருவருடைய பெயரா, அல்லது ஓரிடத்தின் பெயரா, அல்லது தெய்வத்தின் பெயரா என்பது இன்னும் உறுதிப் பெறவில்லை; இந்த இராமாயணத்தில் மட்டிலும் காணப் பெறும் அகச்சான்றினைத் தோற்கடிக்கக்கூடிய வேறோர் புறச்சான்றினை எடுத்துக்காட்ட இயலவில்லை; உரிமையற்ற நிலையில் கோன புத்தர்தான் இதன் ஆசிரியர் என்று கொண்டமை நேர்மையற்றது ...

டாக்டர் இராமலிங்கா ரெட்டியின் கருத்துப்படி, கோன புத்த ரெட்டிதான் இந்த நூலின் ஆசிரியர் என்று உறுதியாகக் கொள்ள முடியும். 13-ஆம் நூற்றாண்டில் காக்கதீய அரசர்கள் ஆட்சியின் கீழ் நிலமானியத் தலைவர்களின் கால்வழியைச் சார்ந்தவர் இவர். இவர் கிட்டத்தட்ட கி.பி. 1210-இல் பிறந்தவர்; இந்த இலக்கியத்தை இவர் தம் தந்தையார் விட்டலதரணி பூபாலர் என்பாரின் கட்டளைப்படிக் கிட்டத்தட்ட கி. பி. 1240-இல் இயற்றினார். அகச்சான்றினைக் கொண்டும் கல்வெட்டுச் சான்றுகளைக் கொண்டும் டாக்டர் ரெட்டி இந்த முடிவுக்கு வருகின்றார். அரங்கநாதர் என்ற பெயரைப் பொறுத்து இவருக்குக் கிடைத்த இரண்டு விளக்கங்களில் ஒன்றைச் சுட்டிக் காட்டுகின்றார்.

இந்த நூலின் ஆசிரியர் புத்த பூபதி தம் நூலைத் தம் தந்தையாராகிய விட்டலருக்கு அன்புப்படையலாக்கி இருப்பதாலும்,

விட்டலர் என்பது இறைவன் பாண்டுரங்கரைக் குறிப்பதாலும், இஃது **"அரங்கநாத இராமாயணம்"** என்ற மற்ருெரு சாட்டுப் பெயரை அடைந்திருத்தல் கூடும். இஃது ஆந்திர சாகித்திய பரிஷத்தைச் (காக்கிநாடா) சார்ந்த ஜயந்தி இராமய்ய பந்துலு என்ற புகழார்ந்த பண்டை இலக்கியப் பற்ருளரின் ஊகம் ஆகும்.

மற்ருெரு விளக்கம் பின்வருமாறு அமைகின்றது:

தஞ்சை சரபோஜி அரசர் நூலகத்தில் கிடைத்த பதின்மூன்று ஓலைச்சுவடி ஏடுகளில் சில அரங்கநாதர் என்ற பெயரைக் குறிப்பிடுகின்றன; மற்றவை புத்தபூபாலர் என்ற பெயரைச் சுட்டுகின்றன. சில ஏடுகளின் ஒவ்வொன்றின் ஆறுகாண்டங்களின் இறுதியில் காணப்பெறும் செய்யுட்களிலிருந்து டாக்டர் இராமலிங்கா ரெட்டி இந்த ஏடு குப்பய மந்திரி என்ற பார்ப்பன ஏடெழுதுவோரால் தயாரிக்கப்பெற்றது என்று முடிவு கட்டினுர். இந்தக் குப்பய மந்திரி என்பார் சாகஜி (1684-1712) என்ற மராட்டிய அரசரின் நூலகத்தில் பணிபுரிந்தவர். ஆர்வம் மிகுந்த இராம பக்தராகிய அரங்கய்யா என்பாரின் கட்டளைப்படி இந்த ஏடெழுதும் பணியை மேற்கொண்டார். இதனுல், உண்மையான நூலாசிரியர் கோனபுத்த ரெட்டியாக இருந்தபோதிலும், இந்த இலக்கியம் அரங்கய்யா என்ற பெயரையும் ஏற்று அரங்கநாத இராமாயணம் என்ற பெயரைப் பெற்றிருத்தல் கூடும் என்று டாக்டர் ரெட்டி ஒரு முடிவுக்கு வந்தார். ஆசிரியரை இனங் கண்டறிந்ததில் இவர் அதிகப் பணயம் வைக்கின்ருர்.

ஆராய்ச்சியாளர்களிடையே இந்தக் கொள்கை எல்லாவற்றையும் உட்படுத்திய கருத்தொற்றுமையைப் பெற இயலவில்லை. இன்றுவரையிலும் இந்தப் பொருளில் இதுதான் இறுதியான முடிவு என்று எவரும் உரிமை கொண்டாட முடியவில்லை. எனினும், நூலின் அழகு பற்றியும் நூலாசிரியரின் பிறிதின் சார்பற்ற தன்மையைப்பற்றியும் இரண்டு வேறுபட்ட கருத்துகள் எழவே இல்லை. பி. செஞ்சய்யா என்பரால் எழுதப்பெற்ற (1928) **தெலுங்கு இலக்கிய வரலாறு** என்ற நூலின் அணிந்துரையில் டாக்டர் இராமலிங்கா ரெட்டி கூறியுள்ள கருத்தின் போக்கினை பெரும்பான்மையான படிப்போர்கள் முழுமனத்துடன் ஆதரித்துள்ளார்கள்:

> ஆந்திரத்தில் பல வால்மீகி இராமாயணங்கள் உள்ளன; ஆனுல் கோன புத்தா ரெட்டி எழுதிய ஒரே ஒரு தெலுங்கு இராமாயணம்தான் உள்ளது. வால்மீகியின் காவியத்தில் பாமர மக்களிடையே வழங்கும் கட்டுக்கதைகளை வியக்கத்தக்க கலையார்வத்துடனும் ஆற்றலுடனும் இவர் இணைத்துள்ள அழகு என்னே! தன்னுடைய தெலுங்கு

சிறப்புத் தன்மையால் அந்தக் கவிதையின் உருவத்தையே மாற்றியமைத்துவிட்டார் என்று சொல்லலாம். தெலுங்கு மொழியில் இதைவிடப் பொது விருப்பான அல்லது சிறந்த கவிதை வடிவம் இல்லையென்றே கூறலாம். இதன் உணர்ச்சிவயமான கனிவாற்றல் ஆர்வமூட்டுவதாகவும் எதிர்த்து வெல்ல முடியாததாகவும் அமைந்துள்ளது.

இதனை டாக்டர் ரெட்டி மொழிபெயர்ப்புக்கும் மேற்பட்ட நூல் என்றே கருதுகின்றார். பல பகுதியில் இது படைப்பிலக்கியத்திற்கும் அப்பாற்பட்டதாகத் திகழ்கின்றது. இந்த இராமாயணத்தில் பிறிதின் சார்பற்ற தாயக மூலங்களாகக் கருதுபவற்றை டாக்டர் ரெட்டி அட்டவணைப்படுத்தி அடியிற்கண்டவாறு குறிப்பிடுவர்:

1. ஆரணிய காண்டத்தில் மூங்கிற் புதரிலிருந்த அரக்கன் ஒருவனை இலக்குவன் வதைத்தல்;
2. இராவணனுக்கு நற்பயன் விளைவிக்கும் முறையில் அறிவுரை கூறும் இராவணனின் அன்னையையும் அறிவுரை வழங்கும் அவளுடைய முனிபுங்கவர்களையும் நுழைத்தல்;
3. சுலோசனாவின் மிகவும் இரங்கத்தக்க கிளைக் கதை;
4. அநுமன் சஞ்சீவி மருந்தினைத் தேடுவதில் தொடர்பான நிகழ்ச்சி;
5. இராவணனின் பாதாள ஹோமம்;
6. இராமேச்சுவரத்தைப்பற்றிய புராணக் கதைகள்.

ஒளிர்கின்ற புதிய வடிவத்தில் பிரகாசிக்கச் செய்வதற்காக இராமாயணப் பாத்திரங்களைச் சீர்திருத்தி அமைத்த இந்த இராமாயண நூலாசிரியரின் சிறப்புத் தன்மையைப் புகழ்ந்து பாராட்டும் டாக்டர் ரெட்டி கவனத்தை ஈர்க்கும் இராவண பாத்திரத்தைப்பற்றிச் சிறிது தயக்கம் கொள்ளுகின்றார்:

இராவணன் வெறும் ஓர் அரக்கன் என்ற அளவில் நின்றுவிடவில்லை; இவன் ஒழுக்கத்துறையில் ஒரு புதிராகவே அமைகின்றான். சீதையைக் கடத்திச் சென்றதில் இவனுடைய உள்ளெண்ணம்தான் என்ன? சிற்றின்பத்தை நுகரவும் வஞ்சம் தீர்த்துக்கொள்வதால் நேரிடும் மகிழ்ச்சியைத் துய்க்கவும்தான் இங்ஙனம் செய்தான் என்பது வழக்கமாகக் கூறும் வரலாறு ஆகும். ஆனால், காமமாகிய இருண்ட புலத்தினூடே திருட்டுத்தனமாக விட்டுவிட்டு ஒளிரும் ஆன்மிக உள்ளெண்ணத்தின் ஒளியை, கோன புத்தர் புலப்படச் செய்கின்றார். இராவணன் கடவுளின் கைகளினால் இறப்பையும் இறவா இன்பத்தைத் தரும் வீடு பேற்றையும்

அடையலாம் என்றும், இகலோக வாழ்வை முடித்துக் கொண்டு இறைவனைக் காணும் நேர் காட்சியில் திரும்பவும் சேர்ந்துவிடலாம் என்றும் நன்கு ஆராய்ந்தே இராமனுடன் போரைத் தூண்டுகின்றான் . . . .

கும்பகர்ணன் வீடணனுக்கு வழங்கிய இறுதி உரை ''வியக் கத்தக்க அழகும் இரக்க உணர்வும் கொண்ட பகுதியாகும்'' என்று வாழ்த்துரை வழங்கிவிட்டு டாக்டர் ரெட்டி முடிவுரையாகக் கூறுவது:

மொத்தத்தில், கோன புத்தர் வால்மீகியை மொழி பெயர்த்தார் என்று சொல்லுவதைவிட ஆந்திர நாட்டுப் புறப் பெருமக்களின் வியக்கத்தக்க அருமை வாய்ந்த கற் பனையை வாங்கித் தம் காவியத்தில் ஏற்றியுள்ளார் என்று கூறுவதுதான் சாலச் சிறந்தது.

**அரங்கநாத இராமாயணம்** என்ற காவியம் மேற்கு ஆந்திரா வின் இலக்கியக் கருவூலங்களில் ஒன்று என்று டாக்டர் இராமலிங்கா ரெட்டி உரிமை கொண்டாடுகின்றார். மற்றவற்றுள் **பலா நாட்டி வீரசரித்திரமு, காட்டமராஜு கதா** போன்ற கதை பொதி நாட்டுப் பாடல்களையும், பல்வேறு **யட்சகானங்கள், ஈரடிச் செய்யுள் இலக்கியங்களையும்** (துவிபாதங்கள்), வீர சைவ இலக்கியத்தில் பெரும்பகுதியையும் சேர்த்துக் கொண்டுள்ளார். சமூகச் சீர்திருத்தத்தில் வருவதுரைக்கவல்ல நுண் நோக்கையும் ஆர்வத்தையும் வேமனர், போட்டுலூரி வீர பிரம்மம் ஆகிய இரண்டு பெரிய ஞானக்-கவிஞர்களும் இந்தப் பகுதியினின்றே தோன்றினர். பொதுமக்கட்கு உணர்வூட்டும் பொது விருப்பான தெலுங்கு இலக்கியம் (**தேசி** வகை) இராயர் சீமை ('வழங்கப் பெற்ற மாவட்டங்கள்'), தெலிங்கானு ஆகிய பகுதிகள் உட் பட்ட மேற்கு ஆந்திராவில்தான் செழிப்பாக வளர்ந்தது என் பதும், கற்றோர்க்கு விருப்பார்வமூட்டும் புலமை சான்ற இலக்கி யம் (**மார்க்க** வகை) கிழக்கு ஆந்திராவில் (சர்க்கார் மாவட்டங் கள்) தோன்றி வளர்ந்தது என்பதும் டாக்டர் ரெட்டி கொண்ட கொள்கையின் ஒரு பகுதியாகும். இத்தகைய வேறுபட்ட வளர்ச் சிக்குக் காரணங்களை ஆராயும் டாக்டர் ரெட்டி, அந்த இரண்டு பகுதிகளின் சமூக-பண்பாட்டுப் பின்னணிக்குள் நுழைந்து காண்கின்றார்:

ஏதாவது வேற்றுமை காணப்பெறுமாயின், பெரும் பாலும் தம்முடைய திராவிடப் பண்பையும் தனித்தன்மை யையும் விடாமல் கொண்டிருக்கும் மேற்குப் பகுதிகளையும்

எளிதில் அணுக முடியாத சில பகுதிகளையும் விட கரையோர மாவட்டங்கள் இயல்பாகவும் அதிகம் முழுநிறைவாகவும் ஆரியப் பண்பைத் தழுவிக்கொண்டதனு லாகும் என்று நான் கருதுகின்றேன். இந்த வேற்றுமை இந்த இரு பகுதி களிலும் தோன்றியுள்ள இலக்கியத்திலும் பிரதிபலித்துக் காட்டுகின்றதென்பதாக எனக்குத் தோன்றுகின்றது. பரந்த நோக்கத்தில் எடுத்துக் காட்டினுல் அண்மைக் காலம் வரை யிலும் இக்கால நாகரிகம் மக்கள் மனத்திலும் மனப்பான் மையிலும் பயனை விளைவிக்கும்பொழுது சர்க்கார் பகுதியில் தோன்றின இலக்கியம் முக்கியமாக வடமொழியின் மொழி பெயர்ப்புகளும் அதன் மற்றைய தழுவல்களுமாக அமைந் தது; ஆனுல் மேற்கு ஆந்திராவின் இலக்கியம் அதிகமாக உள்நாட்டு மனநிலையையும் உரமான தனித் தன்மையையும் கொண்டு இலங்குகின்றது.

உள்ளூர்ப் பற்றின் தாயகமூலம் மனம் அறிந்தோ அறியா மலோ கடந்த கால இலக்கிய மரபுரிமையைப்பற்றிய டாக்டர் ரெட்டியின் பகுப்பாராய்ச்சியில் இடம் பெற்றுவிட்டால், அது முற்றிலும் தெரிந்துகொள்ளக் கூடியதுதான். உண்மையில் இத் தகைய மேலீடான மன உணர்ச்சிகள் அவர் இங்கிலாந்தில் வாழ்ந்த காலத்தில் நாட்டுத் தலைவர்களிடம் பொதுவாகக் காணப்பெறும் உணர்ச்சிகளே என்று பிறிதோரிடத்தில் கூறு கின்ருர். அவர் காலத்தில் எஸ்ஸெக்ஸ், சஸ்ஸெக்ஸ், மிடில் ஸெக்ஸ், வார்விக்ஷயர், குளோசெஸ்டர்ஷயர் போன்ற பகுதி களில் வாழ்ந்தவர்களிடம் உள்ளூர்ப் பற்றின் காரணமாக இத் தகைய உணர்ச்சிகள் காணப்பெற்றனவாகக் கூறியுள்ளார். அவை மக்களினுடையவும் பொருள்களினுடையவுமான பெரிய நாட்டுத் தொலைநோக்கில் தலையிடாதவரையில் தீது விளையாதிருந்தன. ஆந்திராவில் சமகாலத்து நிலையைப்பற்றிய அவர்தம் விளக்கக் குறிப்பிலிருந்து டாக்டர் ரெட்டி இலக்கியம் வரலாறு போன்ற பொருள்களில் தம் மதிப்பீட்டை நுழைக்க அனுமதிக்கவில்லை என்பது தெளிவாகப் புலனுகின்றது:

இன்று நிகழ்ச்சிகள் மாறுபாடாக உள்ளன. பண் பாட்டு நிலையில் பார்க்குமிடத்து கடற்கரையோர மாவட் டங்களில் புதிதான செல்வாக்குகள் எளிதில் எட்டக்கூடிய நிலையிலிருப்பதால், அவை மேலேறும் நிலையில் உள்ளன. சமூகச் சீர்திருத்தத்திற்கும் ஏனைய தேசிய இயக்கங்கட்கும் தாயகமாகத் திகழ்கின்றன. இலக்கியத்தில், தனிச்சிறப் புடைய கலையின் நெறிகளிலும் முறைகளிலும் கூட, அவை

புதிய வகையினையும் அழகினையும் தோற்றுவிக்கின்றன. ஒரு பக்கம் ஐரோப்பிய நாகரிகமும் மற்றொரு பக்கம் வங்காள இயக்கம், ஏனைய புது மலர்ச்சி இயக்கம் ஆகியவற்றின் செல்வாக்கின்கீழும் இவை அதிக முழுநிறைவாக அமைந்து விட்டன; அதன் காரணமாக, பொருளாதார அடிப்படை யிலாயினும் சரி, ஒழுக்க நேர்மை அடிப்படையிலாயினும் சரி, வாழ்க்கைக் கவர்ச்சிகளிலும் பொதுப் பண்பாட்டு முன்னேற்றத்திலும், இவை உயர்ந்த மதிப்பு வாய்ந்த இடத் தைப் பிடித்துக்கொண்டுள்ளன.

வட்டாரச் சலுகைகள் எப்படியிருந்தபோதிலும் பொதுவாக இக்காலத் தெலுங்கு இலக்கியத்தைப்பற்றிப் பேசும் டாக்டர் ரெட்டி, பிரபந்தங்களின் காலமாகிய இடைக்காலத்தில் மூழ்கிப் போன செயற்கைத் தன்மையும் தளர்ச்சியும் நிறைந்த பழி கேடான பள்ளத்தினின்றும் அஃது எழுந்துவிட்டதைக் கண்டு தம் மகிழ்ச்சியை தெரிவித்தார். வடிவத்திலும் மொழியிலும் டாக்டர் ரெட்டி தவறுக்கு வருந்தாத ஒரு பண்டைய இலக்கிய விரும்பியாக இருந்தபோதிலும், குழப்பத்தை விளைவிக்கக் கூடிய ஏராளமாகப் பூத்துக் குலுங்கும் புதிய வடிவங்களால் அவர் மிகவும் உற்சாகம் அடைந்தார்:

> உற்று நோக்கலில் துணிகரமாக நான் செயற்பட்டதால், உரமான நாட்டுணர்ச்சி, வங்காள இலக்கியம் இவற்றின் செல்வாக்கால், தெலுங்கு ஆன்மா தன்னுடைய இலக்கியத் தில் தன்னைக் காணத் தொடங்கியுள்ளது; பல்வேறு வகை யான மனப்போக்குகளிலும் அழுத்த நிலைகளிலும் தன்னை உணர்த்தவும் தொடங்கியுள்ளது என்று சற்று மிகுதியாகவே கருதுகின்றேன். சமகாலத்திய தனித்திறமை மிக்க மனிதர் களின் தொகையும் மிகப் பெருகியுள்ளது; அவர்களால் இயற்றப்பெற்று, இலக்கிய வகைகளின் தொகையும் அங் ஙனமே மிகவும் பெருகியுள்ளது. சொற்றொடரில் எளிமை, உணர்ச்சியில் நேர்மை, இயல்பான தன்மை நவிற்சி அணிகள் ஆகியவை மீண்டும் பரந்த வழக்கிலுள்ள இலக்கிய முறை யாக வந்து கொண்டுள்ளன; நம்முடைய இலக்கியம் பிரபந்த காலத்தின் இயற்கைக்கு மாறாத தன்மைகளினின்றும் தனி முரண்பாடுகளினின்றும் விடுதலைபெற்று வெளிவந்துள்ளது. பொதுவாகக் கூறுமிடத்து இப்பிரபந்தக் காலமே நம் இலக் கியம் தளர்வுற்ற காலமாகும்.

நன்னம்பிக்கைகொண்ட அதே மன நிலையில் தொடரும் டாக்டர் ரெட்டி நடைமுறைப் பயனுக்குகந்த கருத்தைத் தெரி விக்கின்றார்:

> தேவையான பரிவும் கற்பனையும் தம்மிடத்தே கொண்ட தகுதியான புலவரொருவர் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் நம் இலக்கியத்துடன் சேர்க்கப்பெற்ற சமூக நாடகம், உணர்ச்சிப் பாடல்கள், நிகழ்ச்சியுரைக்கும் பாடல்கள், எள்ளல் குறிப்புடைய பாடல்கள், சமூக-உளவியல் அடிப்படையிலெழுந்த புதினங்கள், நகைச்சுவை பொங்கும் கதைகள், வரலாறுகள் முதலியவை அடங்குமாறு நிறைதீர்வான சமகாலத்து இலக்கிய வரலாறு ஒன்றை எழுத வேண்டும் என்று விரும்புகின்றேன்.

உண்மையிலேயே உறுதியான பரிவும் கற்பனை வளமும் அவரிடம் இருந்தன. ஆனால், நம்முடைய அவப்பேற்றின் காரணமாகப் போதுமான காலமும் ஆற்றலும் அவருக்கு இல்லை. திறனாய்வாளர் என்ற முறையில் அவர் இலக்கியத்தில் திறனாய்வுச் சிந்தனையை மரபு முறையில் குறிப்புரை தரும் போக்காகிய பழைய நீண்ட பள்ளத்தினின்றும் விடுவித்தார். பொறுப்புடன் ஆழ்ந்து கற்கும் மாணக்கருக்கு அவர் ஒரு புதிய தொலைத் தோற்றத்தைக் காட்டியுள்ளார்; நேர்மையான திறனாய்வாளருக்கு ஒரு புதிய மதிப்பீட்டு அளவுகோலை நல்கியுள்ளார். உண்மையில் அவர் புதிய திறனாய்வாளர்கள் யாவருக்கும் முதலானவர்; முன்னோடியாகவும் திகழ்ந்தவர்.

### இயல் ஒன்பது

# கட்டுரையாளர்

**க**விஞரின் மேம்பட்ட உணர்ச்சியும் திறனாய்வாளரின் அறிவுக் கூர்மையும் கொண்டிருந்த ரெட்டியவர்களிடம் கட்டுரையாளரின் இயற்கையறிவும் சேர்ந்தமைந்திருந்தது. இலக்கியத்திறனாய்வாளராக அவர் இருந்தது போலவே வாழ்க்கையின் திறனாய்வாளராகவும் திகழ்ந்தார். அவரது இலக்கியப் பணியளவு குறைவாக இருந்தபோதிலும் அவர் அறிந்த பொருள்களின் பரப்பு மிக விரிந்து கிடந்தது. கட்டுரையாளர் என்ற முறையில், தம்முடைய கட்டுரைக் கலையைத் திட்பநுட்பப் பண்புடன் சொற்சுருக்கமும்

பொருட்செறிவும் கொண்ட சொற்றொடர்களால் திகழச் செய்தார். லாம்பு, ஹாஸ்லிட், லூகஸ், கார்டினர் இவர்களுடன் சேர்ந்துகொண்டு எளிய மனப்போக்குடன் திகழும் தனி மனிதனைப் பற்றிய கட்டுரைகளைத் தீட்டும் பணியில் தம்மை உட்படுத்திக் கொள்ளவில்லை. மாண்டேய்னை நினைவுபடுத்தும் போக்கில் முறை நிரம்பா இயல்புடன் கூடிய தொனி திகழச் செய்து தாம் மேற்கொண்டு எழுதும் கட்டுரைப் பொருளில் இயல்பாக அமைந்துள்ள பளுவை நீக்க வழி வகுப்பார்.

அச்சான நிலையில் தப்பிப் பிழைத்த இவரது பெரும்பாலான கட்டுரைகளை 200 பக்கங்கட்கு மேற்பட்ட **வியாச மஞ்சரி** என்ற தலைப்பில் கிடைக்கும் தொகுதியில் காணலாம். பிற நூலாசிரியர்கள் எழுதிய நூல்கட்கு இவர் எழுதிய முன்னுரைகள், அணிந்துரைகள் இவற்றின் வடிவிலோ, அல்லது கவிஞர் ஒருவர் அல்லது அவரை ஆதரித்த புரவலர் ஒருவர் நினைவாக ஏற்படுத்தப்பெற்ற முக்கிய நிகழ்ச்சிகளில் இவர் ஆற்றிய சொற்பொழிவுகளின் வடிவிலோ பெரும்பாலான இவரது கட்டுரைகள் அமைந்திருக்கும். இவரது சொற்பொழிவுகள் இவர் படித்த கட்டுரைகள் போல் உள்ளன. மெக்காலே மேற்கொண்ட முறைப்படி இவர் ஒருநூலைப் போல் உரை ஆற்ருவிடினும் பண்டைய இலக்கிய நெறி உணர்வின் வடிவம் இவர் மனத்தில் நிலையாகப் படிந்திருந்தது. தளர்ந்த சிந்தனையையும் கவனமின்றி எழுதுவதையும் இவர் தவிர்த்தார். இந்த வகையில், இவர் தெலுங்கில் எழுதினுலும், ஆங்கிலத்தில் எழுதினுலும், இவரிடம் வேறுபாடு சிறிதும் காணப்பெறவில்லை.

இருபதிற்கும் குறைவான இக்கட்டுரைகள் பண்டைய இலக்கியம் முதல் சமகால கவிதை வரையிலும், வரலாறு சமயம் முதல் கல்வி சமூகவியல் வரையிலும் நவில்வனவாக உள்ளன. கட்டுரைப் பொருளின் தேவைக்கேற்றவாறும், நிகழ்ச்சிக்குப் பொருத்தமாகவும் இவர், வாதிடும் போக்கிலோ நொடிக் கதை கூறும் போக்கிலோ, உணர்ச்சி தெரிவிக்கும் பாங்கிலோ, மெய் விளக்கப் பாணியிலோ காணப்பெறுவார். ஆனுல், இவர் கையாளும் முறை பெரும்பாலும் முதல் விதிகளில் (First Principles) முழுக் கவனத்தை ஈர்க்கும் முறையிலும் சமகாலத்திய பிரச்சினைகளில் கூரிய உணர்வினை எழுப்பக்கூடிய முறையிலும் அமைந்து திகழும்.

நன்னயபட்டர் என்ற முதல் தெலுங்குக் கவிஞரை ஆதரித்த சாளுக்கிய அரசர் இராஜராஜ நரேந்திரனைப்பற்றிய கட்டுரை இராஜமகேந்திரபுரத்தில் (இராஜமந்திரி) நடைபெற்ற ஆண்டு விழாவில் இவர் ஆற்றிய தலைமையுரையின் புதிய பதிப்பாகும். தெலுங்கு **மகாபாரதத்தின்** மொழிபெயர்ப்பினை மேற்கொண்டதற்குக் காரணமாக அமைந்த கால இடச் சூழ்நிலைகளை விரித்துரைக்கும் பாங்கும் முன்னேடியாகத் திகழ்ந்த நன்னயரின்

பணியை விரித்துரைக்கும் முறையும் இக்கட்டுரையின் முக்கிய பகுதியாக அமைந்துள்ளது. ஆனுல், நம்முடைய வரலாற்றுணர்வு பற்றியும் அல்லது அந்த உணர்வே இல்லாத நிலே பற்றியுமான கருத்துரையை தமது முதன்மையான உரைக்கு முன்னுரையாக அமைத்துக் கொள்ளாதிருக்க முடியவில்லே. அவர் கூறியது:

> ...வரலாற்றுப் பாத்திரங்களேப் பற்றிச் சிறிதும் நினைவு கூராது புராணத் தலேவர்களே வழிபடுவது நம் மரபு முறை யின் ஒரு பகுதியாகவே இருந்து வருகின்றது. வரலாற்று உண்மைகளே நினைவுபடுத்திக் கொள்ளவும் அவற்றைப் பொது மக்களிடையே நன்கு பரவச் செய்யவுமாக அமைந்த விழா வினேக் கொண்டாடுவதில் நீங்கள்தாம் முதலிடம் வகிக் கின்றீர்கள். மற்றவர்களும் உங்கள் முன்மாதிரியைப் பின் பற்றி நடப்பார்களாக! மறு உலகில் அடையும் நற்பலனின் பொருட்டு விழாக்களேக் கொண்டாடுவதைப் போல இவ் வுலகின் இன்னலத் தொடர்புடைய விழாக்களேக் கொண் டாடாதிருப்பது எனக்கு வியப்பினைத் தருகின்றது. வர லாற்றுணர்வு நம்மிடம் இல்லாமைக்கு இஃது ஒரு சான்ருக அமைகின்றதா? இனிமேல் இக்குறையைப் போக்குவோமாக!

நன்னயரின் கலேயைப்பற்றி அவர் கூறுவது இது:

> நன்னயர் பண்டைய தெலுங்குக் கவிதையேயன்றி, தெலுங்கு உரை நடைக்கும் தந்தையாவார். அவரைப் போல் பிறர் எவரும் சிறந்த உரைநடையை எழுதவில்லே. சின்னயசூரி என்பார் **'மித்திர லாபமு'** என்ற தனது அழகான நூலே இதனை முன்மாதிரியாகக் கொண்டு அமைத்திருக்கக்கூடும் என்றே தோன்றுகின்றது.

**அபூர்வசங்க சம்ஸ்கரணமு** (திரு. கோபால் ராவ்) என்ற தலேப்பிலுள்ள கவிதை இலக்கியத்திற்குத் தாம் எழுதிய முன் னுரை எள்ளல் இலக்கியம் (அங்கத இலக்கியம்) பற்றித் தன் னுடைய கருத்துகளேப் படிப்போரிடம் பகிர்ந்து கொள்ளப் பயன் படுத்தப்பெற்றுள்ளது. அவரது குறிப்பு:

> எள்ளல் இலக்கியம்பற்றிய நூல்கள் இந்தியாவில் மிக அதிகமாக இல்லே. ஒரு வேளே வளர்ச்சிக்குகந்த நகைச்சுவை இயல்பாக நமக்கு வராதோ! பரந்த நோக்கமுடைய நகைச் சுவை நம்மிடம் இருக்கத்தான் செய்கின்றது; ஆனுல் அது தீர்மானமான பழித்துரையினின்றும் வேறுபடுத்திக் காண முடியாத நிலேயிலுள்ளது. சமயம், சமூகம் அல்லது பலருக்குப் பொதுவாகவுள்ள கருத்துகள் எள்ளலுக்குரிய இலக்குகளாக லாம்; தனிப்பட்ட ஆடவரும் பெண்டிரும் கூட இவ்வாறு

அமையலாம்.... ஆங்கில எழுத்தாளராகிய ஸ்விப்ட் என்பார் தம்முடைய ஆற்றல் வாய்ந்த நூல்களில் மனித இயல்பு முழுவதையும் பாழாக்கும் முறையில் தாக்கினர்... வீரேசலிங்கம் தம்முடைய **சத்திய ராஜா பூர்வ தேச யாத்ரலு** என்ற நூலை இவற்றை முன்மாதிரியாகக் கொண்டு அமைத்தார்; ஆனால், நமது நற்பேற்றின் காரணமாக அதனை அவ்வளவு வல்லந்தத் தாக்குதலாக அமைக்கவில்லை (அதிகமான விவரங்கட்கு **பின்னிணைப்பு-2**ஐக் காண்க).

புகழார்ந்த வரலாற்றாசிரியரும் கல்வெட்டு ஆய்வாளருமான எம். சோமசேகர சர்மா எழுதிய **ஆந்திர வீருலு** (ஆந்திராவின் வீரர்கள்) என்ற நூலுக்குத் தாம் அளித்த முன்னுரையாக அமைந்த கட்டுரையில் நாட்டுப்பற்றுக்கும் வரலாற்று அறிவுக்கும் இடையேயுள்ள தொடர்பு ஆர்ாயப் பெறுகின்றது. இந்த முக்கிய செய்திபற்றி அவர் உரக்கச் சிந்திக்கின்றார்:

> நாட்டுப் பற்றிற்கும் வரலாற்று அறிவுக்கும் இடையே நெருங்கிய, பிரிக்க முடியாத, தொடர்பு உள்ளது என்பதாகச் சிலர் உரிமை கொண்டாடுகின்றனர். ஆனால், எனக்கே உரிய ஐயங்கள் உள்ளன. அன்பும் (பக்தி) அறிவும் (ஞானம்) ஒன்றையொன்று சார்ந்துள்ள வகைகளா? ஆழ்ந்த நம்பிக்கைக்கும் இடையே தொடர்பு இல்லையா? இந்த முக்கிய செய்திபற்றி ஒருமனதான சிந்தனை இல்லை. இந்த இரண்டிலும் எப்பொழுதேனும் தொடர்பு இருந்திருக்க முடியுமா என்று நான் ஐயுறுகின்றேன்....

கல்வியின் பங்குபற்றிய ஒரு கட்டுரையில் இவர் அறிவுக்கும் (ஞானம்) செயலுக்கும் (கர்மம்) உள்ள தொடர்பு குறித்து இத்தகைய ஓர் ஆய்வில் இறங்குகின்றார். ஒரு கோவையான அடிப்படை வினாக்களை எழுப்பிப் பந்தினை உருள விடுகின்றார்:

> எது மிகவும் முக்கியம்—அறிவா (ஞானம்)? அல்லது வினையா (கர்மம்)? ஒரு பொருள் பற்றிய பல சொற்களை விரிவாக விளக்கி ஆராய்ந்தால் ஆயப்படுபொருளில் ஒரு சிறிது தெளிவாகலாம். வாழ்க்கையில் எது முதலிடம் பெறுகின்றது?—அறிவா அல்லது நடத்தையா; சிந்தனையா அல்லது குணவியல்பா; சொற்களா அல்லது செயல்களா?

தொடர்ந்து அவர் கூறுவது:

> ..வாழ்க்கை நிறைவு அடைவதற்கு அறிவு மட்டிலும் போதுமானதன்று. இயற்கையின் சட்டப்படி பின்னர்க் குறிப்பிட்டது பல வழிகளில் ஒன்றே ஒன்றாகும்......

சிந்தனைச் செயல்திறன் அறிவு அல்லது ஞானம் எய்துவதற்குப் போதுமானது; இவரைப் பொறுத்த வரையில் வாழ்க்கைக் கலை பிறபொருள்களுடன் அடியிற் குறிப்பிட்டவையும் தேவையாகும். 1. இயற்கைச் சட்டங்களைப்பற்றிய அறிவு; 2. அவற்றைச் செயற்படுத்தல்பற்றிய அறிவு; 3. வேறுபடுத்திக் காணும் உணர்வு; 4. நேர்மை உணர்வு; 5. உடல் உழைப்பு. இந்தப் பின்னணியில் நோக்கும் டாக்டர் ரெட்டி இந்தியப் பல்கலைக் கழகங்களைக் குறை கூறுகின்றார்; மேனாட்டுப் பல்கலைக் கழகங்களைப் போலன்றி இவை கடந்த காலத்திலேயே வாழ நினைக்கின்றன; மற்ற மதிப்புகளை முற்றிலும் விலக்கும் முறையில் அறிவின் முக்கியத்துவத்திற்கு அதிக அழுத்தம் தந்து ஏற்றத் தாழ்வான வளர்ச்சியடைகின்றன. கடந்த காலம் முக்கியமானது தான்; அதன்பால் நன்றியுணர்வு காட்டுதலால் மட்டிலும் முன்னேற்றத்தை அடைய முடியாது. அவர் கல்வியில் அடிப்படை மாற்றத்தை விரும்பும் கோட்பாடுபற்றிய குறிப்புரையால் சுருக்கமாகக் கூறுவது:

> . . . கடந்த காலத்தில் வாழ்வது நிகழ்காலக் கடமையன்று. கடந்த காலத்தைவிடவும் நிகழ்காலத்தைவிடவும் அதிக ஒளியுடன் திகழக்கூடிய எதிர்காலத்திற்காகக் கடினமாக உழைக்க வேண்டும். . . . செய்ந்நன்றிமறத்தல் என்ற நிகழக்கூடிய குற்றச்சாட்டிற்குச் சிறிதும் அஞ்சாது பல்கலைக் கழகக் கல்வித் திட்டத்தை சீர்திருத்தும் போக்கில் முன்னேறிச் செல்ல வேண்டும்.

டாக்டர் ரெட்டியவர்கள் திருமணமாகாத மாணி (Bachelor) யாக இருந்தபோதிலும், திருமணத் திட்டத்தில் எழுச்சியான அக்கறையைக் காட்டுகின்றார். பண்டைய இலக்கியங்களை ஆழ்ந்து கற்ற மாணாக்கன் என்ற முறையில் இந்துக்களின் பண்டைய திருமண முறையில் நிலவும் பலவகைப்பட்ட மரபினைப் பற்றி நன்கு சிந்தித்துள்ளார். திருமணம்பற்றி இவர் எழுதிய கட்டுரைகளில் ஒன்றில் இராக்கத மணத்தைச் சார்ந்த 'சுயம் வரம்' என்ற முறை என்றாவது நடைமுறையிலிருந்ததா என்ற வினாவினை எழுப்பி அதற்கு உடன்பாடான மறுமொழியையும் தந்துள்ளார். இவரது பொருள் விளக்கம் பிறிதின் சார்பற்றும் சிந்தனையைத் தூண்டும் முறையிலும் அமைந்துள்ளது:

> இந்தத் திருமணம் நிகழும் சூழ்நிலைகளிலிருந்து, இது தன்னிச்சையாக நடைபெறுவது அன்று என்பதை மெய்ப்பிக்கலாம். திருமணவிழா அறிவிப்பு செய்வதற்கு முன்னர் நாளும் ஓரையும் (நற்குறியான நேரம்) உறுதி செய்யப்

> பெறுகின்றன. மணம் கேட்பவர்களுள் திருமணப் பெண்ணின் மனத்திற்கொத்த ஒருவர் இருப்பார் என்பதற்கு என்ன உத்தரவாதம் உள்ளது? அவள் எதிர்பார்ப்பதற்கு ஏற்றவாறு ஒருவரும் இல்லாவிடில், அவள் அனைவரையும் மறுத்து விடுவதற்கு அவளுக்கு உரிமை உண்டா?...... திருமணப் பெண்ணின் விருப்பத்தைவிட ஓரைதான் அதிக முக்கியம் என்பதாக என் மனத்திற்குப் படுகின்றது. ஏனென்றால் மணப்பெண் யாராவது ஒருவரை மணம் புரிந்து கொள்ளக் கடமைப்பட்டவளாகின்றாள்.... எம்முறையிலேனும், ஒருவரைத் தவிர திருமணம் பேசும் அனைவருமே திருமணப் பெண்ணின் தந்தையைத் தாக்குவது உறுதி. ஆகவே, சுயம்வரம் என்பது திருமணப் பெண்ணின் விருப்பத்திற்கேற்ப நடைபெறுவதென்றது ஐயமே; அஃது இராக்கத மணமுறையின் ஒருவித மாற்றமே யாகும்.

டாக்டர் ரெட்டி தன்னுடைய வாதத்தை வலிமை பெறச் செய்வதற்கு வீடுமன் தன்னுடைய தம்பி விசித்திர வீரியன் திருமணத்தின் பொருட்டுக் காசியரசனின் மூன்று குமாரிகளைக் கவர்ந்தமை, (சிவதனுசை முறித்தலோடு) சீதையின் சுயம்வரம், (மீன் பொறியைத் தாக்குதலோடு) திரௌபதியின் சுயம்வரம் உட்பட எல்லோருமறிந்த பல்வேறு எடுத்துக்காட்டுகளைத் தருகின்றார். ஏற்கெனவே தமயந்தி நளனைக் காதலித்தமை யாவரும் அறிந்ததால் அவள் சுயம்வரத்திற்கு விதிவிலக்கு அளிக்கின்றார். இவர் கூறுவது:

> சீதையும் திரௌபதியும் உண்மையில் சூதாட்டத்தில் வைக்கப்பெறும் பணயப் பொருள்கள் போன்றவர்கள். திருமணத்தில் அவர்கள் விரும்பிக் கணவன்மார்களைத் தேர்வு செய்வதற்கு அவர்கட்கு உரிமை இல்லை. இந்த இரண்டு பேர் விடயத்திலும் தேர்வுமுறை வலுவைப்பற்றி இருப்பதால், இராக்கத மணமுறையில் இவர்கள் தரப்பெற்றார்கள் என்றே கருதுதல் வேண்டும்.

இன்றும் மணமகள் வாழைக் குருத்தினை வெட்டும் வினைமுறை வழக்கிலிருக்கின்றது. இந்த வழக்கு இந்த மணமுறையின் எஞ்சியுள்ள பகுதிகளைக் குறிப்பிடுகின்றது. இதனைப்பற்றி டாக்டர் ரெட்டி சுருக்கமாகக் கூறுவது:

> என்ற போதிலும், இராக்கத மணம் எல்லாக் காலங்களிலும் எல்லா நிலைகளிலும் வெறுப்பைத் தருகின்ற முறை என்று கருதுவது பெருந்தவறு: அதில் எல்லா நிறைகளும் ஒளியும் இல்லாதிருப்பது என்பதில்லை. ஆதலால்தான்

பழைய காலத்து அரசர்களால் இம்முறை ஆதரிக்கப்பெற்றது. இராக்கத மணத்துடன் (கவர்ந்து திருமணம் செய்தல்) இணைந்திருந்த மானக்கேட்டின் காரணமாக 'சுயம்வரம்' திருமண முறை நாளடைவில் வழக்கற்றுப் போயிருக்கலாம். காந்தர்வ முறைக் (காதல் முறை) திருமணத்தைப் புகழ்ந்து கூறும் டாக்டர் ரெட்டி பின்வருமாறு குறிப்பிடுவர்:

> ஆண்-பெண்ணின் அடிப்படை இயல்பூக்கங்களை யொட்டி காந்தர்வ மணம் அமைகின்றது. நம்முடைய பெருமக்கள் இம்முறை சமயவினையற்றிருப்பதாகக் கருதுகின்றனர். சுருங்கக் கூறினுல், காந்தர்வம் எல்லா மந்திரங்களைவிடவும் வேதங்களைவிடவும் மனிதன் படைப்பைப்போலவே மிகப் பழைமையானது. இது மிக உயர்நிலையிலும் மிக நல்ல நிலையிலும் இருப்பதான மனிதன் கொள்ளும் அன்புக்கு (காதலுக்கு) எக்காலத்திலும் நிலைத்திருக்கும் எடுத்துக்காட்டாகும். ஆணும் பெண்ணும் உயிரோடிருக்கும் வரையில் இது வழக்கற்றுப் போகாது.

டாக்டர் இராமலிங்கா ரெட்டி சமயப் புறப் பகட்டினை விரும்பக் கூடியவர் அல்லர். உண்மையாகவே, மரபுவழியமைந்த இந்துக்களின் 'கர்மகாண்டத்திற்கு' அறிகுறியாகத் திகழும் விரிவான சடங்கைச் சிறிதும் விரும்பாதவர்; அதனைக் கண்டு தம் பொறுமையையே இழந்தவர். இந்துக்களின் கடவுட்பற்று மிக்க கோயில் வழிபாடு இவரிடம் வெறுப்பைத்தான் உண்டாக்கியது. அதனை இவர் ''மனிதன் கோயில் குருக்களைத் தரகராகக் கொண்டு தன்னைப் படைத்த ஆண்டவனிடம் சொந்த பேரம் பேசுவதாகும்'' என்று விரித்துரைக்கும் அளவிற்குச் சென்றுவிட்டார்.

இந்து சமயத்தின் படிவளர்ச்சியில் பஜனைக் குழாங்களின் பங்கு என்ற பொருள்பற்றிய இவர்தம் கட்டுரையில் இதுவும் இதுபோன்ற மனத்தைப் புண்படுத்தும் சொட்டுரைகள் காணப் பெறுகின்றன. கிறித்துவர்களிடமும் இஸ்லாமியர்களிடமும் காணப்பெறும் சமயத்திருக்கூட்ட வழிபாட்டு முறையால் பெறும் பொது நன்மைபற்றிய கருத்திற்கு மாருக, இந்துக்களின் சிந்தனையில் பொதுவாகத் தனி ஒருவர் வீடுபேறு அடையும் கருத்து முதன்மையாக இருப்பதைக் காணும் ரெட்டியவர்கட்குச் சிறிதும் மகிழ்ச்சி இல்லை. கிறித்தவர்கள்-இஸ்லாமியர்களைப் போலவே சீக்கியர்களும் குருநானக்கின் தலைமையில் திருக்கூட்ட முறை வழிபாட்டையே மேற்கொண்டனர். நாட்டுப் புறங்களில் சிறப்பாக இந்து சமூகத்தினரிடையே காணப்பெறும் கிட்டத்திட்ட இதுபோன்ற அணுகும் முறை பஜனைக் குழாங்களின் அமைப்பாகும்.

இத்தகைய குழாங்கள் சிதைந்து அவற்றின் இடத்தில் பார்ப்பன குருக்கள் மீட்டுயிர்ப்பு பெற்றுப் பூசையினை மேற்கொண்டிருக்கும் நிலையினைப்பற்றித் தம்முடைய கழிவிரக்கத்தைப் புலப்படுத்தும் ரெட்டியவர்கள் தம்முடைய கட்டுரையில் கூறுவது:

> *பஜனைக் குழாத்தை ஒரு திருக்கோயிலாக மாற்றியமைத்தால் கடவுளுக்கோ அல்லது நாட்டிற்கோ யாதொரு நன்மையும் தரவில்லை. ஒரு திருக்கோயிலை ஒரு பஜனைக் குழாமாக மாற்றியமைத்தல் கடவுளின் மிகுபுகழும் மக்களின் பெருமையும் அதிகமாகின்றன.*

## இயல் பத்து

# சமூக அறிவியலறிஞர்

அளவிலும் எல்லைப் பரப்பிலும் **பாரத அர்த்த சாஸ்திரமு** என்ற நூல்தான் ரெட்டியவர்களின் நூல்களுள் பேரவாவினை எழுப்பவல்லது என்று கருதலாம். இது 450 பக்கங்களைத் தாண்டியுள்ளது. இந்தியப் பொருளியல்பற்றிய புறப்பகட்டான நூலாக இருப்பினும் இஃது இந்திய சமூக மரபுபற்றிய ஆசிரியரின் சொந்த விளக்க உரையாகும். கௌட்டில்லியரின் **அர்த்த சாஸ்திரம்** மௌரியர் காலத்து இந்தியப் பொருளியலை விளக்கியுரைப்பதை விட ரெட்டியவர்களின் **அர்த்த சாஸ்திரமு** இவர் காலத்து இந்தியப் பொருளியலைக் குறுகிய பாடத்தொகுதியின் எல்லைக் குட்படுத்தும் முறையில் மட்டிலும் எடுத்துரைக்கும் நூல் அன்று. 1909-12ல் தாம் பேராசிரியராக இருந்த காலத்தில் மைசூர் பல்கலைக்கழக மாணுக்கர்கட்கு இந்தியப் பொருளியல்பற்றித் தாம் நிகழ்த்திய சொற்பொழிவுகள்தாம் இந்நூலின் மூலமாக அமைந்துள்ளது என்பதற்கு ஐயமில்லை. ஆனால், இஃது உண்மையில் இந்தியாவும் மேல்நாடுகளும் எதிரெதிரான நிலையில் தம்முடைய முக்கியமான பொருளாதார மூலவளங்களை எப்படி ஒழுங்கு படுத்துகின்றன என்பது பற்றித் தாம் நினைப்பதன் சுருக்கத்தைச் (சாரத்தை) தெரிவிப்பதாக நூல் அமைந்துள்ளது. தம்மால் முடியும் அளவிற்கு நீளமாகவும் வலிமையளிக்கும் முறையிலும்

இந்தியாவைப்பற்றித் தெரிந்துகொள்ளும் அளவிற்குளழுதப்பெற்ற ஒரு கட்டுரையாகும் இது.

ஒருவேளை இதுகூட அறிவுத்துறை விளக்க ஏட்டுத் தொகுதியில் தெலுங்குமொழி உணர்த்தும் வகையைப் பயன்படும் முறையில் மேற்கொள்ளப்பெற்ற முக்கியமான முதல் சோதனையாகவும் இருந்தது என்றும் கூறலாம். இது பாராட்டும் அளவுக்கு ஒரு நல்ல நடையையும் புத்துயிர் கொடுக்கும் பிறிதின் சார்பற்ற அணுகும் முறையையும் கொண்டிருந்தது. ஒரு புதினத்தைப் படிப்பதுபோல் அமைந்த இந்நூலின் ஆசிரியர் கூறிச் செல்லும் போக்கிலும் விளக்கிச்செல்லும் முறையிலும் மிகச் சிறந்த திறனுடன் திகழ்கின்ருர்.

இந்திய மரபுப்படி வாழ்க்கையின் அடிப்படையான, அடைய வேண்டிய நான்கு குறிக்கோள் பொருள்களைச் (அறம், பொருள், இன்பம், வீடு)[1] சுட்டும்முறையில், டாக்டர் ரெட்டி **அர்த்தம்** அல்லது பொருட் செல்வத்தைத் தாழ்வாகக் கருதும் போக்கினைக் கண்டிக்கின்ருர். இத்தகைய போக்கு உண்மையானதுதான். பாசாங்கு அன்று என்றிருந்தபோதிலும், இது நல்லறிவுடையதாக இருக்க முடியாது. ஏனென்ருல் இவ்வுலகில் பொருட் செல்வமின்றிப் பயனுள்ள எதனையும் அடைய முடியாது. வணிகர்களில் சிலர் நேர்மையற்ற முறையில் செல்வத்தைப் பேரளவில் குவித்திருந்த போதிலும், செல்வமனைத்தும் தகாத முறையில் திரட்டப்பெற்றதன் விளைவே என்று எளிதாகப் பொதுப்பட அமைத்துக் கூறுவதை அறிவற்ற செயல் என்று எள்ளி நகையாடுகின்ருர். செல்வம் என்பது பாவத்தின் விளைவே என்ற இந்துக்களின் நம்பிக்கையையோ, எல்லாச் சொத்தும் களவு முறையில் சேர்ந்ததே என்ற மார்க்ஸின் எண்ணத்தையோ இவர் ஒப்புக்கொள்வதில்லை. நேர்மையே மிகச் சிறந்த கோட்பாடு என்ற ஆங்கில முது மொழிக்கு இவர் இணக்கம் தெரிவிப்பார்.

நாம் ஆன்மிக நலன் அடைய வேண்டுமாயின் பொருட் செல்வத்தை வெறுத்தொதுக்கவேண்டும் என்று பெருவழக்காகவுள்ள இந்துக்களின் எண்ணத்தை மாறுபடச் செய்வதே இந்த நூலில் இவர்தம் இடைவிடாத முயற்சிகளுள் ஒன்ருக உள்ளது. இந்த எண்ணம் மக்களிடம் செயலின் முதற்படியையும் கடுமையாக உழைக்கும் திறமையையும் சிதைக்கும் பயனை விளைவிக்கும் என்பதும் வாழ்க்கை நிலைகளை மேம்படச் செய்யும் ஊக்கத்தை

---

1. வடமொழியில் இவை **தர்மம், அர்த்தம், காமம், மோட்சம்,** என்று நான்கு புருஷார்த்தங்களாக உரைக்கப்பெறும். புருஷன்–மனிதன்; அர்த்தம்-அடைய வேண்டிய பொருள்.

யும் முயற்சியையும் வற்றச் செய்துவிடும் என்பதும் இவர்தம் சொந்தக் கருத்தின் போக்காகும். மேலும் இத்தவருன எண்ணம் பொருளாதார முன்னேற்றத்திற்கு நிகழக்கூடிய மிகப் பெரிய தூண்டுவிசையின்மையையும் தோற்றுவிக்கச் செய்யும். பொருட் சிறப்பின்றி அறத்தை நிலைநிறுத்த முடியாது என்று கருதுபவர் களுடன் இவர் ஒத்துப் போகின்றார்.

அறத்தை மேம்படச் செய்வதற்கும் நாட்டை முன்னேற்றம் அடையச் செய்வதற்கும் இவர் வற்புறுத்தும் பண்புகளுள் மிகவும் முக்கியமானவை: 1. கடுமையான உழைப்பு (உடலுழைப்பு உட்பட); 2. ஒன்றோடொன்று தொடர்புள்ள திறமை (அல்லது தகுதி)யும் தன்னம்பிக்கையும்; 3. இயற்கைச் சட்டங்களைப் பற்றிய அறிவு (இது ஐரோப்பியர்கட்கு நீராற்றல், மின்னுற்றல் கனிப் பொருள் படிவுகளின் எதிர்கால வாய்ப்புகள் இவற்றைப் பயன் படுத்த உதவியது; இதனால் இறுதியாக அவர்கள் கைத்தொழிலி லும் வாணிகத்திலும் வெற்றிபெற முடிந்தது); 4. தொலை நோக்கம் - இதனுல் ஆங்கிலேயர்களும் அமெரிக்கர்களும் நீண்ட— எல்லைத் திட்டங்களில் இறங்க முடிந்தது; இவை உடனடியாக உற்பத்தி செய்யக்கூடிய நிலையில் இல்லாதிருப்பினும், எதிர்காலத் தலைமுறையினருக்கு உதவக்கூடியவை) 5. கூட்டு வாணிகத் தலைமை; இது முதலீடு செய்வதில் கொண்டுசெலுத்தியதுடன் துணிவான மனநிலையை அடையவும் துணிகரச் செயலில் இறங்க வும் செய்தது (இங்கு இவர் ஐரோப்பியர்களின் தாமாக வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்ளும் விருப்பத்தினை இந்தியர்களின் அரசுப் பணியைச் சார்ந்திருக்க நாடும் விருப்பத்துடன் ஒப்பிட்டு வேறுபாடுகளைப் புலப்படுத்துகின்றார்).

இதே வாதமுறையைத் தொடர்ந்து இவர் எளிய வாழ்க்கை யையும் உயர்ந்த சிந்தனையையும் உண்டாக்கும் எனக் கருதப் பெறும் மனநிறைவு, சொந்தத் தேவைகளைக் குறைத்துக்கொள் ளல் போன்ற 'புண்ணியச் செயல்கள்' என்ற இந்துக்களின் குறிக் கோள் நெறியைக் குறை கூறுகின்றார். இந்நெறிக்கு மாருக மேல் நாடுகளில் உள்ளது போலவே, இவர் ஒவ்வொருவரையும் நல்ல குறைவறு செயல் நிலையில் வைக்கக்கூடிய 'தெய்விக உள்ள நிறை வின்மை' என்ற உணர்வு, போட்டி மனப்பான்மை இவற்றை ஆதரிக்கின்றார்.

அண்மை நூற்றுண்டுகளில் ஐரோப்பிய சமுதாயத்தை ஒப் பிட்டு நோக்க இந்தியச் சமுதாயத்தின் தளர்ச்சியைக் கண்டு இவர் அடியிற் குறிப்பிட்டுள்ள காரணக்கூறுகள்தாம் இந்நிலைக்குப் பொறுப்பானவை என்று இனங்காட்டுகின்றார்:

1. இறுதியாக இன ஆண்மைத் தனத்தைப் போக்கக்கூடிய குறுகிய கருத்துகளின் அடிப்படையிலமைந்த தன் - இன மணத்தின்

விளைவாக நேரிடும் தன் - இனப் பெருக்கம் (இனக் கலப்பால் உண்டாகும் நற்பயன்கள் முற்றிலும் மறக்கப்பெற்றன); 2.சிறுவர் மணங்கள்—மணமகன்மார்கள் மிக வயதானவர்களாக இருப்பின், இவை இள வயதுள்ள கைம்பெண்களையும், வேறு பல சமூகக் கேடுகளையும் விளைவிக்கும்; 3. ஊட்ட வளக் குறைவு—உணவு போதுமான விட்டமின் சத்துகளின்றி இருப்பினும், தேவைக்குக் குறைவாக இருப்பினும், உணவுகொள்ளும் பழக்கங்கள் ஒழுங்கின்றி இருப்பினும் மக்கள் படிப்படியாக நலிந்து போவர்; 4. குடியிருப்பு வசதிக் குறைவுகள்-தொழிற்சாலைகளிலும் குடியிருக்கும் இல்லங்களிலும் நல்ல காற்றேட்டமின்மை, உடல் நலத்திற்குகந்த வேறு வசதிகள் (கேட்பரிஸ் 'போர்ன்வில்லே' தொழிலாளர்கள் குடியிருப்பு, லெவர்ஸ்சன் லேட்துறைமுகம், கார்னெஜிஸ் பிட்ஸ் பர்க் குடியிருப்பு, ஆகியவை உற்பத்திப் பெருக்கத்திற்குத் துணை செய்வதாகக் கூறப்பெறுகின்றன) 5. தற்காலத்துப் புதிய தொழிலாளர் சமூகத் தேவைக்கேற்ற பயிற்சியால் பெறும் புதிய தொழில் திறன்களைக் கற்பதில் விருப்பமில்லாமை; 6. சாதி அமைப்பு முறை - இது சமூகப்பாளங்களையும் எளிதில் இயங்கும் நிலைக்குறைவையும் விளைவித்து விடுகின்றது. ஒரு குறிப்பிட்ட சாதியில் பிறந்த ஒருவரின் இயற்கை விருப்பம் எப்படியிருப்பினும் அச்சாதியுடன் இணைந்துள்ள தொழிலையே கவனிக்கவேண்டும் என்று கருதப்பெறுகின்றது. நாம் தம் தொழிலை மாற்றிக்கொள்ள விரும்பினுல் தம் சாதி முறையை அல்லது பெருமையை இழக்காமல் அங்ஙனம் செய்து கொள்வது நிகழக்கூடியதன்று. ஏற்கெனவே இந்து சமூகத்திலேயே அமைந்துகிடந்த ஊழ்வலிக் கொள்கையின் தத்துவம் பெருகுவதற்குத்தான் இம்முறை பயன் பட்டு, தொழிலில் அவர்தம் இயல்பான உணர்ச்சியார்வத்தைச் சிதைத்தது; 7. சமூகக் கேடுகள்-கூட்டுக் குடும்பம் முறையை அவற்றுள் ஒன்ருகத் தருகின்ருர். பெரும்பாலும் ஒருவர் பிழைப்புத் தொழிலை மேற்கொண்டிருக்கும்பொழுது, தாம் ஒன்றுமே செய்யாதுள்ள மாமன், சிற்றப்பன்மார், உடன் பிறந்தார் மக்கள், அத்தை, மாமன், சிற்றன்னை, பெரியன்னை ஆகியோரின் பிள்ளைகள் முதலியோர் அடங்கிய பெருங் கூட்டம் இவரைச் சார்ந்துள்ளவர்களாக இருந்து இவர்தம் உழைப்பில் வாழ்வார்கள். இம்முறை நோய்வாய்ப் பட்டிருத்தல், வேறு சொந்த முறையில் நேரிட்ட இன்னல்கள் காரணமாக ஒருவித காப்புறுதியாக இருக்கக் கூடுமாயினும், கூட்டுக்குடும்பம் பல்வகைக் கேடுகளில் ஒன்ருகிய சோம்பலை உண்டு பண்ணுவதில் சென்று முடியக்கூடும்.

மரபுரிமையாக வரும் இரத்தல் வாழ்க்கையும், பொதுவாக பிச்சை எடுக்கும் போக்கும் இவரால் குறிப்பிடப்பெறுகின்றன. மற்றைய சாதியினரின் வள்ளண்மையினுல் இச்சாதியினர் பல்

வேறு வடிவங்களில் 'தானம்' என்ற பெயரால் பெற்று வாழக் கூடியவர்களாகப் பாவிக்கப்பெற்ருலும், இவர்கள் மற்றவர்களின் செலவில் வாழ்வதை ஒரு புண்ணியச் செயலாகச் செய்து கொண்டனர். இம்முறை ஒரு சமூகத்தில் பிறரை ஒட்டி வாழும் ஒருவித 'அட்டைப் பண்ணை' ஊக்குவிப்பதைத் தவிர, பலரிடம் பொருளாதார நிலைகளில் தன்னம்பிக்கையை அரித்துத் தின்னும் விளைவினை உண்டாக்கிவிடும். இது சமூகத்தில் நலத்தை விளைவிக்கும் செல்வாக்கினையும் இல்லாது செய்துவிடக்கூடும்.

இந்திய நோயுணர்வை இவ்வாறு விரிவாக நுணுகி ஆய்ந்துணர்ந்த பின்னர், இதனைப் போக்க டாக்டர் ரெட்டி கூறும் நோய் நீக்க மருந்து என்ன என்று கேட்கத் தோன்றுகின்றது. முக்கியமாக இவர் மூன்று வழிகளைக் குறிப்பாகத் தெரிவிக்கின்ருர்; 1. பல்வேறு துறைகளில் அதிகமாகத் தனிப்பட்டோரின் முயற்சி; 2. பேரளவில் தொழில் நிறுவனங்களை ஏற்படுத்தல்; 3. மக்கள் அன்ருட வாழ்வில் துய்க்கும் பொருள்களை உற்பத்தி செய்யவும் அவற்றைப் பகிர்ந்து வழங்கவும் கூட்டுறவு நிறுவனங்களை ஏற்படுத்துதல்.

பொருளாதாரம் சமூகம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் மேனுட்டு முறை வாழ்க்கையில் தாம் காட்டும் தடையற்ற உணர்ச்சியார்வத்தில் டாக்டர் ரெட்டி பிற்கால விக்டோரியா காலத்தைச் சார்ந்தவர்களும் எட்வர்டு காலத்தைச் சார்ந்தவர்களுமான அறிவாற்றலுள்ளவர்களின் மாதிரியாக அமைந்துள்ளார். பிரிட்டிஷ் பேரரசு வான்முகட்டில் திகழ்ந்தது; அரசியல் கட்டுப்பாடற்ற வாணிகக் கோட்பாடு வகையைச் சார்ந்த பொருளாதாரப் பரந்த கொள்கையுட்பட மேனுட்டு இயற்பொருள் வாதம் (Materialism) தன் தலையில் இன்னும் மோதல்களைப் பெறவில்லை. முதலாம் உலகப் பெரும்போர், தீவிர பொதுவுடைமைக் கட்சிப் புரட்சி ஆகிய இரண்டும் இன்னும் சில ஆண்டுகட்கு அப்பால் தள்ளி நடைபெற்றன. ஐரோப்பாவின் நிலைப்பட்ட கருத்துகள் தாம் குலுங்கி அமைவதற்குத் தயாராக இருந்தும், அந்நிலை இன்னும் ஏற்படவில்லை. ஒருவகையில் அஃது அவர்தம் குறுகிய நோக்கம், தற்பெருமை, தன்னுறுதி இவற்றை விளக்குவதாக அமைகின்றது. ஆனல் பேரளவில் இந்து முறைச் சிந்தனையில் மாதிரியாக இலங்கும் மரபு வழியிலமைந்த இந்திய சமூகத்தைப் பற்றிய இவர்தம் குற்றச்சாட்டு கூரியவடிவில் அமைந்துள்ளது; அந்நாளிலிருந்து இந்நாள் வரைக்கும் உள்ள இடைப்பட்ட ஆண்டுகளில் இக்குற்றச் சாட்டின் கூர்மை முற்றிலும் மழுங்கலாக்கக் கூடியதாக இல்லை.

இயல் பதினொன்று

# வரலாற்று நிகழ்ச்சிகளின் சிற்பி

''....இவ்வளவு நம்பிக்கைச் செழிப்பும் வினைமுறையில் இவ்வளவு கீழானதாகவும், இவ்வளவு அவா நிறைந்த ஆர்வமும் முடித்த செயலில் இவ்வளவு குறைவாகவும் உள்ள ஒரு வாழ்க்கையைக் காணல் அரிது''.

இராமலிங்கா ரெட்டியவர்களை மிகுந்த ஆர்வத்துடன் வியந்து பாராட்டுபவர்களுள் ஒருவரும் யாவரும் நன்கு அறிந்த இதழாசிரியருமான காலஞ்சென்ற கே. ஈசுவர தத்தர் என்பார் இவரைப்பற்றி எழுதிய சொற்களாகும் இவை. ரெட்டியவர்கள் தம் அரை நூற்றாண்டு வாழ்க்கை நிறைவு பெறுந் தறுவாயில் இவை 1929-ல் எழுதப்பெற்றவை. ஆயினும், இந்த மதிப்பீடு இவர்தம் அரசியல் வாழ்க்கையைக் குறிப்பிடுகின்றது.

எழுத்தாளர் என்ற முறையிலும் இவர்தம் பதிவுச் சான்றிலிருந்து இதே மதிப்பீட்டையே குறிப்பிடலாம். என்றபோதிலும் அரசியல் துறையில் இவர் முடித்த செயலைவிட இலக்கியத்துறையில் இவர் அடைந்த வெற்றி கணிசமான அளவுக்கு அதிகமாகும். இங்குக்கூட இவர் ஒரு பேரொலியுடன் தொடங்கினார். இவர் சரியாக ஒரு சிணுக்க ஒலியுடன் நிறைவு செய்யாவிடினும், இவருடைய திறமையுடன் கூடிய ஒருவரிடம் எதிர்பார்க்கக் கூடிய அளவுக்கு இவர் வெடியோசையை, பேரொலிகளை எழுப்பக்கூடும் வகையில், தொடர்ந்து செல்லவில்லை; இவர் ஆதரவில் இருந்தவரும் பண்டைய இலக்கியங்களை இவருடன் சேர்ந்து ஆய்ந்தவருமான இராள்ளபல்லி அனந்த கிருஷ்ண சர்மா இவரைப்பற்றிக் கூறியது:

> எங்களுடைய சொந்த உறவின் நெருக்கத்தை மறந்து புறநிலை நோக்குடன் இவரைக் கூர்ந்து நோக்க முயன்றால் இவருடைய பெரியனவும் அருமையுடையனவுமான திறன்களைக் கொண்ட ஒருவர் செய்யக்கூடியவற்றையெல்லாம் இவரால் செய்ய இயலவில்லை என்று கூறுங்கால் நான் வருந்தாதிருக்க முடியவில்லை. இந்த அளவுடன் ஒப்பிடுங்கால், நம்மில் சிலருக்கு எவ்வளவுதான் உள்ளக் கிளர்ச்சி

தருவதாக இருந்தாலும் இவர் செய்து நிறைவேற்றியது மிகக் குறைந்த அளவு மாத்திரமே யாகும். இஃது என்னுடைய எண்ணம் மட்டிலும் அல்ல; இவருடைய மாணுக்கர்களுள் பலரும் இக்கருத்தையே கொண்டுள்ளனர் . . . .

பத்தொன்பது வயது இளம் மாணுக்கராக இருந்தபொழுதே இக்காலத் தெலுங்குக் கவிதையின் எல்லையைக் காட்டும் அளவு நிலைத்து நிற்கும் ஒரு நீண்ட கவிதையை இயற்றினுர். நன்கு முதிர்ந்த நிலையில் இவர் இயற்றிய ஒரு சில தனிச் செய்யுட்களே யன்றி வேருென்றும் இல்லை. உலக வாழ்க்கையில் நன்கு பக்குவப் பட்ட மனிதரிடம் கவிதை படைக்கக்கூடிய ஊற்று உலர்ந்து விட்டதா?

இருபது வயது கூட நிரம்பப்பெருத இளைஞராக இருந்த பொழுது, **கலா பூர்ணேதயமு** என்ற இலக்கியத்தைச் திறனுய்வு செய்து முடித்தார்; திடுக்கிடச் செய்யும் வகையில் இதன் அணுகும் முறை பிறிதின் சார்பற்றதாகவும், இவர் அளித்த திறனுய்வு இலக்கியத்திற்கு ஒரு கருமூலமாகவும் அமைந்தது. அரை நூற்ருண்டுக்காலஅளவாகிய தம் எஞ்சிய வாழ்க்கையில் இவர் கையிருப்பில் இருந்ததெல்லாம் சிதறிக்கிடந்த கட்டுரைகள், முன்னுரைகள், அணிந்துரைகள் இவற்றின் சிறு தொகுதியே யாகும். ஒரு பெரிய திறனுய்வாளரிடம் எதிர்பார்ப்ப தெல்லாம் இவ்வளவுதானு? கவிஞர் என்ற முறையிலும், திறனுய்வாளர் என்ற முறையிலும் தம்முடைய கிறித்தவக் கல்லூரி நாட்களுக்கப்பால் இவரிடம் யாதொரு வளர்ச்சியும் தென்படவில்லை என்று சிலர் வாதிடுவர். அப்படி இவர் வளர்ந்திருந்ததாகக் கருதப்பெற்ருலும், விளைவின் அளவால் இவர் சிறிதேனும் சான்று காட்டவில்லையே என்று மேலும் கூறுவர்.

தம் வாழ்க்கையின் இறுதிக் காலம் வரையிலும் தெலுங்கு **மகாபாரதம்** இவரது தனிப்பற்றுக்குரிய பண்டைய இலக்கிய மாகும். தாம் விரும்பிய பொழுதெல்லாம் அகத்தெழுச்சி அல்லது ஆதாரம் பெறுவதற்காக அதனைப் படித்தார்; திரும்பப் படித்தார்; எண்ணற்ற முறை திரும்பத் திரும்பப் படித்தார். அதனைப் பற்றி மிக ஆழமாகவும் சிந்தித்தார். ஆனுல் திரௌபதி போன்ற ஒருசில பாத்திரங்களைப்பற்றித் தந்த ஒருசில பக்க ஒளிகளைத் தவிர விளக்கம் தரும் முறையில் இவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இவரளவு பண்டைய இலக்கியத்தில் புலமை பெற்றிருந்த இவரிடம் எதிர்பார்க்கப்பெற்றது இவ்வளவுதானு? மிக ஆவலுடன் எதிர் பார்க்கப்பெற்ற **மகாபாரதத்தின்** விளக்க உரை வடிவில் தலை சிறந்த நூலொன்றைத் தருவதற்கு உண்மையில் இவரால் முடியுமா?—இவர்தம் நூல்களைப் படிப்போர்களுள் நம்பிக்கையுறுதி

யற்றவர்களின் மனத்தில் எழும் வினா இது. இவருக்குத் தேவைப் பட்ட நேரம் எல்லாம் இவருக்குக் கிடைத்ததா?

இவை போன்ற வினாக்கள் யாவும் நம்மை ''அவ்வாறாயின்'', ''ஆனால்'' ''ஒரு வேளை நடந்திருக்கலாம்'' என்று நிலவும் தற்காலிகக் கோட்பாட்டு உலகிற்குத்தான் நடத்திச்செல்லும். கட்சி அரசியல், கல்வி ஆட்சிமுறை போன்ற கவனத்தைத் திருப்பும் நிகழ்ச்சிகளில் ஈடுபட்டிருந்திராவிடில், டாக்டர் ரெட்டி நிலைத்து நிற்கக்கூடியவையும் கணிசமானவையுமான சிலவற்றை அதிகமாகவே எழுதியிருந்திருக்கக்கூடும் என்று நாம் உறுதியாகச்சொல்ல முடியாது. மேனாட்டுக் கவிஞர்களாகிய கீட்ஸும் ஷெல்லியும் இளமையிலேயே மறைந்தனர்; ஆனால் வெளியிடப்பெற்ற அவர் தம் இலக்கியம் நம் முன்னே உள்ளது. அவர்கள் இன்னும் நீண்ட காலம் வாழ்ந்திருந்தால், என்னென்ன செய்திருக்கலாம் என்ற எண்ணக் கோட்டைக்குள் நாம் தஞ்சம் புகாமல் வெளியிடப்பெற்றுள்ள அவர்தம் நூற்றொகுதியே நம்முடைய கவனத்தைக் கவர்வதற்குப் போதுமானதாகும். அதே அடையாளத்துடன், டாக்டர் ரெட்டி நம்மிடம் உண்மையிலேயே விட்டுச் சென்றவற்றின் அடிப்படையிலேயே அவரை மதிப்பிடல் வேண்டும்.

வெளியிடப்பெற்றுள்ள இவர்தம் இலக்கியங்கள் முன்னியல்களில் ஆராயப்பெற்றுள்ளன. தெலுங்கு மொழியில் இலக்கியத் திறனாய்வு வரலாற்றில் **கவித்துவத் தத்துவ விசாரமு** என்ற நூல் ஓர் எல்லையைக்காட்டும் அடையாளம் என்று சரியாகவே போற்றப்பெற்றுள்ளது. பிரபந்தங்களின் தொடர்பான இவர்தம் விளக்கவுரையின் மதிப்பீடுகள் அவ்விலக்கியங்களில் தனிப் பயிற்சி பெற்றவை புலவர்களால் முழு மொத்தமாக ஒப்புக் கொள்ளப்பெற்றவை என்பது அல்ல. இவர்தம் ஆராய்ச்சிக் கட்டுரையில் குற்றங்கண்டு பல மறுப்புரைகள் வெளிவந்துள்ளன. ரெட்டியவர்களால் முன்னிறுத்தப்பெற்ற பெரும் பகுதி வாதங்களைக் கலூரி வியாசமூர்த்தி தம் நூலில் எதிர்த்துத் தாக்க முயல்கின்றார். இந்திய அழகுக் கலைகளில் தனித் திறமைபெற்ற டாக்டர் ஜி. வி. கிருட்டிண ராவ் **கலாபூர்ணோதயமுபற்றிய ஆராய்ச்சி** என்ற தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழகத்திற்குத் தந்துள்ள தம்முடைய பிஎச்.டி. ஆய்வுக் கட்டுரையில் புரிந்துகொண்டதிலும் விளக்கவுரை தந்திருப்பதிலும் ரெட்டியவர்களின் நூலில் ஒரு சில தவறுகளைக் காண்கின்றார். ரெட்டியவர்களை இவர் மிகவும் வியந்து பாராட்டியிருந்தாலும், இந்திய மரபுப்படி அதற்குரிய தனிப்பட்ட எடுத்துக்காட்டு அமைப்புடன் எழுதப்பெற்றுள்ள நூலை மதிப்பீடு செய்வதில் தொடர்பில்லாத மதிப்பீட்டு அளவு கோல் ஒன்றினை இறக்குமதி செய்து பொருத்திப் பார்க்கும் கருத்திற்கு முற்றிலும் உடன்பாடு தெரி

விக்கவில்லை. ஆனால், ரெட்டியவர்கள் இலக்கியத் திறனாய்வின் அடிப்படை விதிகளடங்கிய அளவு கருவியை எல்லாவற்றிற்கும் பொருந்துமாறு அமைத்துக் கொண்டு வெற்றி பெற்றார். இப் போக்கினின்றும் பின்வாங்கவில்லை என்பதைப் பின்னர் விளைந்த நிகழ்ச்சிகள் காட்டியுள்ளன. அண்மை காலத்துத் திறனாய்வாளர் கள் ரெட்டியவர்களைவிட இன்னும் முன்னுக்குச் சென்றுள்ளனர்; ஆனால் இவர் சென்ற திசையிலேதான் அவர்களும் சென்றுள்ளனர்.

தெலுங்கு இலக்கிய ஆராய்ச்சியில் வேறொரு திசையிலும் டாக்டர் ரெட்டி வரலாற்றுப் பெருமையை உண்டாக்கவல்ல பங்கினை நல்கியுள்ளார். டாக்டர் கால்டுவெல் அவர்கள் திராவிட மொழியியலின் கோட்பாட்டு உயர்நிலை ஆசாரியன் என்று வருணித் துரைக்கப்பெறக் கூடுமாயின், டாக்டர் ரெட்டியவர்கள் இக் காலத்துத் திராவிட இலக்கியத்தின் கோட்பாட்டு வீரத் திருத் தொண்டர் என்று நேர்மையாகவே புகழப்பெறலாம். அளவுக்கு மீறிய வற்புறுத்தல் காரணமாக சில தவறுகள் எழுந்திருந்த போதிலும், மெய்யெனக் காட்டி நம்ப வைக்கும் சான்றுகளின் துணைகொண்டு டாக்டர் கால்டுவெல் அவர்களால் திராவிட மொழிக் குடும்பத்தில் தெலுங்கின் இடத்தை நிலைநாட்ட முடிந் தது. தெலுங்கர்களின் இலக்கியத்தில் திராவிடக்கூறின் மதிப்பை யும் தமிழர்களின் இலக்கியத்துடன் அதன் இன உறவையும் டாக் டர் ரெட்டியவர்களால் வெளிக்கொணர்ந்து காட்ட முடிந்தது.

பூத்தலப்பட்டு சீராமலு ரெட்டி அவர்களின் கம்பராமா யணத்தின் தெலுங்கு மொழிபெயர்ப்புக்கு நல்கியுள்ள முன்னுரை யில் டாக்டர் ரெட்டியவர்கள் எழுதியது:

> இன அமைப்பில் நாங்கள் (ஆந்திரர்கள்) திராவிடர் களாக இருக்க நேரிட்டாலும், கல்வி முறையிலும் பண் பாட்டு முறையிலும் நாங்கள் ஆரியர்கட்கு மிக அருகில் வந்து விடுகின்றோம். யாப்பு அமைப்புகள் வடமொழி மூலத் திலிருந்து ஆக்கப்பெற்றவை. தெலுங்கு மொழியும் வட மொழியின் மிக நெருங்கிய மறுபகர்ப்பாக உள்ளது.... எனினும், முந்திய காலத்தில் தெலுங்கிற்கும் தமிழுக்கும் இடையேயுள்ள தொடர்புகள் உண்மையிலேயே மிகநெருக்க மாக இருந்திருத்தல் வேண்டும். நாளடைவில் தெலுங்கர் களின் வாழ்க்கையைப் போலவே அவர்தம் இலக்கியமும் வடக்கு நோக்கித் திரும்பியது. அது தெற்கு நோக்கித் திரும்பி யிருந்தாலும்கூட இரண்டு வழிகளிலும் நாங்கள் நல்ல பயனைப் பெற்றிருந்திருப்போம்.

மொழிபெயர்ப்பு இலக்கியங்களைக் கண்டு இவர் மிக வியப்பு அடைகின்றார்:

ஆரிய சமயப் பண்டைய இலக்கியங்கள், **காவியங்கள்,** நாடகங்கள் போன்ற பல இலக்கியங்கள் வடமொழியினின்றும் மொழிபெயர்க்கப்பெற்றிருக்கும்பொழுது, தமிழ் இலக்கியத்தினின்றும் ஏன் யாதொன்றும் தெலுங்கில் மொழி பெயர்க்கப் பெறவில்லை என்பதற்குக் காரணம் ஒன்றுமில்லை. வடமொழியினின்றும் மொழிபெயர்ப்புகள், திரும்பவும்— மொழிபெயர்ப்புகள் என்று மிகுந்த அளவில் உள்ளன! இராமாயணத்திலும் சாகுந்தலத்திலும் உள்ள உருத்திரிபு வகை தெலுங்கு நூல்களின் தொகையை நோக்குங்கள். இன்னும் எத்தனை வரப்போகின்றனவோ! அவர்கள் மிகச் சிறந்த கலைப் படைப்பாகிய **மணிமேகலை**யின் மிகு புகழை ஏன் தெலுங்கில் கைப்பற்ற முயலக்கூடாது? சுவைக்க முடியாமையாலா? அல்லது தொடர்புகொள்ள முடியாமையாலா?

பாலி மொழியிலுள்ள புத்த சமயப் பண்டைய இலக்கியங்களாலும் இதே ஊழ் பகிர்ந்து கொள்ளப் பெற்றது. அஷ்வக் கோஷர் எழுதிய **புத்த சரிதம்** என்ற நூலின் அருகில் கூடப் போக ஒருவரும் கவலை கொள்ளவில்லை; இங்ஙனம் வேண்டுமென்றே வலிந்து மேற்கொள்ளப்பெற்ற தீண்டாமைக்குச் சமயத்தைப் பற்றிய தப்பெண்ணமே காரணமாகும் என்று இவர் கருதினர். ''மந்திர அறிவுக் குவைபோல் கிட்டத்தட்டத் தெலுங்கு இலக்கியத்திலும் பார்ப்பன ஆதிக்கம் மிகுந்திருந்தது. நன்னெசோடா, பல்குரிக்கி சோமநாதர் போன்ற வீர சைவக் கவிஞர்களும் புகழ் பெருதிருப்பதற்கும் இது விளக்கம் தருவதாக அமைகின்றது''- இவ்வாறு இவர் கூர்ந்து ஆராய்ந்தார்.

இதனைத் தொடர்ந்து இவர் கூறியது: ''நாம் தமிழ் இலக்கியம் தீண்டத்தகாதது என்று கருதாவிடினும் கூட, நாம் அதனைத் தொடாதிருப்பதற்குக் காரணம் இத்தகைய ஒன்றே யாகும். காரணம் எதுவாக இருப்பினும் நாம் பட்ட இழப்பு மிகவும் கேடளாவியதாகும். **பெரியபுராணம்**, ஆழ்வார்களின் வரலாறு, சைவசித்தாந்தத் தத்துவம் போன்ற பக்தி, ஞானக் கருவூலங்களை இழந்துவிட்டோம். அதுவும் கலைத்திறமை வாய்ந்த களிப்பை (ஆனந்தம், அல்லது சாகித்யானந்தம்) இழந்தது மிகவும் கேடளாவியதாகும். மணிமேகலையைப் போன்ற இலக்கியத்தைப் பயில்வதால் ஏற்படும் களிப்பின் கூத்தாட்டத்தில் எழும் மயிர்சிலிர்ப் புணர்ச்சி நமக்கு மறுக்கப்பெற்றுள்ளது. இது நம்முடைய அவப் பேருகும். இதனை நமக்குத் தமிழர்கள் கொடுக்கவில்லை என்பது காரணமல்ல. ஆனுல், ஆந்திரர்களாகிய நாம் அவர்களிடமிருந்து வாங்கிக் கொள்ளவில்லை''.

இந்தப் பின்னணிக்கு எதிராக, கம்பராமாயணத்தின்

தெலுங்கு மொழிபெயர்ப்பை இவர் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலுள்ள சேது போன்ற ஒரு சேதுவாகவே காண்கின்ருர். தமிழுடன் தெலுங்கின் தொடர்புகளைப் புதுப்பிப்பதற்குத் தாம் சிறந்த முறையில் முயல்வதைப் போலவே, தெலுங்கு இலக்கியத்தில் 'மார்க்கம்', 'தேசி' ஆகிய கூறுகள் தொடர்பு கொண்டிருப்பதைப் போன்ற ஒரு முறையில் இவரே ஆரியக் கூறுகட்கும் திராவிடக் கூறுகட்கும் இடையே ஒரு தொடர்பு போல் செயற்படுகின்ருர். இலக்கியக் குடியரசில் இவர் ஒரு பாலம் அமைப்பவர்போல் திகழ்கின்ருர்.

இவர் பொறுப்பில் நடைபெற்ற குறிப்பிடத்தக்க புது முயற்சிகளுள் மற்ருென்று **அரங்கநாத ராமாயணத்தைப்** புதுத் தோற்றத்திற்குக் கொண்டு வந்ததாகும். இதன் ஆசிரியர் யார் என்பது பற்றிய உண்மையான ஆளடையாளம் (அரங்கநாதரா, கோனபுத்தரா, வேறு யாராக இருப்பினும்) எப்படியிருந்த போதிலும் கூட, அந்த இலக்கியத்தின் அரிய அழகுகள் தெலுங்கு மொழியைக் கற்போரின் உள்ளங்களில் நிலைநாட்டப்பெற்றிருக்குமாஞல், அது முக்கியமாக ரெட்டியவர்களின் உணரும் ஆற்றலுடன் கூடிய பகுப்பாராய்ச்சியாலும், அதனை ஊக்கத்துடன் ஆதரித்துப் பேசியதாலுமே என்று துணிந்து கூறலாம். கம்பனிலும் துளசியிலும் காணப்பெறும் வால்மீகியினின்றும் விலகிச் செல்லும் போக்குகளைவிட இந்தக் காவியத்தில் காணப்பெறும் இத்தகையப் போக்குகள் புலமையற்ற இடைச் செருகல்கள் என்று புருவங்களை நெறித்து வெறுப்புக் காட்டலாகாது.

வேமனரின் கவிதை நலன்களைப்பற்றி இவர் ஆதரித்துப் பேசியது இன்று வேகமாகவும் உறுதி செய்யக்கூடியதாகவும் இருந்தது. சில நூற்ருண்டுகளாக வேண்டுமென்றே வலிந்து மேற்கொள்ளப் பெற்றிருந்த புறக்கணிப்பினின்றும் திட்டமிடப்பெற்ற பகைமை உணர்ச்சியினின்றும் இந்த ஞானக் கவிஞரை விடுவித்ததில் சி.பி. பிரௌனுக்கு அடுத்து இவர்தான் மிக அதிகமான பங்கினை மேற்கொண்டார் என்று சொல்லவேண்டும். அண்மைக் காலம்வரையில் முரட்டுப் பிடிவாதப் பண்டிதர்கள், புலமைச் செருக்குடையவர்கள் இவர்களேயன்றி நன்மதிப்புடன் திகழ்ந்த புலவர்களும் கூட வேமனரைச் சினமூட்டும் செய்யுளை இயற்றுபவர் என்றும், எப்பொழுதுமே வசைமாரி பொழிபவராகவும் அடிக்கடி அவதூறு பேசுபவராகவும் இருந்தார் என்றும், மிகக் குறைவாகவே மதித்து வந்தனர். வேமனர் சினமுள்ளவராகவும் வெறுப்பினை விளைவிப்பவராகவும் இருந்தார் என்பதற்கு ஐயமில்லை. அவர் அங்ஙனம் இருந்ததற்குக் காரணம் இல்லாமலும் இல்லை. ரெட்டியவர்களின் மதிப்பீட்டில் அவர் ஒரு கவிஞர், **உண்மையான** கவிஞர், ஒரு பெருங்கவிஞர்: ''சுருக்கம் என்பது

சொல்திறத்தின் ஆன்மா என்றால், இவ்வுலகில் இவரைத் தவிர சொல்திறமுடையவர் ஒருவரும் இலர் . . . . இவர் ஓர் இயற்கை யாற்றல் நிறைந்த கவிஞர்; பிறவிக் கவிஞர்''.

மேலும் அவர் சொல்லுவார்:

> பகவான் இராமகிருஷ்ணர்தான் மிகக் கீழ்ப்பட்ட சாதி யினருக்கெல்லாம் கீழ்ப்பட்ட சாதியினர் என்று உரிமை கொண்டாடினர்; சாதி அமைப்பையும் சாதியுணர்வையும் பலரறியப் பழித்துக் கூறினர். இராமகிருஷ்ணரின் அவ தாரத்தைப்பற்றி முன்னறிவிப்பாக இருந்த கவிஞர் வேமனர் என்று கூறுவதில் தவறில்லை. நீங்கள் இறைவனுடன் ஒன்று பட்டிருக்க விரும்பினல், மனிதனுடன் ஒன்றுபட வேண்டும். சாதி என்பது ஒரு சமூகச் சாபக்கேடாக இருப்பதோடன்றி அரசியல் தவறுமாகும் . . .

இந்தக் குறிப்பை வலியுறுத்துவதில் டாக்டர் ரெட்டி மிகு திறத்தால் அளவுமீறிச் சென்றுவிட்டார் என்றே தோன்றுகின்றது. ஏனெனில், சமூகம்பற்றிய விளக்கக் குறிப்பு மட்டிலும் ஒருவரைச் சிறந்த கவிஞராக்க முடியாது. சிறந்த கவிஞராதற்கு நடை, கலைத்திறம்மிக்க கவர்ச்சியாற்றல், முடிவான கருத்தைத் தருவதில் ஒருவித அடக்கம் ஆகிய மற்றைய கூறுகளும் உள்ளன. ஆனல், நீண்ட நாட்களாக நிலவியிருந்த புறக்கணிப்பு, வெறுப்பு ஆகிய வற்றின் விளைவுகளை அகற்றும் செயலில் இந்த அளவுமீறிய வற் புறுத்தல் பயன்பட்டிருக்கலாம்.

கவிஞர் என்ற முறையிலும் திறனய்வாளர் என்ற முறை யிலும், ரெட்டியவர்கள் நமக்கு அளித்த இலக்கியங்கள் அளவில் குறைவாக இருப்பினும் அவற்றின் தாக்கம் உயிர் நிலையானது; குறிப்பிடத்தக்கது. நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை இயற்றிய ஆசிரியர்களின் நூல்கள் மறக்கப் பெற்றிருக்கும்பொழுது (இது ஒரு நல்ல காலமே) இவர்தம் நூல்கள் தெலுங்கு இலக்கிய அறிஞர்களின் சிந்தையுடன் கலந்து ஐக்கியமாகிவிட்டன.

பின்னிணைப்பு—1

## டாக்டர் இராமலிங்கா ரெட்டியவர்களின் வாழ்க்கையில் முக்கிய நிகழ்ச்சிகள்:

1880 திசம்பர் 10 கட்டமஞ்ச்சியில் பிறப்பு.

1896 பள்ளியிறுதித் தேர்வில் தேர்ச்சிபெறல்.

1897 சென்னை கிறித்தவக் கல்லூரியில் எம். ஏ. வகுப்பில் நுழைவு.

1899 **முசலம்ம மரணமு** என்ற கவிதையை இயற்றல்.

1901 மெய்விளக்க இயலிலும் பொருளியலிலும் தனிச்சிறப்புடன் பி.ஏ. தேர்வில் வெற்றிபெறல்.

1902 இந்திய அரசின் ஆராய்ச்சி மாணுக்கராக கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் நுழைதல்.

1903 ரைட் பரிசினை முயன்று பெறல்.

1905 கேம்பிரிட்ஜ் முற்போக்குக் கழகத்தின் செயலராகவும் கேம்பிரிட்ஜ் பேரவையின் துணைத்தலைவராகவும் தேர்ந் தெடுக்கப்பெறல்.

1906 வரலாற்று டிரிப்பாஸ் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி யடைதல்

1907 பரோடா கெயிக்வார் அரசரின் உதவியால் அமெரிக்க ஐக்கியநாடுகளைச் சென்று காணல்.

1908 தாயகத்திற்குத் (இந்தியா) திரும்புதல்; பரோடாவி லுள்ள மகாராசர் கல்லூரியில் துணை-முதல்வராக நிய மனம் பெறல்.

1909 மகாராசர் கல்லூரியில் பேராசிரியராக நியமனம் பெற்று மைசூரை அடைதல்.

1912 **பாரத அர்த்த சாஸ்திரமு** (இந்தியப் பொருளியல்) என்ற நூலை வெளியிடல்.

1913 ஐரோப்பாவைக் காணச் சென்ற மைசூர் இளவரசருடன் செல்லல்.

1914 **கவித்துவ தத்துவ விசாரமு** என்ற திறனாய்வு நூலை வெளியிடல்.

1914 கனடா, ஜப்பான், பிறநாடுகள் ஆகியவற்றிற்குக் கல்வி உலாப் பயணம்.

*1916-17* மைசூர் மகாராசர் கல்லூரியில் முதல்வராகப் பணி.
*1921* சென்னையில் அரசியலில் நுழைதல்.
*1922-26* சென்னைச் சட்ட மன்ற ஆலோசகர் அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று உறுப்பினராகப் பணிபுரிதல்.
*1924* ஆந்திர மகாசபையின் தலைவர்.
*1926* ஆந்திரப் பல்கலைக் கழகத்தின் துணை-வேந்தராக நியமனம் பெறல்.
*1930* அரசின் அரசியல் அடக்குமுறைக் கொள்கைக்கு எதிராகக் கண்டனம் தெரிவிக்கும் முறையில் துணை - வேந்தர் பதவியைத் துறத்தல்.
*1935* சென்னைச் சட்டமன்ற ஆலோசகர் அவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெறல்.
*1935-36* சித்தூர் மாவட்ட வாரியத்தின் தலைவர்.
*1936* ஆந்திரப் பல்கலைக் கழகத்தின் துணை - வேந்தராகத் தேர்ந்தெடுக்கப்பெறல்.
*1937* பல்கலைக் கழக வாரியத்தின் தலைவர்.
*1942* பிரிட்டிஷ் அரசு வீரப் பெருந்தகை (Knight) என்ற பட்டம் வழங்குதல்.
*1949* சனவரி - மைசூர் அழைப்பு - மைசூர் அரசின் கல்வி நிலைமை பற்றிய அறிக்கை தயாரித்து வெளியிடல்.
*1949* செப்டம்பர் - மைசூர் பல்கலைக் கழகத்தின் இணை - வேந்தராகப் பொறுப்பேற்றல்.
*1951* பிப்பிரவரி 24 - சென்னையில் இயற்கை எய்தல்.

**பின்னிணைப்பு—2**

## செயல் வழியில் இலக்கியம்

(வீரேசலிங்கத்தின் நூல்பற்றி டாக்டர் சி. ஆர். ரெட்டியின் புகழுரை)

''கைம்பெண் மறுமணத்தின் காரணமாக வீரேசலிங்கம் பொதுமக்கள் உள்ளத்தில் அதிகமாகத் தொடர்பு கொண்டிருந்த போதிலும், அவர் ஒரு பெரிய போதகர்; புகழ்பெற்ற எழுத்தாளர். அவர் இலக்கியத்தைச் செயல் வழியில் பயன்படுத்தினர், அவர்

தெலுங்கு மொழியில் மிகச்சிறந்த தேர்ச்சியாளர்; அம்மொழியில் மிகப் பெரிய எழுத்தாளர்களுள் ஒருவர்''.

வீரேசலிங்கம் பந்துலுவுக்கு இத்துடனும் மற்றைய புகழ் உரைகளுடனும் ஆந்திரப் பல்கலைக் கழகத்தின் துணை-வேந்தரான டாக்டர் சி. ஆர். ரெட்டியவர்கள் சென்னையில் நடைபெற்ற இத் தலைவரின் நூற்றுண்டுப் பிறந்தநாள் விழாவினைத் தொடங்கி வைத்தார் (1948 ஏப்பிரல் 16). டாக்டர் ரெட்டியவர்கள் தம் தொடக்க உரையில் கூறியவை:

சிப்பாய் கலகம்[1] நடைபெற்ற சில ஆண்டுகட்கு முன்னர் தான் வீரேசலிங்கம் தோன்றினார். ஜான்சி இலக்குமிபாய் போன்ற தனிப்பட்டவர்களின் மேம்பாடும் வீரமும் இருந்தபோதிலும், தோல்வியுற்ற ஒருமுகப்படுத்தம்பெருத இயக்கங்களுள் இது மற்றென்று. இந்தியா மிக ஆழ்ந்த இருளிலும் நம்பிக்கை இழந்த நிலையிலும் தள்ளப்பெற்றது. உள்நாட்டு ஒற்றுமையும் படிப்படியாக முன்னேறுகின்ற தற்காலப் புதுமையின் திசையில் மாற்றமும் இல்லாமல் மதிப்பான பயன்விளையத்தக்க எதிர்காலத்தைப்பற்றிய நம்பிக்கை இல்லை என்பதை முற்றிலும் நன்ருக அறிந்து, சிந்தனையாளர்கள் இந்துக்களினிடையே நிலவியிருந்த வலுவின்மையை நன்கு உணர்ந்தனர். மூன்று தலைவாய்களினின்றும் ஒளி துலங்கத் தொடங்கியது.

இராசாராம் மோகன்ராய் என்பார் ஓரளவு ஐரோப்பிய முன்மாதிரி அடிப்படையில் அமைந்த வழிகளில் நம்முடைய பண்பாட்டையும் ஒழுக்கத்தையும் திருப்பி அமைக்க முயன்ருர். அவர் திருமறைகளையும் உபநிடதங்களையும் தமது ஆதாரப் பொருளாக இருக்க நாடினர். ஆனல், அவர்தம் கோட்பாடுகளின் முக்கிய பகுதியும் அவர்தம் மனநிலையும் மேனாட்டு முறையைச் சார்ந்திருந்தன. ஆனல் நம்முடைய தற்பெருமையைவிடவும் அதிகமாக நம்முடைய பகட்டெண்ணம் மீறி எழுந்தது; மேனாட்டுப் போலி நடத்தை என்று ஏளனம் செய்ததற்கு எதிராக இன்னும் மீறி எழுகின்றது. பிறருடைய கருத்துகளை நாம் நம்முடையனவாகச் செய்துகொள்ளும்போது அம்முறை இழிவானது எனத் தோன்றுகின்றது. ஏற்றுமதிச் சரக்குகள் **பற்ருக** அமைகின்றன; இறக்குமதிச் சரக்குகள் **வரவாக** அமைகின்றன.

இராம் மோகன்ராய் ஆங்கில மொழியைப் பயன்படுத்தினர்; இந்தியாவில் ஆங்கில மொழியின் நிலை காரணமாக அவர் தந்த செய்தி வங்காளத்தில் மட்டிலும் அடைத்து வைக்கப் பெற

---

1. இந்திய வரலாற்றில் இது பிரிட்டிஷார் தந்த பெயர். இது தவருனது. நாடு விடுதலை பெற்ற பிறகு இது 'முதலாம் விடுதலைப் போர்' என்ற பெயர் பெறுகின்றது.

வில்லை; அது நாடு முழுவதும் எட்டியது. ஆனால் அவர்தம் செல்வாக்கு முக்கியமாக உள்ளூர் சார்ந்ததாகவும் மாகாணத்திற் குரியதாகவும் இருந்தது.

இந்தியாவில் மேற்குப் பகுதியில் தயானந்த சரசுவதி என்ற வீறூர்ந்த வீரமுள்ள பெரியவர் தோன்றினார்; இந்த உருவம் திருமறை மலையினின்றும் உருவானது. சமத்துவம் இக்காலப் புதுமையின் முன்னேற்றம் என்ற இரட்டை அடிப்படையில் இந்து சமூகத்தை உருமாற்றிக் கொண்டிருந்தார். ஆனால், அந்த உரு மாற்றம் திருமறைக் கோட்பாடுகளினால் வேர்விடச் செய்யப் பெற்று, வடிவம் பெறப்பெற்று, இயக்கப் பெற்றது. மேலும், அம்மாற்றம் நம்முடைய பெருமிதமான பண்டைய எளிமைக்கும் வலிமைக்கும் திரும்பும் நிலையில் அமைந்தது.

ஆரிய சமாஜம் என்ற அமைப்பு மிகவும் ஊக்கமும் எதிர்ப் பார்வமும் கொண்டதாகும்; இது விருந்தினரை வரவேற்கும் அறையில் வேடிக்கையாகப் பேசப்பெறும் சமயம் அன்று. ஆரிய சமாஜத்தைச் சார்ந்தவர்கள் பண்டைய திருமறை ஏரியை வழிபடு கின்றனர். அஃது அடல்வாய்ந்த அமைப்பாகும்.

கிட்டத்தட்ட அதே காலத்தில் மூன்றாவது ஒளியொன்று இருந்தது; அது மாறுபட்டது; தன் வழியில் அது இந்நிலவுலகி லேயே மிகவும் வீறமைதியுடையதாக இருந்தது. அந்த ஒளிதான் இராமகிருஷ்ண பரமஹம்சர் வடிவில் இருந்த பேரொளியாகும்.

**பெரிய சீர்திருத்த வாதி:** ஆன்மாவின் இந்தச் சிற்றசைவுகள் தோன்றின இந்தக் காலத்தில் வேறு சீர்திருத்தவாதிகளும் தோன் றினர். இவர்களுள், பலவகைகளில், மிகப் பெரியவராகவும், மிகவும் வியப்புக்குரியவராகவும் இருந்தவர் வீரேசலிங்கம் என்பவராகும்.

இதனைச் சற்றுச் சிந்தியுங்கள்: எளிய சாதாரண தெலுங்குப் பண்டிதர் ஒருவர் மக்களின் நடுவே ஒரு வீரராகவும், அவர்தம் போரிடும் தலைவராகவும், எல்லாத் துறைகளிலும் மிகவும் செய லருமை வாய்ந்த சமூகச் சீர்திருத்தத்தின் முன்னோடியாகவும் மலர்ந் ததை நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியுமா? ஒரு வட மொழிப் பண்டிதர், தமிழ்ப் பண்டிதர், கன்னடப் பண்டிதர், அல்லது மலையாளப் பண்டிதர் அல்லது ஏதோ ஒரு பண்டிதர் தனியாக ஒதுக்கப்பெற்று, அசட்டை செய்யப்பெற்ற பண்பாட்டுச் செல்வாக்காகவும், வகுப்பில் வல்லந்தமாகச் செயலாற்றும் எழுச்சி யையுடைய மாணாக்கர்களின் ஏளனத்திற்கு இடமானவராகவும் இருந்ததற்கு மேலாக எப்படியாவது இருந்ததைக் கேட்டிருக்க முடியுமா? வைதிகத்தை எதிர்த்த ஒரு பண்டிதர்; அதுவும் இந்தியா இன்றிருப்பதைவிடத் தற்கால நிலைமைக்குச் சிறிதும் பொருந்தாத வெளிநாட்டு, முற்போக்குக் கொள்கைத் தொடர்புகளினின்றும் துண்டிக்கப்பெற்ற ஒருவர். காலநிலைமைகள் அவருக்கு எதிராகத்

தானிருந்தன; ஆனால், ஒரு தாவீது ஒரு கோலியத்தை எதிர்த்து நின்றதைப்போல், காலநிலைமைகளை எதிர்த்துப் போராடினார்; இறுதியில் வெற்றியும் பெற்றார்.

இங்கு இராசாராம் மோகன்ராயைப் போல் வீரேசலிங்கம் ஓர் உயர்குடிமகன் அல்லர்; அடக்கச் சிதைவின்றி உரிமையாகக் கொள்ளப்பெற்ற துறவுக் கோலத்தால் பல்லோரையும் கவரத் தக்க மதிப்புணர்ச்சியும் நன்மதிப்பும் கொண்ட தயானந்தரைப் போல ஒரு சூரருமல்லர். எனினும், இராசாராம் மோகன்ராய் அல்லது தயானந்தர் மேற்கொண்டு நடத்தின போரைப்போல் வீரேசலிங்கமும் எதிர்த்து நின்று கடுமையாகப் போரிட்டார். பார்ப்பனர்களின் வைதிகத்தையும், நாம் எளிதில் சினங்கொள்ளக் கூடிய சிற்றின்பத் துறையையும் கைம்பெண் மறுமணமும் கொண்ட இதன் கூருணர்வுடைய முக்கிய பகுதியையும் எதிர்க்க வேண்டியிருந்தது. தமக்கு ஆதாரப் பொருளாகச் சாத்திரங்களைக் கோரினார்; ஆனால் தயானந்த சரசுவதியின் எடுப்பான மேலாண்மை உரிமையைவிட இராசாராம் மோகன்ராயின் காரணம் காட்டி வாதிடும் முறையையே இவர் மேற்கொண்டார். தெய்விகத்தையோ அல்லது தேசியத்தையோ இவர் ஆர்வத்துடன் கோரவில்லை. இந்தச் சச்சரவில் கடவுளையோ சுயராஜ்யக் கோரிக்கையையோ சேர்த்துக்கொள்ளவும் இல்லை.

சாரமாகக் கூறினால், வீரேசலிங்கம் ஒரு பகுத்தறிவு வாதியாகவும் அருளிரக்கம் கொண்டவராகவும் திகழ்ந்தார். ஆகவே, இவரது முறையீடு பகுத்தறிவுக்கு ஒத்ததாகவும் பொது அறிவுக்கு உகந்ததாகவும் நீதியையும் சமஉரிமையையும் விரும்பும் முறையிலும், எல்லோரிடமும் பாய்ந்தோடும் மனிதனிடம் காட்டும் இரக்கப்பாங்கிலும் அமைந்திருந்தது. இவர் உக்கிரமான எதிர்ப்பைச் சந்தித்தார். தன்னுடைய இல்லத்தைத் தீக்கிரையாக்கும் முயற்சிகள் எவ்வாறு மேற்கொள்ளப்பெற்றன என்றும், இராசமகேந்திரபுரத்து மாணாக்கர்கள் கடமையுணர்வாலும் பற்றுறுதியாலும் உந்தப் பெற்று, எவ்வாறு தம் இல்லத்தைக் காக்கத் துணிந்தனர் என்றும் இவர் என்னிடம் கூறினார். சீர்திருத்தச் செயல்களை மக்களிடம் பரப்புவதற்காகத் தம்முடன் சேர்ந்த நண்பர்கள் நேர்மையான வாய்ப்புகள் அவர்கட்கு இருந்தும் தம்முடைய வீட்டில் அத்தகைய சீர்திருத்த முறைகளை மேற்கொள்ள மறுத்த காட்சிதான் இதயமே வெடித்துவிடக்கூடிய தம்முடைய அநுபவங்களுள் ஒன்றாகும் என்றும் என்னிடம் தெரிவித்தார். இவர் தெரிவித்தவர்கள் யாவரும் இறந்துவிட்டதால் நான் அவர்தம் பெயர்களைக் கூற விரும்பவில்லை; ''உயிரற்ற இறந்தகாலம் அதன் இறப்பைப் புதைக்கட்டும்'' என்று இவர் கூறினார். வீரேசலிங்கம் உயிர் வாழ்கின்றார்; வாழ்ந்திருக்கும் சாவாதவரைப் பற்றிச் சிறிது பகர்வோம்.

**ஆற்றல் மிக்க அங்கத ஆசிரியர்:** இலக்கியத்தைச் செயல் வழியில் பயன்படுத்தினர். தமது அங்கதங்களில்—அவற்றுள் சில மாலியரால் (Moliere) ஊக்குவிக்கப்பெற்று மிகச் சிறப்பாக எழுதப்பெற்றவை; (தெலுங்கில் இவை **பிரஹசனங்கள்** என வழங்கப்பெறும்)—இந்து சமூகத்தை வசையால் தாக்கினர்; இந்து சமயத் தலைவர்கள்மீதும் கூட கருணையின்றி வசைமாரி பொழிந் தார். வஞ்சப் புகழ்ச்சியாக எழுதுவதிலும் ஏளனக் குறிப்பைக் காட்டுவதிலும் கைதேர்ந்த மன்னர்[2]. பிறப்பினாலும் வளர்ப்பினா லும் பாசாங்குக்காரர்கள் என்று தாம் கருதும் வைதிகர்களையோ அல்லது பழம் பற்றுளர்களையோ அவர் விட்டு வைக்கவில்லை. அவர் சாத்திரம் கற்ற தம் எதிரிகளிடம் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை என்பது என் கருத்து; அவர்களின் பெரும் பாலோரின் தீர்ப்புகளைப்பற்றி நாம் என்ன நினைத்தாலும், அவர்கள் உண்மையாகவும் மனச்சான்றுக்குக் கட்டுப்பட்டவர்களாகவும் இருந்தனர்.

ஸ்விப்டின் **கல்லிவெரின் யாத்திரை** என்ற நூலைப் பின்பற்றி எழுதிய தனது **சத்திய ராஜா பூர்வதேச யாத்ரலு** என்ற நூலில் பெண்கள்பால் ஆண்கள் இழைத்த தவறுகளையும் அநீதிகளையும், அப்படியே திருப்பிய முறையில் பெண்களின் கொடுங்கோலாட்சி யில் ஆண்கள்படும் அல்லல் காட்சிகளையும் காட்டியுள்ளார்.

ஹெயின் என்ற செருமானிய எழுத்தாளரைப்பற்றிக் குறிப் பிடுங்கால், அவருடைய கல்லறை நடு கல்லில் பொறிக்கப்பெற வேண்டியது எழுதுகோல் அன்று, வாளே என்று சொல்லப் பெற் றுள்ளது. அதுபோலவே, வீரேசலிங்கம் அவர்களின் கல்லறை நடு கல்லில் அல்லது வேறுநினைவுச் சின்னத்தில் பொறிக்கப்பெற வேண் டியது வாளேயன்றி, எழுதுகோல் அன்று என்று சொல்லவேண்டும்; ஆந்திர நாட்டில் இவர் சமூகத்தில் எழுப்பிய ஓசை விளைவினைக் கொண்டு எண்ணினால் ஓர் அணுகுண்டையே இதில் பொறிக்கலாம்.

மக்கள் கைம்பெண் மறுமணத்துடன் வீரேசலிங்கத்தை அதிக மாகத் தொடர்பு படுத்திப் பேசுகின்றனர். கைம்பெண் மறு மணமே இவர்தம் திட்டத்தில் மிகவும் மன எழுச்சியை ஊட்ட வல்ல பகுதியாகும்; இதுவே பொதுவாக இந்துக்களினுடையவும் குறிப்பாகப் பார்ப்பனர்களுடையவுமான பித்த நீரையும் குருதி யையும் கலக்கிச் சீற்றத்தை எழுப்பியது. ஆனால், இவர்தம் திட்டம் பலகூறுகளையும் தழுவியதாகவும் வாதப் பொருத்தமுடையதாக வும் இருந்தது. பெண்கல்விபற்றியும், அவர்தம் உரிமைகள் பற்றி யும் பொதுவாக ஆண்களுடனும், தம் கணவன்மார்களுடனும் சமமான மதிப்பு நிலைபெறுதல்பற்றியும் இவர் அதிகமாக

2. 'வசைபாடக் காளமேகம்' - என்ற தொடரையும் அதில் குறிப்பிடப்பெற்றுள்ள காளமேகப் புலவரையும் நினைக்கச் செய்கின்றார்.

ஆதரித்துப் பேசினர். தனக்கு நேரிட்ட எதிர்ப்பு காரணமாகவும் மக்களின் வெறுப்பு காரணமாகவும் இந்த நேர்மையான அஞ்சாத ஆன்மா சிறிதும் பின்வாங்கவில்லை. மிகவும் பற்றுறுதியுடன் பின் பற்றுபவர்களும் தொண்டர்களும் அடங்கிய சிறு கும்பல் இவரை எப்பொழுதுமே சூழ்ந்தவண்ணம் இருந்தது. தெலுங்கு நாடு முழுவதும் இவரது நூல்கள் நன்கு விலையாயின. அஞ்சல் கட்டணம் இன்றிருப்பதைவிடக் குறைவாக இருந்த அவர் காலத்தில் கிட்டத் தட்ட ஒரு தெலுங்குப் பண்டிதரின் திங்கள் ஊதியத்திற்குச் சமமான ரூ. 30-ஐ இவர் அஞ்சல் தலைகளை வாங்குவதில் செல விட்டதாக என்னிடம் இவர் சொல்லக் கேட்டுள்ளேன்.

தம்முடைய நூல்களைக்கொண்டு இவர் அதிகமாகப் பணம் பண்ணினர் என்பதற்கு ஐயமில்லை; ஆனல் பணம் பண்ணுவது அவருடைய நோக்கம் அன்று. வைதிகத்தைப் பலமாக அடித்துத் தூள்தூளாக்கி மண்ணுடன் கலக்கச் செய்வதே அதன் முக்கிய நோக்கமாகும். படிப்படியாக, மனவுறுதியான பகுத்தறிவுடனும், மனிதப்பற்றுக் கோட்பாட்டுடனும் கொண்ட தமது வழியில் மேல் நோக்கியும் முன்நோக்கியும் முன்னேறினர். இறுதியாக, தம் முடைய பூணூலையும் களைந்தெறிந்து விட்டார்; அத்துடன் தாம் பிறந்த சாதிக்கும் வைதிக இந்து சமயத்திற்கும் ஒரு தலைமுழுக்குப் போட்டுவிட்டார். இவர் தாம் கண்ட பிரமோதியக் கொள்கை புறத்தே பிறந்து வளர்ந்த யாதொன்றினின்றும் அமைத்துக் கொள்ளப்பெற்றதன்று; அது தம்முள்ளே கிடந்த நம்பிக்கையினின் றும் தோன்றின நேரிய எளிய வளர்ச்சியே ஆகும். என்ருலும், இவர் தம்மை ஒரு பிரமோ என்று சொல்லிக் கொண்டார் என்று கருதுகின்றேன்.

**எழுத்தாளர்:** வீரேசலிங்கம் தெலுங்கு மொழியைக் கரை கண்ட வித்தகர்; சமகாலத்திய தலைசிறந்த எழுத்தாளர்களுள் ஒருவர். இவ்ர் காளிதாசரின் இலக்கியங்களையும் பிற பண்டைய இலக்கியங்களையும் மொழி பெயர்த்தார். **சுத்தாந்திர நிரோஷ்டிய நிர்வசன நைஷதம்** என்ற நூலில் காணப்பெறும் மிக உயர்ந்த செயற்கை முறையிலமைந்த நடையிலும் எழுதினர். இவர் இலக் கியத்தை இனிமையாகவும் மிகச் சிறந்த சுவையுடனும் படைக்கக் கூடியவராகத் திகழ்ந்தார். அன்றியும், மக்களை மனம் கவரக்கூடிய சொற்சிலம்ப விளையாட்டுகளையும் நிறைவேற்றக்கூடியவராகவும் விளங்கினர்.

தெலுங்கு உலகில் நடப்பில் செல்லுபடியாகின்ற நாணயத் தின் ஒரு பகுதியாகத் திகழும் புதினம், அங்கதம் என்ற இரண்டு வகை இலக்கியங்கட்கும் புதுவது புனைந்தவராகத் திகழ்ந்தார். செயல் வீரர் என்ற முறையில்தான் இறவாப் புகழையும் இமயம் முதல் குமரிவரை உள்ள இந்து சமூகம் முழுவதின் நிலையான

நன்றியுணர்வுப் பட்டத்தையும் இவர் பெற்ருர். இன்று பெண்களுக்குச் சொத்துரிமைகள் கிடைத்துள்ளன என்பதற்கும், குழந்தை மணங்கள் மனித இனத்தின் பாவமாக இருப்பதுபோல் அவை சட்டத்தின் ஒரு குற்றமாக்கப்பெற்றுள்ளது என்பதற்கும், கைம்பெண் மறுமணங்கள் திறஞயும் அளவுக்கு மிகச் சாதாரணமாக நடப்பதற்கும், இந்து சமயத்தில் சட்டத்திற்குட்பட்ட திருமணங்கள் நடைபெறுவதற்கு முழுஉரிமை இருப்பதற்கும், சாதி இத்துறையில் ஆதிக்கஞ் செலுத்தாதிருப்பதற்கும், நாம் வீரேசலிங்கத்தின் இறவா நினைவாக மீப்புகழும் நன்றியும் கலந்த விளக்கை ஏற்றுவோம். நம்முடைய மக்களை, சிறப்பாகப் பெண்களை, வழிபாட்டுணர்வுடனும் பூசனை நினைவுடனும் கை கூப்பி வணங்குமாறு கேட்டுக்கொள்வோம்.

இந்தியாவில் இன்றைய நிலையில் சமூகத் திருமணங்கள், கலப்புத் திருமணங்கள், அரிசன மக்கள் திருக்கோயில்களில் நுழைதல், உணவு விடுதிகள் முதலியவற்றில் சமூக வேறுபாடு காட்டாமை போன்றவை குறித்துச் சட்டம் இயற்றப்பெற்றுள்ளது. அண்மையில் நிறைவேற்றப்பெற்ற சட்டங்கட்குப் பொருளுரைப்பதிலும், பெரிய சீர்திருத்தவாதிகளின் வாழ்க்கைக் குறிக்கோளை நிறைவேற்றுவதிலும் மக்கள் திரள்களினிடையே கருத்துகளைப் பரப்பும் முறையிலும் செயலாற்றும் பாங்கிலும் நாம் அதிகப் பங்கு கொள்ள வேண்டியுள்ளது.

கருத்துகளைப் பரப்பும் பணியிலும் நடைமுறையில் அவற்றைக் கொணரும் போக்கிலும் நம்மை நாம் உரிமையாக்கிக் கொண்டு வீரேசலிங்கத்திற்கு நம்முடைய பாராட்டுதலையும் நன்றியுணர்வையும் மெய்ப்பித்துக் கொள்வோமாக.

## பின்னிணைப்பு—3

## பயன்பட்ட நூல்கள்

## டாக்டர் சி, ஆர். ரெட்டியின் படைப்புகள்

### தெலுங்கு

1. **கவித்துவ தத்துவ விசாரமு** (கவிதையின் இயல்புபற்றிய திறஞய்வு) திறஞய்வு (1899)—ஆந்திரப் பல்கலைக் கழகம், 1941

2. **முசலம்ம மரணமு**—கவிதை (1899). ஆந்திர கிரந்தாலய அறக்கட்டளை நிலையம், படமாட்ட (கிருஷ்ணு மாவட்டம்)–(முதல் பதிப்பு 1940, இரண்டாம் பதிப்பு 1960).

3. **வியாச மஞ்சரி**—திறனாய்வுக் கட்டுரைகள்—(ஆந்திரப் பல்கலைக் கழகம், வால்ட்டயர்—1947)

4. **பாரத அர்த்த சாஸ்திரமு**—(இந்தியப் பொருளியல்) காளத்தி தம்மராவ் அண்டு சன்ஸ், இராசமகேந்திரபுரம். 1958.

5. **பஞ்சமி**—(கட்டுரைத் தொகுப்பு)—ஆந்திரப் பல்கலைக் கழகம், வால்ட்டயர்—1954.

**ஆங்கிலம்**

1. **காங்கிரஸ் இன் ஆபீஸ்**—(அரசியலமைப்பு பிரச்சினைகள் பற்றிய சொற்பொழிவுகள், மற்றைய வழிகளில் தந்தவை)—முஸ்லீம் வெளியீட்டகம், பறங்கிமலை சாலை, சென்னை-2 (1940)

2. **டாக்டர் சி. ஆர். ரெட்டி—எஸ்ஸேஸ் அண்ட் அட்ரெஸஸ்** பதிப்பு: டாக்டர் கே. ஆர். சீநிவாச அய்யங்கார், ஆந்திரப் பல்கலைக் கழகம், வால்ட்டயர் (1966)

3. **ஸ்பீச்சஸ் அண்ட் எஸ்ஸேஸ்**—(வேமனரைப்பற்றியும் பிற பொருள்கள்பற்றியும்) — நெல்லூர் புரோகிரஸிவ் யூனியன் எல். பி. ஹால் (டவுன்ஹால்), நெல்லூர்-1 (ஆ. மா)

4. **எஸ்ஸே ஆன் கைலாஸம்ஸ் ஏகலவ்யா — தி பர்ப்பஸ்** என்ற இதழில் டி. பி. கைலாசம் அவர்களால் வெளியிடப்பெற்றது. (பி. எஸ். இராம ராவ், ஜயநகர், பெங்களூர்-11. (முதல் பதிப்பு 1945, இரண்டாம் பதிப்பு 1966)

5. **ஃபோர்வோர்டு டு** கே. சுந்தரராகவன்ஸ் பையாகிரஃபி ஆப் பி. ஆனந்தாசார்லு—(தமிழ்)

6. **பிரிஃபேஸ் டு எம். என். ராய்ஸ் பிராக்மெண்டஸ் ஆப் எ பிரிஸனர்ஸ் டையரி.**

7. **டெமாக்ரஸி** (திரு. வி. எஸ். சீநிவாச சாஸ்திரி அவர்களின் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்), சென்னை 1949.

8. பல்கலைக் கழகச் சீர்திருத்தம்பற்றிய சொற்பொழிவுகள் (மைசூர்)

9. ஆர். டி. சி. பற்றிய கட்டுரைகளும் பிறபொருள்பற்றிய சொற்பொழிவுகளும் (1930-31).

## பிற நூல்கள்

### தெலுங்கு

1. **கவித்துவத் தத்துவ விசார விமர்சனமு** *(டாக்டர் சி. ஆர். ரெட்டியின் நூல்பற்றி கல்லூரி வியாசமூர்த்தி அவர்களால் எழுதப்பெற்ற ஆராய்ச்சிக் கட்டுரை)—வாவில்லா அச்சகம், சென்னை—1940.*
2. **உஷகிரணுலு** *(19-வது நூற்றாண்டு இலக்கியத்தைப்பற்றிய ஆய்வு) சத்திய நாராயணராவ் அவர்களால் எழுதப் பெற்றது. (உத்தம் சாகிதி, மாணிக்யபவன், இராமச்சந்திரபுரம், 1960)*
3. **ஆதுனிக ஆந்திர கவித்துவமு:** *இக்காலத் தெலுங்குக் கவிதையின் மரபும் சோதனையும்): டாக்டர் சி. நாராயண ரெட்டியால் எழுதப் பெற்றது (1962)*
4. **டாக்டர் சி. ஆர். ரெட்டி:** *ஜி. வேங்கட சுப்பையாவால் எழுதப் பெற்றது (தேசி கவிதா மண்டலி, விசயவாடை—2 1963)*
5. **தெலுங்குக் கலைக் களஞ்சியம்,** *தொகுதி-3 தெலுங்கு பாஷா சமிதி, சென்னை.*
6. **இன்புளுயன்ஸ ஆப் இங்கிலீஷ் ஆன் தெலுகு லிட்டரேச்சர்** *டாக்டர் கே. வீரபத்திர ராவ் எழுதியது (ஆசிரியரின் வெளியீடு 1960)*
7. **சித்தூர் மாவட்ட எழுத்தாளர் மாநாட்டு நினைவு மலர், 1968**
8. **நேனு - நவ்யாந்திரமு** *(தன் - வரலாறு): ஏ. காளேஸ்வர ராவ், விசயவாடை.*
9. **ஆந்திர ராசயிதலு** *(தெலுங்கு எழுத்தாளர்கள்): மதுன பந்துல சத்தியநாராயண சாஸ்திரி (1950)*

### ஆங்கிலம்

1. **ஸ்டடீஸ் இன் கலாபூர்ணோதயம்:** *டாக்டர் ஜி. வி. கிருட்டிண ராவ் (சாகிதி கேந்திரம், தெனாலி 1956)*
2. **ஹிஸ்டரி ஆப் தெலுங்கு லிட்டரேச்சர்:** *டாக்டர் ஜி. வி. சீதாபதி சாகித்திய அகாடெமி, புது தில்லி, 1968).*
3. **கான்டெம்போரரி இந்தியன் லிட்டரேச்சர்**—*ஒரு கருத்தரங்கு (சாகித்திய அக்காதமி, புது தில்லி, 1957)*
4. **லிட்டரேச்சர்ஸ் இன் தி மாடர்ன் இந்தியன் லாங்க்வேஜஸ்** — *(வெளியீட்டுப் பிரிவு 1957).*

5. **மாடர்ன் இந்தியன் லிட்டரேச்சர்ஸ்:** *பதிப்பாசிரியர்—டாக்டர் நாகேந்திரா.*

6. **மென் இன் தி லைம்லைட்:** *காசா சுப்பராவ் எழுதியது சென்னை, 1941)*

7. **ஸைட்லைட்ஸ்:** *'சகா' (காசா சுப்பராவ்) எழுதியது — (லாங்கவேஜ் பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1944).*

8. **மை போர்ட்ரெயிட் கேலரி:** கே. *ஈசுவரதத்தர் அவர்கள் எழுதியது (திரிவேணி பப்ளிசர்ஸ், மச்சிலிபட்டினம், 1957)*

9. **ஸ்ட்ரீட் ஆப் இங்க்:** *(தன் வரலாறு):* கே. *ஈசுவர தத்தர் எழுதியது (திரிவேணி வெளியீட்டாளர்கள், மச்சிலிப் பட்டினம், 1956)*

10. **ஸ்பார்கிஸ் அண்ட் ப்யூம்ஸ்:** கே. *ஈசுவர தத்தர் எழுதியது (ஆந்திரத் தலைவர்கள்பற்றிய சுருக்க உரைகள்) (சென்னை, 1929).*

## இந்திய இலக்கியச் சிற்பிகள்

### இந்த வரிசையில் இதுவரை தமிழில் வெளிவந்துள்ள நூல்கள்:

1. **லட்சுமிநாத பெஸ்பரூவா**—ஹேம்பரூவா
தமிழ்: க. த. திருநாவுக்கரசு
2. **கபீர்**—பிரபாகர் மாச்வே
தமிழ்: தி. வேங்கடகிருஷ்ணய்யங்கார்
3. **கேசவஸுதர்**—பிரபாகர் மாச்வே
தமிழ்: ராம கோபிநாதன்
4. **ஈசுவர் சந்திர வித்யாசாகர்**
—ஹிரண்மய் பானர்ஜி
தமிழ்: ராம கோபிநாதன்
5. **ராஜா ராம் மோகன் ராய்**—சௌ. தாகூர்
தமிழ்: க. த. திருநாவுக்கரசு
6. **பிரேம்சந்த்**—பிரகாஷ் சந்திர குப்தா
தமிழ்: சரஸ்வதி ராம்நாத்
7. **குமாரன் ஆசான்**—கே. எம். ஜார்ஜ்
தமிழ்: கே. சி. சங்கரநாராயணன்
8. **தாரு தத்**—பத்மினி ஸென்குப்தா
தமிழ்: அ. சீனிவாச ராகவன்
9. **வீரேசலிங்கம்**—வி. ஆர். நார்லா
தமிழ்: நா. பார்த்தசாரதி
10. **ஸ்ரீ அரவிந்தர்**—மனோஜ் தாஸ்
தமிழ்: பி. கோதண்டராமன்
11. **மீராபாய்**—உஷா நில்சன்
தமிழ்: எஸ். கந்தசாமி 'துறைவன்'
12. **வேமனர்**—வி. ஆர். நார்லா
தமிழ்: ந. சுப்பு ரெட்டியார்
13. **B. M. ஸ்ரீகண்டய்யா**
—ஏ. என். மூர்த்தி ராவ்
தமிழ்: இரா. மதிவாணன்
14. **சந்துமேனன்**—டி. ஸி. சங்கரமேனன்
தமிழ்: கு. இராஜவேலு
15. **பசவேஸ்வரர்**—எச். திப்பேருத்ரசுவாமி
தமிழ்: டி. கே. நாகாம்பாள்.
16. **சி. ஆர். ரெட்டி**—டி. ஆஞ்சனேயுலு
தமிழ்: ந. சுப்பு ரெட்டியார்
17. **தாராசங்கர் பந்தோபாத்யாயர்**
—மஹாஸ்வேதாதேவி
தமிழ்: கு. இராஜவேலு